விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Viber : 076 636 3378

# வலம்புரி

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk
Valampurii



கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே



சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஐப்பசி 23 வியாழக்கிழமை (09.11.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 325


## தமிழ் மக்களுக்கான அதிகாரபகிர்வை நாம் ஒருபோதும் எதிர்க்கவில்லை

### குமார வெல்கம தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையின் வடக்கு மக்களுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதற்கு தாம் ஒருபோதும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லையென, ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

இலங்கையின் புதிய அரசியல் யாப்பு தொடர்பான 23

## ஆறு அத்தியாவசிய பொருட்களின் இறக்குமதி வரி நள்ளிரவு குறைப்பு

(கொழும்பு)

இன்று நள்ளிரவு முதல் உடன் அமுலுக்கு வரும் வகையில் 6 அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

புதிய விலைக் குறைப்பிற்கு அமைவாக பருப்பு, கருவாடு, உருளைக்கிழங்கு, தேங்காய் எண்ணெய், மரக்கறி எண்ணெய் மற்றும் பெரிய வெங்காயம் ஆகிய பொருட்களின் விலைகளே இவ்வாறு குறைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, தேங்காய் 23

## "ஏக்கிய இராச்சிய" என்பது ஒற்றையாட்சியே

# அரசு தரும் அதிகாரங்கள் தமிழ் மக்களுக்கு போதாது

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்) சமஷ்டி அடிப்படையிலான அரசியலமைப்பே தமிழ் மக்களுக்கு போதியளவான அதிகாரங்களை வழங்கும் என்பதில் நாம் தெளிவாகவே உள்ளோம். ஆனால் ஏக்கிய இராச்சிய என்பது ஒற்றையாட்சியைத்தான் குறிக்கும், அரசு தற்போது முன்வைத்துள்ள அதிகாரங்கள் தமிழ் மக்களுக்கு போதாது என வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (23-ம் பக்கம் பார்க்க...)

### உள்ளூராட்சி தேர்தலில்
## த.வி.கூட்டணி தனித்துப் போட்டி

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி தனித்து போட்டி 23

## பட்ஜெட் இன்று சமர்ப்பிப்பு

(கொழும்பு)

கூட்டு அரசின் அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இன்று நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும். ஜனவரி 23

## பேருந்தின் மீது குண்டுத் தாக்குதல்
### குற்றத்துக்கு ஆயுள் தண்டனை

(கொழும்பு)

பிலியந்தலை பேருந்து தரிப்பிடத்தில் வைத்து பேருந்து 24

## பெற்றோல் பிரச்சினை இன்று தீர்ந்துவிடும்

(கொழும்பு)

இன்றைய தினம் அனைத்து பிரதேசத்தில் பெற்றோலுக்கான பிரச்சினை முழுமையாக நீங்கிவிடும் என்று அமைச்சரவை துணைப் பேச்சாளர் டாக்டர் 24

## இராமநாதபுரத்தில் கசிப்பு உற்பத்தி குடும்பப்பெண் கைது

(மல்லாவி)

கிளிநொச்சி,முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் 24

### மழை தொடரும்
## அவதானமாக இருக்க அறிவிக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

தொடரும் மழையுடனான காலநிலையால் யாழ். குடாநாட்டு மக்களை பாதுகாப்பாகவும், அவதானமாகவும் செயற்படுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலை திருநெல்வேலி வானிலை ஆய்வு நிலையப் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் 23

## மாற்று கருத்தை மறுத்ததாலேயே ஈ.பி.ஆர்.எல்.எவ் விலகிச் சென்றது

(யாழ்ப்பாணம்)

மாற்று கருத்துக்களை ஏற்றுக் கொள்ள மறுத்தமையால்தான் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தேர்தலில் தனித்து போட்டியிட போவதாக அறிவித்துள்ளது என சுட்டிக்காட்டிய வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், மாற்று கருத்துக்களுக்கு இடம் கொடுத்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் அலுவலகத்தில் வைத்து ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட வினாவிற்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் தேர்தல்களில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனித்து போட்டியிட 23

## மைத்திரி - ரணில் ஆட்சியிலும் சித்திரவதைகள் தொடர்கின்றன

### சர்வதேச ஊடகம் வெளிப்படுத்தல்

(கொழும்பு)

இலங்கையில் போர் முடிவுக்கு வந்து எட்டு ஆண்டுகளுக்குப் பின்னரும், தமிழர்கள் தாக்கி சித்திரவதை செய்யப்படுவதும், பாலியல் கொடுமைப்படுத்தப்படுவதும் தொடர்வதாக, சர்வதேச ஊடகமான அசோசியேட்டட் பிரஸ் செய்தி தெரிவித்துள்ளது.

ஐரோப்பாவில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள 50 இற்கும் அதிகமான இலங்கைத் தமிழ் ஆண்கள் தாம் தற்போதைய அரசின் காலத்தில் கடத்தப்பட்டு சித்திரவதைக்குட்படுத்தப்பட்டது தொடர்பான விவரங்களை அசோசியேட்டட் பிரசிடம் வெளிப்படுத்தியுள்ளனர்.

அவர்கள் ஒவ்வொரு 24

## இரணைமடு இராணுவ முகாம் அகற்றும் தீர்மானம் இல்லை

### ரொஷான் செனவிரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)


கிளிநொச்சி - இரணைமடு பகுதியிலுள்ள இராணுவ முகாமை அகற்றும் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என்று இராணுவம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அடுத்தடுத்த வலியுறுத்தலின் பேரில் இரணைமடு இராணுவ முகாம் அகற்றப்படுவதாக வெளியாகின்ற தகவல் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என்று இராணுவத்தின் ஊடகப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் ரொஷான் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவு 23

## யாழில் புதிய மலேரியா நுளம்பு பெருக்கம்; டெங்கு பாதிப்பும் இவ்வருடம் அதிகரிப்பு!

### பணிப்பாளர் நந்தகுமார் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலினால் 2016ஆம் ஆண்டு ஆயிரத்து 700 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 2017ஆம் ஆண்டு 4 ஆயிரத்து 700 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

புதிதாக மலேரியா நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளதுடன், கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதோடு, 23


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பெறுகை அறிவித்தல்

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

01.தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைகளுக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

02.பெறுகையானது அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் இக்ராட் பதிவுள்ளவராகவும், கறுப்புப்பட்டியலில் பெயரிடப்படாததும் பொ.நி.சு 04/2016(1) இற்கமைவாக வட மாகாணத்தில். தகுதியுடைய வியாபாரப்பதிவுகளைக் கொண்டுள்ளதுமான கேள்வியாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப் படுத்தப்பட்டுள்ளது.

03.தேவையான தகைமைகள் பெறுகை ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

04.ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் ஆங்கில மொழியில் மட்டும் உள்ள பெறுகை ஆவணங்களை கே.கே.எஸ்.வீதி சுன்னாகத்தில் அமைந்துள்ள வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் 09.11.2017 தொடக்கம் 22.11.2017ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் 14.00 மணி வரையான மீளளிக்கப்படாத பணமாக ரூபா.2000/- செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

05.பெறுகை ஆவணங்களினை இருபிரதிகளில் தயாரித்து 22.11.2017-ம் திகதி 2.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந் தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

06.பெறுகை தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 15.11.2017ஆம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.

07.கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்

| இல | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | இறைச்சிக்கடைகள் அமைத்தல்-மயிலங்காடு | 2.57 | 02 மாதம் | C8 | 26000.00 |
| 2 | சுன்னாகம் உப அலுவலக கடை அமைத்தல் | 2.17 | 02 மாதம் | C8 | 22000.00 |
| 3 | உள்ளக வீதி அமைத்தல்- ஈவினை, உசத்தியோடை இந்துமயானம் | 0.83 | 1½ மாதம் | C9 | 8000.00 |
| 4 | சுன்னாகம் மீன்சந்தை திருத்தம் | 0.88 | 1½ மாதம் | C9 | 8000.00 |
| 5 | கொடித்தம்பம் அமைத்தல் | 0.30 | 01 மாதம் | C9 | 3000.00 |

தவிசாளர்
பிரதேசசபை பெறுகைக்குழு
வலிகாமம் தெற்கு பிரதேசசபை
சுன்னாகம்.

(சி-335)

# நாடாளுமன்ற தேர்தலை கலப்பு முறையில் நடத்த வேண்டும்

## மகிந்த சமரசிங்க

(கொழும்பு)

உள்ளூராட்சி தேர்தலை போன்று எதிர் வரும் நாடாளுமன்றத் தேர்தலையும் கலப்பு முறையில் நடத்த வேண்டும் என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பு தொடர்பான வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை குறித்து அரசியலமைப்பு சபையில் நடைபெற்ற ஐந்தாவது நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர், "ஏக்கிய" (ஒற்றையாட்சி) என்ற சொற்பதம் அப்படியே இருக்க வேண்டும் என்றும் 19ஆவது அரசியலமைப்பு திருத்தத்துக்கு அப்பால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை மாற்ற முடியாது என்றும் சுதந்திரக் கட்சி என்ற வகையில் நாம் தெளிவான நிலைப்பாட்டில் இருந்து கூறியிருக்கிறோம்.

தேர்தல் முறைமை மாற்றத்தை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அறிமுகப்படுத்தி விட்டு அத்துடன் நின்று விட முடியாது.

அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னதாக நாடாளுமன்றத் தேர்தல் முறைமையும் கலப்பு முறைக்கு மாற்றப்பட வேண்டும்.

அதிகாரப் பகிர்வை நாம் ஆதரிக்கிறோம். எனினும், அதை செய்ய வேண்டும். எனினும், அதை 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் வரையறைக்கு உட்பட்டு செய்ய வேண்டும். அதற்கு அப்பால் சென்றால் அது சமஷ்டி அரசியலமைப்பாகிவிடும்.

13ஆவது அரசியலமைப்பு திருத்தத்துககு உட்பட்டே இன்னும் அதிகாரங்களை வழங்க முடியும். பொதுப் பட்டியலின் கீழ் இன்னும் விடயங்களை வழங்க முடியும். அரசிலமைப்புக்கு முரண் கிடையாது என்றால் நாம் அதை செய்ய முடியும் என தெரிவித்துள்ளார். (ம-4)

# நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்க முடியாது-ஹிஸ்புல்லா

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை இல்லாது ஒழிப்பதற்கு ஒரு போதும் அனுமதிக்க முடியாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் தெரிவித்துள்ளது.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறைமையின் ஊடாக சிறுபான்மை மக்களான முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என ஸ்ரீலங்கா மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்பின் இடைக்கால அறிக்கை மீதான விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

இதன்போது உரையாற்றிய மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா ஜனாதிபதி முறைமையை இல்லாது ஒழிக்க கூடாது என குறிப்பிட்டார்.

அதேவேளை கிழக்கு மாகாணத்தை வடக்கு மாகாணத்துடன் மீண்டும் இணைப்பதற்கு தாம் அனுமதிக்க போவதில்லை யெனவும் இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.(ம-4)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## விஷ்ணுநாதன் சுவிஸ்கரன்

### (சமாதான நீதவான்)



கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரியின் பழைய மாணவனும் கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரும் கரைச்சி தெற்கு ப.நோ. கூ.சங்க கிராமிய வங்கி முகாமையாளரும், லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழகச் செயலாளருமாகிய விஷ்ணுநாதன் சுவிஸ்கரன் 07.11.2017 அன்று கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதவான் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்திய பிரமாணம் செய்துள்ளார். இவருக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:-
லக்கிஸ்ரார் விளையாட்டு கழகமும்,
கிராம அபிவிருத்தி கழகமும், வட்டக்கச்சி.

(சி-333)

# கேள்வி அறிவித்தல்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அறிவியல்நகர் வளாகத்தில் அமைந்துள்ள தொழில்நுட்ப பீட உணவகத்தை நடாத்துவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அறிவியல்நகரில் அமைந்துள்ள பிரதிப்பதிவாளர் அலுவலகத்தில் 24.11.2017ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 03.00 மணிவரை பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பப் படிவங்களை பெற்றுக்கொள்வதற்கு மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா இரண்டாயிரமும் (2000/-) மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா ஐந்நூறும் (500/-) தனித்தனியாக மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கத்திற்கு (கணக்கு இலக்கம் 162-1001-60000-880), செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை கிளிநொச்சி அறிவியல்நகரில் அமைந்துள்ள பிரதிப்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 27.11.2017ஆம் திகதி பி.ப 03.00 மணிக்கு முன்னர் பிரதிப்பதிவாளர், பொது நிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், அறிவியல் நகர், கிளிநொச்சி என்ற முகவரிக்கு நேரடியாக ஒப்படைத்தல் வேண்டும். மேலும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தொழில்நுட்ப பீட உணவகத்திற்கான விண்ணப்பப் படிவம் என தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அறிவியல்நகரில் அமைந்துள்ள பிரதிப்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும். அலுவலக தொலைபேசி இலக்கம் 0212060180.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(சி-336)

## இலங்கை மத்திய வங்கியில் மோசடி

# யாரையும் இலக்குவைத்து ஆணைக்குழு அமைக்கவில்லை

## ஜனாதிபதி மைத்திரி தெளிவுபடுத்தல்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி மோசடி தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவை எவரையும் இலக்காகக் கொண்டு அமைக்கவில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிபீடம் ஏறுவதற்கு அடித்தளமிட்ட அமரர் மாதுளுவாவே சோபித தேரரின் நினைவை முன்னிட்டு கொழும்பு-பத்தரமுல்லை "எமது கிராமம்" பகுதியில் நினைவுத்தூபி ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நேற்று முற்பகல் வைபவ ரீதியாக நாட்டிவைக்கப்பட்டது.

இதன் பின்னர் உரையாற்றிய ஜனாதிபதி, நல்லாட்சியை அமைத்ததன் நோக்கம் எங்களது பைகளிற்குள் பணத்தை நிரப்பிக் கொள்வதற்காக அல்ல. மத்திய வங்கியில் இடம்பெற்ற மோசடி பற்றி முழு நாட்டு மக்களும் விரைவில் அறிவார்கள். அதற்கு பொறுப்பானர்கள் பொறுப்புக் கூறவும் வேண்டும் என்றும் எச்சரித்தார். (இ-7)

## பாலத்துடன் மோதி புதையுண்ட லொறி



பாரத்துடன் வந்த லொறியொன்று பாலத்துடன் மோதி புதையுண்டது. இச்சம்பவம் நேற்று முற்பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணம் குருசோ வீதியில் இடம்பெற்றது. (இ-10-105-107)

## நாடாளுமன்றுக்கு விசேட பாதுகாப்பு

(கொழும்பு)

"2018ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் நாடாளுமன்ற வளாகத்தின் பாதுகாப்பு வியாழக்கிழமையும் வெள்ளிக்கிழமையும் பலப்படுத்தப்படும் என சபாநாயகர் கருஜெயசூரிய அறிவித்தார்.

பொதுமக்கள் பார்வைக்கான பகுதி விசேட பிரதிநிதிகளுக்காக ஒதுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் சபாநாயகர் அறிவிப்பை நேற்று முன்தினம் விடுக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## 2018 பட்ஜெட்; இளைஞருக்கு இனிப்பாகும்

### –நிதியமைச்சர் மங்கள–

(கொழும்பு)

"2018ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம், இளைஞர்களுக்கு இனிப்பானதாக அமையும்" என நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். இணைய ஊடகவியலாளர்களுடனான கலந்துரையாடல், ஊடக அமைச்சின் கேட்போர் கூட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கொடும் பிடிக்குள் சிக்கியிருந்த ஊடகத்துறைக்கு, இப்போது அதிகமாகவே சுதந்திரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அந்தச் சுதந்திரத்தைச் சிலர் முறையாகப் பயன்படுத்துகின்றபோதிலும் பலர்அதனை இனவாதப் பரப்புரைக்கும் மதவாதத் தூண்டுதலுக்குமே பயன்படுத்துகின்றனர்.

"எந்தவிதமான எதிர்க் கருத்துக்களையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். அனைத்து விமர்சனங்களும் எம்மை வளப்படுத்த உதவும். ஆகையால் எதனையும் எதிர் கொள்ளத் தயாராகவே இருக்கிறோம்.

"சுதந்திரம் அடைந்ததன் பின், தெற்காசியாவின் வளம் மிக்க நாடாகத்திகழுமென எதிர்பார்க்கப்பட்ட இலங்கை, பின்னடைவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இதுபற்றி இளைஞர்கள் சிந்திக்க வேண்டும் நாட்டைஎவ்வாறுமுன்னேற்றலாம் என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும். அதை விடுத்து, இனவாதத்தைத் தூண்டிச் சண்டை பிடிப்பதிலும் மதச் சண்டைகளைத் தூண்டி விடுவதிலும் காலத்தைக் கடத்தக் கூடாது.

"பொருளாதார ரீதியில் இலங்கையை உயர்த்துவதே எமது இலக்கு. அதற்காக இளைஞர்கள் பாடுபட வேண்டும். அவர்களுக்கு உதவுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். நாளை சமர்ப்பிக்கவுள்ள வரவு - செலவுத் திட்டம், நாட்டு மக்கள் அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்குமென என்னால் உறுதிபடக் கூற முடியும். குறிப்பாக, இளைஞர்களுக்கு இனிப்பாக இருக்கும்" என்றும் தெரிவித்தார். (இ-7)



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் தோமஸ் செனன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தார். அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

# அரசியல் அமைப்பில் பௌத்த மதத்துக்கு '9 பிளஸ்' தேவையாம்

## ஒற்றைக்காலில் நிற்கிறார் ஓமல்பே தேரர்



(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியல் நிலவரங்கள் என்பன 'ஸ்தீரத் தன்மையை அடைந்ததன் பின்னரேயே அரசியல் யாப்பு மாற்றம் குறித்து கவனம் செலுத்த வேண்டும் என்பது எமது சங்க சம்மேளனத்தின் நிலைப்பாடு என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் முன்னாள் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

தற்பொழுதுள்ள அரசியல் யாப்பில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதா? என்பதுவே முக்கிய பிரச்சினை.

இருப்பினும், பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கவில்லை.

இதற்காக வேண்டி அரசியலமைப்பில் "9 பிளஸ்" முறையிலான மாற்றமொன்று அவசியம் எனவும் தேரர் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார். (இ-7)

# எரிபொருள் சேமிப்புக் களஞ்சியசாலைகளை மகிந்த அரசாங்கம் ஏன் நிர்மாணிக்கவில்லை

## ஐ.தே.க.எம்.பி.முஜிபுர் ரஹ்மான் கேள்வி

(கொழும்பு)

மகிந்த அரசாங்கத்தால் எரிபொருளை சேமித்து வைப்பதற்கான களஞ்சியசாலைகளை நிர்மாணிக்க முடியுமாக இருந்தும், ஏன் நிர்மாணிக்கவில்லை என்று ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அன்று தரம் குறைந்த எரிபொருளை கொண்டு வந்து விநியோகித்ததனால் வாகனங்கள் இடைநடுவில் இயங்காமல் நிற்கும் நிலை ஏற்பட்டது.

இந்தச் சம்பவங்கள் அன்று மூடி மறைக்கப்பட்டன. இப்போது அவ்வாறில்லை. தரம் குறைந்த எரிபொருளை நிராகரித்ததால் சற்று நெருக்கடி நிலை தோன்றியுள்ளது.

அதேபோல் எரிபொருளை களஞ்சியப்படுத்தி வைப்பதில் எமக்கு பிரச்சினை இருக்கின்றது. ஏன் கடந்த அரசாங்கத்தால் எரிபொருள் களஞ்சியசாலைகள் நிர்மாணிக்கப்படவில்லை. கடந்த காலத்தில் இதைவிட அதிகமான எரிபொருள் களஞ்சியசாலைகளை நிர்மாணிக்க முடியுமாக இருந்தது.

கிரிக்கெட் விளையாட முடியாத மைதானங்களையும், விமானங்கள் தரையிறங்காத விமான நிலையங்களையும், கப்பல் வராத துறைமுகங்களையும் கட்டிய கடந்த அரசாங்கம், நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்ற எரிபொருளை, களஞ்சியப்படுத்துவதற்கான தாங்கிகளை கட்டவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த அரசாங்கத்தில் சில குறைபாடுகள் இருந்தாலும், தீர்மானங்கள் மேற்கொள்வதில் தாமதம் இருந்தாலும் அனைத்து விடயங்களிலும் சரியான முறையொன்று கடைப்பிடிக்கப்படுகின்றது. என்ன விடயங்கள் இடம்பெற்றாலும் மறுநாள் ஊடகங்கள் ஊடாக அறிந்து கொள்ள முடிகின்றது என முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார். (இ-7)

## பெற்றோல் மறுப்பு;பொலிஸ் அதிகாரி தலையிட்டுத் தீர்வு

(கொழும்பு)

சிலாபம் பகுதியிலுள்ள முக்கிய எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் நேற்றுக் காலை சுமார் மூன்று மணித்தியாலங்கள் வரை பெற்றோல் விநியோகிக்கப்படவில்லை.

இதனையடுத்து, சிலாபம் பொலிஸ் மோட்டார் போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி தலையிட்டு பெற்றோலை விநியோகிக்க பரிந்துரைத்துள்ளார்.

இதேவேளை, குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் ஊழியர் எனக் கூறி, எரிபொருள் பெற வந்த நபரிடம் இருந்து, 5000 ரூபாவைப் பெற்ற ஒருவர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இவர் பணத்தை பெற்றுக் கொண்டு தப்பிச் செல்லும் காட்சிகள் அங்கிருந்த சி.சி.ரி.வி. பாதுகாப்புக் கமராவில் தெளிவாக பதிவாகியுள்ளன.

இந்நிலையில், இவரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளை சிலாபம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (இ-7)



## ரி20 தரவரிசை

# துடுப்பாட்டத்தில் ஹோலி பந்துவீச்சில் பும்ரா முதலிடம்



சர்வதேச 20 ஓவர் கிரிக்கெட் வீரர்களுக்கான தரவரிசையில் துடுப்பாட்டத்தில் இந்தியாவின் விராட் ஹோலியும் பந்துவீச்சில் பும்ராவும் முதலிடத்தை பிடித்துள்ளனர்.

இந்தியா வந்த நியூசிலாந்து கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட 20 ஓவர் தொடரில் விளையாடியது. மழையால் 8 ஓவர்களாக குறைக்கப்பட்ட நியூசிலாந்துக்கு எதிரான கடைசி 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்று தொடரையும் 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.


நியூசிலாந்துக்கு எதிரான ரி20 தொடரை இந்தியா 2-1 என்று கைப்பற்றியதையடுத்து ஐசிசி ரி20 துடுப்பாட்ட தரவரிசையில் அணித் தலைவர் விராட் ஹோலியும் பந்து வீச்சில் பும்ராவும் நம்பர் 1 நிலையில் உள்ளனர்.

அணித் தலைவர் விராட் ஹோலி 824 தரவரிசைப் புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். இரண்டாவது இடத்தில் அவுஸ்திரேலியாவின் ஆரோன் பிஞ்ச் 784 தரவரிசைப் புள்ளியுடன் உள்ளார். ஆரோன் பிஞ்சை விட 40 புள்ளிகள் அதிகம் பெற்று விராட் கோலி முதலிடத்தில் உள்ளார்.

பந்து வீச்சில் ஜஸ்பிரித் பும்ரா 724 தரவரிசைப் புள்ளிகளுடன் முதலிடம் வகிக்கிறார், இவருக்கு நெருக்கமாக பாகிஸ்தானின் இமாத் வாசிம் 719 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தில் உள்ளார்.

முதல்முறையாக முதல் 10 இடங்களுக்குள் வந்து உள்ள நியூசிலாந்து அணியின் இஷ் சோதி 656 புள்ளிகளுடன் 10ஆவது இடம்பிடித்து உள்ளார்.

# ஜோன்சன் காலத்து வேகப்பந்து கூட்டணியைவிட ஸ்ரார்க் தலைமையிலான கூட்டணி சிறந்தது



மிட்செல் ஸ்ரார்க், பட் கமின்ஸ், ஜோஷ் ஹேசில்வுட் அடங்கிய வேகப்பந்து கூட்டணி ஜோன்சன் தலைமையில் இங்கிலாந்தை 5-0 என்று வீழ்த்திய வேகப்பந்து கூட்டணியை விட மிகச் சிறந்தது என்று ஆஸியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ரியான் ஹரிஸ் தெரிவித்துள்ளார்.

2013-14 ஆஷஸ் தொடரில் மிட்செல் ஜோன்சன் தலைமை வகிக்க, பீற்றர் சிடில், ரயான் ஹாரிஸ் கூட்டணி இங்கிலாந்துக்கு 5-0 என்ற தோல்வியை அளித்தது. அத்தோடு மட்டுமல்லாமல் இங்கிலாந்து அணியே சீர்குலைந்து போனது. கெவின் பீட்டர்சன் அணியிலிருந்து நீக்கப்பட்டது, ஜொனதன் டிராட் பாதியிலேயே விலகியது என்று இங்கிலாந்து அணி முற்றிலும் சிதைந்தது.

இந்நிலையில் அந்த அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சை விட தற்போதைய மிட்செல் ஸ்ரார்க், பட் கமின்ஸ், ஹேசில்வுட் கூட்டணி சிறப்பாகத் திகழ்கிறது என்று ரயான் ஹரிஸ் தெரிவித்துள்ளார்.

ஆனால் ரயான் ஹரிஸ், பீற்றர் சிடில், மிட்செல் ஜோன்சன் உள்ளிட்டோர் அடங்கிய பழைய கூட்டணி 627 டெஸ்ட் விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளனர். அதிலும் ஆஷஸ் தொடரில் மட்டும் 75 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளது.

இந்நிலையில் ஹரிஸ் கூறியதாவது, "ஹேசில்வுட் என்னைவிட வேகமாக வீசக்கூடியவர், என் பந்துகளை விட அவரது பந்துகள் அதிகம் எழும்பும், கொஞ்சம் கூடுதலாக ஸ்விங் ஆகும். மிட்செல் ஸ்ரார்க், ஜோன்சன் செய்ததைச் செய்வார், கூடுதலாக வேகம் வீச பட் கமின்ஸ் உள்ளார்.

ஆனால் நாங்கள், பந்துவீச்சாளர்கள் ஒரு அணியாகத் திரண்டு பங்களிப்பு செய்தோம், திட்டமிட்டோம், அதுபோன்று இவர்களும் செய்ய வேண்டும்.

அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் இரண்டுமே துடுப்பாட்டத்தில் கொஞ்சம் செட்டில் ஆகாத அணியாக இருப்பதால் இரு அணிகளும் இந்த விஷயத்தில் நெருக்கமாக உள்ளன.

ஸ்ரோக்ஸ் இல்லாதது இங்கிலாந்துக்கு பெரிய பின்னடைவே, காரணம் அவரது எதிர்த்தாக்குதல் துடுப்பாட்ட பலன்கள் இங்கிலாந்துக்கு இல்லாமல் போயுள்ளது. இங்கிலாந்து அணியில் இது பெரிய ஓட்டையை ஏற்படுத்தியுள்ளது.

ரியான் ஹரிஸ்

ஸ்டோக்ஸ் இல்லாதது அவுஸ்திரேலியாவுக்கு மகிழ்ச்சியளிக்கும் ஆனாலும் பெரிய வீரருக்கு எதிராக ஆஷஸ் வெல்வதையும் ஆஸி அணி விரும்பும்" என்றார்.


யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி

**பகிரங்க ஏல விற்பனை**

எமது கல்லூரியில் பாவனைக்கு உதவாத சில பொருட்கள் எதிர்வரும் 13.11.2017 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும்.

(1266) அதிபர்



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

நீதி தேவதையின் வீரிய புத்திரர்
நெகிழ்வுப் போக்கற்ற நேர்மையாளர்
போலிப் புன்னகைகளில் மயங்கிடாத
பாரி இவர்
இவரால் மட்டும் முடியும் எங்கள் முல்லைக்கு
தேர் கொடுக்க...

08.11.2017இல் பிறந்தநாளைக் கொண்டாடிய எங்கள் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர்

உயர்திரு. **சி. நந்தகுமார்** அவர்களை

நெஞ்சார வாழ்த்தி நிற்கின்றோம்

யா/உடுத்துறை ம.வி
பழைய மாணவர் கல்விச் சமூகம்
ஜேர்மனி - பிரித்தானியா - பிரான்ஸ்

(C-334)


## பாக்., பயணம்: தீவுகள் இரத்து!



மேற்கிந்தியத் தீவுகளின் பாகிஸ்தான் பயணம் ரத்தாகும் எனத் தெரிகிறது.

கடந்த 2009இல் லாகூரில், இலங்கை வீரர்கள் மீது பயங்கரவாத தாக்குதல் நடந்தது. இதன் பின் இங்கு 8 ஆண்டுகள் சர்வதேச போட்டிகள் நடக்காமல் இருந்தன. சமீபத்தில் லாகூர் சென்ற இலங்கை அணி, ஒரு 'ரி20' போட்டியில் பங்கேற்றது. இதையடுத்து, மேற்கிந்தியத் தீவுகள் இம்மாத இறுதியில் பாகிஸ்தான் சென்று, மூன்று போட்டிகள் கொண்ட 'ரி20' தொடரில் பங்கேற்க இருந்தது.

ஆனால், லாகூரில் நிலவும் மோசமான வானிலை காரணமாக, இப்பயணம் தள்ளிப்போகும் எனத் தெரிகிறது. இதுகுறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் போர்டின் அதிகாரி ஒருவர் கூறுகையில்," இம்மாதம் மே.தீவுகள் அணி, இங்கு வர இருந்தது. ஆனால், லாகூரில் கடுமையான பனிப்பொழிவு உள்ளது. தவிர, வேறு சில காரணங்களுக்காகவும், மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பயணம் தள்ளிப்போகிறது," என்றார்.

## கொல்கத்தாவில் இலங்கை



இலங்கை அணி வீரர்கள் நேற்று கொல்கத்தா வந்தடைந்தனர்.

இந்தியா - இலங்கை அணிகள் தலா 3 டெஸ்ட், 5 ஒரு நாள், 'ரி20' போட்டிகள் கொண்ட தொடரில் மோத உள்ளன.

முதல் டெஸ்ட் வரும் 16இல் மேற்கு வங்க தலைநகர் கொல்கத்தாவில் நடக்க உள்ளது. இதற்கு முன், இந்தியா பிரசிடென்ட்ஸ் 'லெவின்' அணியுடன் இலங்கை அணி, இரண்டு நாள் கொண்ட பயிற்சி போட்டியில் (நவ. 11-12) மோதுகிறது.

இதற்கான, சண்டிமால் தலைமையிலான 15 வீரர்கள் கொண்ட இலங்கை அணி நேற்று கொல்கத்தா வந்தடைந்தது. நேற்று முழுவதும் வீரர்கள் அறையிலேயே ஓய்வு எடுத்தனர்.


பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி
**நாகேஸ்வரி சண்முகரத்தினம்**
(ஆரம்பப் பிரிவு பொறுப்பாசிரியர்)

எமது பாடசாலையில் கல்வி கற்பிக்கும் திருமதி நாகேஸ்வரி சண்முகரத்தினம் ஆசிரியை (ஆரம்பப்பிரிவு பொறுப்பாசிரியர்) அவர்கள் மாகாண நிலையில் 2017ஆம் ஆண்டுக்குரிய நல்லாசிரியர் (குரு பிரதீபா பிரபா) விருதினைப் பெற்றமைக்காக பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை,
பாடசாலைச் சமூகம்
(1264)

# அனிகா விஜேசூரியவுக்கு அச்சுறுத்தல்; கோதாகொட மீது நடவடிக்கை வேண்டும்

## சபாநாயகரிடம் ரவி கருணாநாயக்க கோரிக்கை

(கொழும்பு)

அனிகா விஜேசூரியவுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகக் கூறப்படும் விடயம் தொடர்பில் பொய்யான தகவல்கள் வெளியிடப்பட்டன எனவும் அதற்காக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் யசந்த கோதாகொட மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ரவி கருணாநாயக்க சபாநாயகர் கருஜெயசூரியவிடம் நேற்று முன்தினம் கோரினார்.



இக்குற்றச்சாட்டுகள் காரணமாக தன்னுடைய நாடாளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது என்றும் அதற்கு ஊடகங்கள் துணைபோயுள்ளன என்றும் அவர் குற்றம் சாட்டினார். சொகுசு வீட்டின் உரிமையாளரான அனிகா விஜே சூரியவுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலுக்கும் தனக்கும் எவ்விதச் சம்பந்தமும் கிடையாது என அவர் தெரிவித்தார்.

"அனிகா விஜேசூரியவின் சகோதரரான விக்டர் விஜேசூரியவால் பொலிஸிடம் முறைப்பாடு ஒன்று முன்வைக்கப்பட்டது. அம்முறைப்பாட்டின் பிரதியை பிணைமுறி ஆணைக்குழுவிடம் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் யசந்த கோதாகொட ஒக்டோபர் 7 ஆம் திகதி சமர்ப்பித்தார்.

ஆனால், நெத்திகுமார என்பவர் என்னுடைய உறவினர் அல்லர். அவர் என்னுடைய உறவினர் என மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் யசந்த கோதாகொட உறுதிப்படுத்துவாராயின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வதற்குத் தயாராக உள்ளேன்.

"அவ்வாறு உறுதிப்படுத்தத் தவறும் பட்சத்தில் அவர் பிணை முறி தொடர்பாக விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக் குழுவில் மன்னிப்புக் கோர வேண்டும்" என்று அவர் கூறினார். (இ-7)

# ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்.

## முருகுப்பிள்ளை இராமசாமி



பிறப்பு 1938 - 03 - 13

இறப்பு 2016 - 10 - 21

இன்று 09.11.2017 வியாழக்கிழமை அன்னாரின் ஊரிக்காடு, தொண்டைமானாறு இல்லத்தில் முதலாம் ஆண்டு நினைவுநாள் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இந் நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு தொடர்ந்து மதியம் 12 மணியளவில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிரந்தர முகவரி: தாளையடி, மயிலிட்டி

தற்காலிக முகவரி: ஊரிக்காடு, தொண்டைமானாறு

குடும்பத்தினர்.

: 077 374 6229

இ-318

# நினைவின் மடியில் இரண்டாம் ஆண்டு



எம் தோற்றச் சுடரொளியாய் 1933 - 02 - 28

சொல்லாத நுண் உணர்வாய் 2015 - 11 - 09

மூதறிஞர். சி.சிவசரவணபவன் (சிற்பி)

(ஆசிரியர் "கலைச்செல்வி" இளைப்பாறிய அதிபர்)

வாழும் இலக்கியங்கள் வைத்தெமக்குத்தான் இறைவன்
தாளடைந்தான் நாம் நலிக்கச்சென்று

(1257)

வைத்தியகலாநிதிசுப்பிரமணியம் வீதி, கந்தரோடை, சுன்னாகம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# இராசி பலன்

09.11.2017

ஐப்பசி 23, வியாழக்கிழமை

சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு

சஷ்டி முன்னிரவு 10.34 மணிவரை

புனர்பூசம் முன்னிரவு 7.34 மணிவரை

சுபநேரம் 7.35-09.05 மணிவரை

இராகுகாலம் 1.35-3.05 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>கேட்டை, மூலம்<br>மதியம்-1.45 மணிக்கு<br>கடக-சந் | | ராகு |
| கேது | | | |
| | சனி, புத | சூரி, சுக், குரு | செவ் |

**மேடம்:** பெற்றோரின் ஆதரவால் பெருமை கூடும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**இடபம்:** உடல் நலனில் கொஞ்சம் அக்கறை தேவை, தன்னம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்றுவீர்கள், சுபநிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மிதுனம்:** செல்வாக்கை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், கற்பனை மிகுதியான நாள், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், போசன சுகமுண்டு.

**கடகம்:** எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக நடைபெறலாம், பயணத்தால் பலன் கிடைக்கும், கொடுக்கல்- வாங்கல்களில் கவனம் தேவை.

**சிம்மம்:** தொழில் நலன் கருதி முயற்சிகள் கைகூடும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், மாலை நேரம் மகிழ்ச்சி தரும் பயணமொன்று ஏற்படலாம்.

**கன்னி:** செல்வ நிலை உயரும் நாள், தொலை தூர பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, இளைய சகோதர வழியில் இனிய சம்பவமொன்று இடம்பெறலாம்.

**துலாம்:** தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், பித்தசம்பந்தமான ரோக பயமுண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்:** காலையில் சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**தனுசு:** காலையில் கலகலப்பும், மாலையில் சலசலப்புமாக அமையலாம், உங்கள் செயற்பாடுகளில் பிறர் குறைகண்டு கூறலாம், வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள்.

**மகரம்:** தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதற்கான வாய்ப்புண்டு, நட்பு வட்டம் விரிவடையும் நாள், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும்.

**கும்பம்:** உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், ஆரோக்கியம் சீராகும், செய் தொழிலில் சிறப்புகள் கிடைக்கும், கடன் பிரச்சினைகள் குறையும்.

**மீனம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும், பிள்ளைகளால் பெருமைகள் காண்பீர்கள்.

# யாழ்.கொய்யாத் தோட்டம் பகுதியில் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்தது





(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் கடந்த சிலநாட்களாக தொடர்ச்சியாக பெய்து வரும் அடை மழையினால் யாழ்.கொய்யாத் தோட்டம் பகுதியிலுள்ள பாற்குளம் நிரம்பி அயலில் உள்ள வீடுகளுக்குள் வெள்ளம் சென்று தேங்கியுள்ளது.

இதனால் அப்பகுதி மக்கள் பெரும் துன்பத்தை எதிர் கொண்டுள்ளதாகவும் வெள்ளத்தை வெளியேற்ற நடவடிக்கையெடுக்குமாறு யாழ். மாநகரசபைக்கு அப்பகுதி மக்கள் நேற்று மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

கடந்த சில நாட்கள் தொடர்சியாக பெய்த மழை காரணமாக மேற்குறித்த குளத்தின் கட்டுக்கு மேலால் வெள்ளம் பாய்ந்ததால் அயலில் உள்ள வீடுகள் வெள்ளத்தில் மூழ்கி காணப்படுகின்றன. வெள்ளம் வீடுகளுக்குள் சென்தால் குழந்தைகளும் முதியவர்களும் இன்னல்களை சந்தித்து வருகின்றனர்.

மேலும் வாந்திபேதி, வயிற்றோட்டம் மற்றும் டெங்கு போன்ற நோய்களும் பரவக் கூடிய சூழ்நிலை காணப்படுவதாகவும், இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கையெடுத்து வெள்ளத்தை வெளியேற்ற வேண்டும் அல்லது மாற்றுஏற்பாடுகள்மேற்கொள்ள வேண்டும் என அப்பகுதி மக்கள்கோரிக்கைவிடுத்துள்ளனர்.

மேலும் வெள்ளத் தினால் எற்பட்ட பாதிப்புக்கள் குறித்து யாழ்.மாநகர சபைக்கு சம்பந்தபட்ட ஊர் மக்களின் கையெழுத்து அடங்கியமகஜர்ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ-4-9-7)




வை.எம்.சி.ஏ.நிறுவனத்தின் ஏற்பாட்டில் நாவாந்துறை கலைவாணி முன்பள்ளி, அரியாலை காந்தி முன்பள்ளி மற்றும் அரியாலை சென்.யூதா முன்பள்ளிகளின் ஆசிரியர் மற்றும் மாணவர்களைக் கௌரவிக்கும் ஆசிரியர், சிறுவர் தின நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றபோது...

## மூத்த கலைஞர்களை கௌரவிக்கும் செயற்றிட்டம் யாழில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பிரதேச ரீதியாக மூத்த கலைஞர்களை கௌரவிக்கும் செயற்றிட்டம் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த வருடம் யாழ் மாவட்டத்தில் 150 மூத்த கலைஞர்கள் கௌரவிக்கப் படவுள்ளனர்.

இலங்கையின் கலைத் துறையின் போக்கு மற்றும் முன்னேற்றத்துக்காக தமது வாழ்நாள் முழுவதும் பங்களிப்பினை வழங்கிய மூத்த கலைஞர்களின் சுக துக்கங்களை விசாரிப்பதற்காக கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கலைஞர்கள் (சுவதம்) நலம் விசாரித்தல் என்ற பெயரில் செயற்றிட்டம் ஒன்று அமுலாக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரவிலும் உள்ள கலாசார விடயப்பொறுப்பு அலுவலர்களால் தமது பிரிவில் உள்ள, கலாசாரத்திற்கும் கலை மேம்பாட்டுக்கும் அற்பணிப்புடன் பணி புரிந்த வயது மூத்த 10 கலைஞர்களை தெரிவு செய்து அவர்களது வீடுகளுக்கு சென்று அவர்களது சுகநலத்தினை விசாரித்து அவர்களுடன் சினேக பூர்வமாக உரையாடலில் ஈடுபடுவதன் ஊடாக அவர்களால் தேசிய கலை மேம்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ள பங்களிப்புக்கு நன்றி செலுத்துவது இத் திட்டத்தின் நோக்கமாகும். ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் இத்திட்டம் செயற்படுத்தப்படும்.

ஒவ்வொருபிரதேசசெயலக பிரிவிலும் உள்ள 10 கலைஞர்கள் வீதம், யாழ் மாவட்டத்தில் 15 பிரதேச செயலகங்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் கலைஞர்களுக்கு வழங்கப்படும் மதிப்பளிப்பு சான்று தழ்களும் தற்போது பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ-9)

## கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க கணக்காய்வுகள் மீள ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் 1/1/1995 தொடக்கம் 31/10/2010 வரையிலான கணக்குகள் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை மற்றும் இயற்கை அனர்த்தங்களால் அழிவடைந்துள்ளமையால் சங்கத்தின் கணக்காய்வுகள் மீள நடைபெறுகிறது.

எனவே 1995 தொடக்கம் 2010 வரையிலான காலப் பகுதியில் சங்கத்தில் அங்கம் வகித்த உறுப்பினர்கள் மற்றும் சங்கத்திற்கு அனுசரணையாளராக இருந்த நிறுவனங்களும் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் சங்கத்துடன் தொடர்பு கொண்டு சங்கக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான தகவல்களை தந்துதவுமாறு பொலிகண்டி மேற்கு கூட்டுறவுச் சங்க செயலாளர் க.கஜேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-10)



## திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு

(குரணவாய்)

நெல்லியடி நகரப் பகுதி பேருந்து நிலையத்தில் தொடர்ந்து திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுவருவதால்பொது மக்களை அவதானமாக இருக்குமாறு நெல்லியடி பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை நெல்லியடி பேருந்து நிலையத்தில்நிறுத்தி விட்டுச் சென்ற பெண் ணொருவரின் துவிச்சக்கர வண்டிதிருடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-10-60)

## கந்தபுராணம் வாராந்த விளக்கவுரை

(யாழ்ப்பாணம்)

யாழ். சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யாவினால் கந்தபுராணம் வாராந்த விளக்கவுரை பிரதி வெள்ளிக் கிழமைகளில் மாலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை, இல. 700, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள ஞானவேல் ஆச்சிரமத்தில் இடம்பெறுகின்றது. இதில் நாளை வெள்ளிக்கிழமை 10/11/2017 "முருகப் பெருமானின் படையணியின் தோற்றம்" என்ற தலைப்பில் விரிவுரை நடைபெறும். (இ-7)

## மாதாந்த திரையிடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொது நூலக வாசகர் வட்டத்தின் மாதாந்தத் திரையிடலில் லெனின் எம். சிவம் நெறியாள்கையில் கனடாவில் உருவாக்கப்பட்ட ஈழத்தின் மூத்த ஓவியர்களின் ஒருவரான மு.கனக சபை வரலாற்றைக் கூறும் தூரிகை திரைப்படம் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்க யாழ். பொது சன நூலகக் கேட்போர் கூடத்தில் திரையிடப்படும். (இ-10)

### 50 வருடங்களாக கவனிப்பாரின்றி உள்ள

# மத்தொனி மதவடி வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி மத்தொனி ஜே/366 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட மதவடி வீதி கடந்த 50 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாக காணப்படுவதால் இவ் வீதியால் பயணம் செய்யும் பொது மக்கள் பெரும் அசௌகரியங்களுக்குட்படுவதாக பிரதேச மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.


தற்போது குடா நாட்டில் பெய்து வரும் கடும் மழையால் இவ் வீதியில் மழை நீர் தேங்கி நிற்கின்றது. இதனால் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் இவ் வீதியால் பயணம் செய்ய முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது.



கடந்த சில தினங்களாக மழைநீர் தேங்கி நிற்பதால் சுகாதாரச் சீர்கேடும் தொற்று நோய் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

இவ் வீதித் திருத்தம் தொடர்பில் சம்மந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குபலமுறை கொண்டுசெல்லப்பட்ட போதும் இதுவரை உரிய நடவடிக்கையெடுக்கப்படவில்லையென பிரதேச மக்கள் கவலை யுடன் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த வீதிப் புனரமைப்புத் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் உரிய நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-23)



## கலாசாரப் பெருவிழா நாளை

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு பிரதேச கலாசாரப் பேரவையில் பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் கலாசாரப் பெருவிழா நாளை 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் மானிப்பாய்பிரதேச சபைமண்டபத்தில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் , சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி .அபிராமி பாலமுரளி, மானிப்பாய் பிர தேசசபை செயலாளர் கு.சற் குணராஜா, கௌரவ விருந்தினர்களாக பிரதேச கலைஞர்கள் நவாலியூர் கலாபூஷணம் க.நடேசன், திருமதி.லீலாம்பிகை செல்வராசா ஆகியோர். கலந்து கொள்வர். (இ- 7)

## மாணவ தாதியர் பயிற்சிக்கு இணைக்க அழைப்பு கடிதங்கள்

(யாழ்ப்பாணம்)

11.08.2017 ஆம் திகதிய வர்த்தமானிப் பத்திரிகையில் கோரப்பட்ட மாணவத் தாதிய ஆட்சேர்ப்பு 2017 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பத்திற்கான நேர்முகப் பரீட்சைகள் கடந்த 04.11.2017 மற்றும் 05.11.2017 ஆகிய இருதினங்களில் யாழ்ப்பாணம் தாதியக் கல்லூரியில் நடைபெற்றது.

நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் தாமதமாக கிடைக்கப்பெற்று நேர்முகப்பரீட்சைக்கு தோற்ற முடியதாவர்கள் தமது விபரங்களை உடனடியாக யாழ். தாதியக் கல்லூரி அதிபரிடம் வழங்கினால் பிறிதோர் தினத்தில் நேர்முகப் பரீட்சைக்கான ஒழுங்குகளை செய்து தரமுடியும் என்பதனை தெரிவித்தக் கொள்கிறேன்.

மேற்படி ஆட்சேர்ப்புக்கான நேர்முகப்பரீட்சைக் கடிதம் கிடைக்கப் பெறாதவர்கள் தாங்கள் விண்ணப்பித்தமைக்குரிய அத்தாட்சிகளுடன் நேரில் தொடர்பு கொள்ள முடியும்.

தொடர்பு இலக்கம் அதிபர் அலுவலகம் 021 222 2736,அதிபர் கைத்தொலைபேசி 077 711 3862 என்னும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் ரி.சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார். (இ)

# 'வாருங்கள் இணைந்து போட்டியிடுவோம்'

## சு.க. உறுப்பினர்களுக்கு நாமல் அழைப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலின் போது ஒன்றிணைந்த எதிரணியுடன் இணைந்து போட்டியிடுவதற்கு வருமாறு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

அத்துடன் "ஜனவரியில் தேர்தல் நடைபெறுமென அரசாங்கம் அறிவித்துள்ளது. எனினும், அத்தேர்தல் ஜனவரியில் நடக்குமா? என்பது எங்களுக்குச் சந்தேகமாகவே இருக்கின்றது" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"தேர்தலுக்குச் செல்வது தற்போது உசிதமானதல்ல என நினைக்கும் அரசாங்கம், மூன்றாம் தரப்பின் ஊடாக வழக்குத்தாக்கல் செய்து தேர்தலை ஒத்திப் போடுவதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளதாக அறியமுடிகின்றது" என்றும் அவர் தெரிவித்தார்.

"எது எவ்வாறிருப்பினும், ஒன்றிணைந்த எதிரணியானது, அடுத்த பொதுத்தேர்தலில் பொதுஜன முன்னணியுடன் இணைந்து போட்டியிடுவதற்கு கலந்துரையாடிக் கொண்டிருக்கின்றது. ஆகையால், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் எம்முடன் இணைந்து போட்டியிடலாம். அதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்" என அவர் மேலும் அழைப்பு விடுத்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார். (இ-7)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## அறிவித்தல்

### 33வது பொதுப்பட்டமளிப்பு வைபவம் (பகுதி-I)-2017

18.11.2017 அன்று நடைபெற இருந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொதுப்பட்டமளிப்பு வைபவம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டு மீண்டும் எதிர்வரும் 08.12.2017(வெள்ளிக்கிழமை) அன்று நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதுடன் மேற்படி பட்டமளிப்பு விழாவில் பட்டங்கள் பெறத் தகுதி உடையவர்கள், நமது வேண்டுகோள்களை 17.11.2017 (வெள்ளிக்கிழமை)க்கு முன்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனுமதிகள் கிளையில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப்பதக்கம் மற்றும் பேராசிரியர் கந்தையா குணரட்ணம் தங்கப்பதக்கம் ஆகியவற்றிற்கு தகுதியான பட்டாதாரிகளை தெரிவு செய்வதற்கான விண்ணப்பமுடிவுத்திகதி 20.11.2017(திங்கட்கிழமை) வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனையும் அறியத்தருகின்றேன். (சி-331)

08.11.2017 -பதிவாளர்-


# 100 வயதைத் தாண்டிய 350 பேர் இலங்கையில்

## அமைச்சர் கயந்த தகவல்

(கொழும்பு)

100 வயதைத் தாண்டிய 350 பேர் இலங்கையில் வாழ்ந்து வருவதாக அமைச்சரவை இணைப் பேச்சாளர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் நேற்று முன்தினம் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் நூறு வயதைக் கடந்த 350 பேர் வாழ்கின்றனர்.

100 வயதைக் கடந்த முதியோருக்கு 5000 ரூபா கொடுப்பனவு ஒன்று மாதாந்தம் வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பிலான அமைச்சரவைப் பத்திரமொன்றை சமூக வலுவூட்டல் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார்.

இந்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார். (இ-7)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்


செல்வி.கி.விஜிதா (குருபிரதீபா பிரபா)


திருமதி. கௌ.காந்தரூபன் (குரு பிரதீபா பிரபா)


திரு.சுயேந்திரன் (பிரதீபா பிரபா)


திரு.தயாளன் (குருபிரதீபாபிரபா)


செல்வி.கு.சுபாசினி (குரு பிரதீபா பிரபா)

2017 ஆம் ஆண்டிற்கான நல்லாசிரியர் விருதுகளை பெற்றுக்கொண்ட எமது ஆசிரியர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*Congratulations*

யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, ஆசிரியர் நலன்புரிச் சங்கம்


# எரிபொருள் தட்டுப்பாடு குறித்து பிரதமர் ரணிலுக்கு சந்தேகம்

## அறிக்கை கோரியுள்ளாராம்

(கொழும்பு)



நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு தொடர்பில் பலத்த சந்தேகம் ஏற்பட்டுள்ளது. எனவே, இது தொடர்பில் உண்மையைக் கண்டறிவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் விசேட அறிக்கையொன்றை பெற்றுத் தருமாறு கோரியுள்ளார்.

இந்த அறிக்கை கிடைத்த பின்னர் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# த.தே.கூ.எம்.பிக்களுக்கும் இரட்டைக் குடியுரிமை உண்டு

## கூட்டு எதிரணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

அதிகளவான பாராளுமன்ற உறுப்பினர்கள் இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் என கூட்டு எதிர்க்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

கீதா குமாரசிங்கவைத் தவிர்ந்த வேறு சிலரும் இரட்டைக் குடியுரிமையைக் கொண்டவர்கள் எனத் தெரிவித்துள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிசிர ஜயகொடி இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். கனடா, அவுஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் இவர்களுக்கு இரட்டைக் குடியுரிமை காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இரட்டைக் குடியுரிமை உண்டு என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இவ்வாறு இரட்டைக் குடியுரிமை உடைய பாராளுமன்ற உறுப்பினர்கள் பற்றிய விபரங்களைத் திரட்ட வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும் என அவர் தெரிவித்தார். கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா:17 செவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BSc/தனியார் தொழில்<br>தொ.இ: B/7931 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: செவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:AAT<br>தொ.இ: G/7990 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 15<br>தகைமை/தொழில்:BSc/தனியார் தொழில்<br>தொ.இ: B/7933 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:பட்டதாரி/ ஜேர்மன் குடியுரிமை<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/7994 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: செவ் 8 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:பொறியியலாளர்<br>லண்டன் குடியுரிமை<br>தொ.இ: B/7936 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 15<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/7998 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L/ஜேர்மன் NCT PR<br>தொ.இ: B/7938 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 44<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: G/7999 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# தம் உயிரை ஆகுதியாக்கிய விடுதலை வீரர்களின் புனித நிகழ்விற்கு தயாராகுவோம்

## கிளிநொச்சி மாவட்ட மாவீரர் பணிக்குழு செயலாளர் அழைப்பு

(கண்டாவளை)

ஈழ விடுதலைக்காக தம் உயிரை ஆகுதியாக்கிய விடுதலை வீரர்களின் புனித நிகழ்வை அனுஷ்டிக்க அனைவரையும் தயாராகுமாறு கிளிநொச்சி மாவட்ட மாவீரர் பணிக்குழுவின் செயலாளர் குமாரசிங்கம் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், எட்டு ஆண்டுகளின் பின்னர் எங்கள் புனிதர்களுக்கு விளக்கேற்றி வணங்கும் நிகழ்வினை நடத்துவதற்கு கடந்தாண்டு சாதகமான சூழல் கிடைத்து கிளிநொச்சி கனகபுரம் மற்றும் முழுங்காவில் மாவீரர் துயிலும் இல்லங்களில் மக்களின் பெரும் பங்களிப்புடனும் துயிலும் இல்லங்களில் துப்புரவுப் பணிகளை மேற்கொண்டு புனிதர்களுக்கு விளக்கேற்றினோம். அது போன்று இம்முறையும் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள விசுவமடு, தேராவில், கிளிநொச்சி, கனகபுரம் மற்றும் முழுங்காவில் மாவீரர் துயிலும் இல்லங்களில் புனிதர்களுக்கு விளக்கேற்ற தயாராகவுள்ளோம். இதற்கு அனைவரையும் தயாராகுமாறு வேண்டுகைவிடுத்துள்ளார்.

மேற்படி இத்துயிலும் இல்லங்களின் துப்புரவுப் பணிகளுக்கும் அபிவிருத்திப் பணிகளுக்கும் மக்கள் அனைவரையும் கைகொடுக்குமாறு அவர் கேட்டுள்ளார். குறிப்பாக சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் மூன்று மாவீரர் துயிலும் இல்லங்களின் துப்புரவுப்பணிகளை முழுநாளும் மேற்கொள்வதோடு ஏனைய நாட்களிலும் உங்களால் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள முடியுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2-315)

# 10 கிலோ 430 கிராம் கஞ்சாவுடன் வெவ்வேறு இடங்களில் ஐவர் கைது

## வவுனியாவில் சம்பவங்கள்

(குருமன்காடு)

வவுனியா நகரின் பல வேறு பகுதிகளில் கேரள கஞ்சாவுடன் ஐவர் வவுனியா மதுஒழிப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடம் இருந்து 10 கிலோ 430 கிராம் கேரள கஞ்சாவும்கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வவுனியா நகரப்பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய நபர்களை சோதனை செய்த போது கேரளக் கஞ்சாவுடன் ஐந்து பேர் வேறு வேறு பகுதிகளில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். கிளிநொச்சியிலிருந்து புத்தளம் நோக்கி பேருந்தில் கொண்டு செல்லப்பட்ட நிலையில் வவுனியா பேருந்து நிலையத்தில் வைத்து ஒரு கிலோ 910 கிராம் கேரளக் கஞ்சாவுடன் புத்தளம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும், யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலைக்கு கொண்டு சென்ற நிலையில் வவுனியா நகரப் பகுதியில் வைத்து 2 கிலோ 70 கிராம் கஞ்சாவுடன் திருகோணமலை இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் பிற்பகல் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியில் இருந்து மதவாச்சிக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் வவுனியா பேருந்து நிலையத்தில் வைத்து மதவாச்சியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் 2 கிலோ 150 கிராம் கேரளக் கஞ்சாவுடன் நேற்றுக்காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், கிளிநொச்சியில் இருந்து அநுராதபுரம் கொண்டுசெல்லப்பட்ட நிலையில் வவுனியா பேருந்து நிலையத்தில் வைத்து 2 கிலோ 200 கிராம் கேரளக் கஞ்சாவுடன் கிளிநொச்சி இளைஞர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

மற்றொரு நபர் கிளிநொச்சியில் இருந்து மிகிந்தலைக்கு கேரளக் கஞ்சாவை கொண்டு சென்ற நிலையில் வவுனியா நகரப் பகுதியில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டார். புல்மோட்டையைச் சேர்ந்த குறித்த நபரிடம் இருந்து 2 கிலோ 100 கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வழிகாட்டலில், எஸ்.ஐ. சுப சிங்க உட்பட பொலிஸ் சார்ஜன்ட்கள், பொலிஸ் கான்ஸ்டபிள்கள் ஆகியோர் அடங்கிய பொலிஸ் குழுவினரே குறித்த நபர்களை கைது செய்தனர்.

கைதானோரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் வவுனியா மது ஒழிப்புப் பிரிவு பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (2-250)

# உரமானியத்திற்கான கொடுப்பனவுகள் முதற்கட்டமாக ஆயிரத்து 561 பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றன

## துணுக்காய் கமநலசேவை நிலையத் தகவல்படி

(கண்டாவளை)

துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கீழ் இவ்வாண்டில் காலபோக நெற்செய்கை மேற்கொண்டுள்ள ஆயிரத்து 561 பயனாளிகளுக்கு முதற்கட்டமாக உரமானியத்திற்கான கொடுப்பனவுகள்வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கமநல சேவை நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள கோட்டைகட்டியகுளம், அம்பலபெருமாள்குளம், தென்னியகுளம், ஐயன்கன்குளம், பழைய முறிகண்டிக் குளம், தேறாங்கண்டல்குளம், மல்லாவிக்குளம் உள்ளிட்ட குளங்களின் கீழும் ஏனைய சிறிய, நடுத்தரக்குளங்கள், மானிய பயிர்ச்செய்கை நிலங்கள் ஆகியவற்றின் கீழ் இவ்வாண்டும் வழமை போன்று காலபோக பயிர்ச் செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு வருடாந்தம் ஏழாயிரம் ஏக்கர் வரையிலான செய்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

இவ்வாறு காலபோகச் செய்கைக்கான உரமானியத்திற்கான கொடுப்பனவுகள் தொடர்பில் கமநல சேவை நிலையத்துடன் தொடர்புகொண்டு வினவிய போது, காலபோக செய்கை மேற்கொண்டுள்ள விவசாயிகளுக்கான உரமானியத்திற்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்டமாக 4 ஆயிரத்து 935.25 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை மேற் கொண்டுள்ள ஆயிரத்து 561 பயனாளிகளுக்கு கொடுப் பனவுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் வழங் கப்பட்டு வருகின்றன.


இதில் இரண்டாவது கட்டாக இரண்டாயிரத்து 104 ஏக்கர் நிலப் பிரப்பில் பயிர்செய்கை மேற்கொண்டுள்ள 799 பயனாளிகளுக்கு கொடுப்பனவுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் கமநலசேவை நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)






கிளிநொச்சி வன்னேரிக்குளம் சிவயோக சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லத்தின் விவசாயப் பணிகளின் தேவை கருதி, 15 இலட்சம் ரூபா பெறுமதியான உழவு இயந்திரத்தை சந்நிதியான் ஆச்சிரமத்தினர் இல்ல நிர்வாகிகளிடம் கடந்த மாதம் 29 ஆம் திகதி வழங்கியதைப் படத்தில் காணலாம்.

# மாவீரர் துயிலும் இல்லம் சிரமதானப் பணி மூலம் துப்புரவு



(கண்டாவளை)

மன்னார், மடு, பெரிய பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லத்தில் கார்த்திகை 27 ஆம் திகதி நடைபெறவுள்ள மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுக்கான சிரமதானப் பணிகள் ஏற்பாட்டுக் குழுவினரால் ஏற்பாடு செய்த நிலையில் நேற்று முன்தினம் மாவீரர்களின் குடும்பங்கள், முன்னாள் போராளிகள், பொதுமக்கள் என அனைவரும் கலந்து கொண்டு சிரமதானப் பணியை முன்னெடுத்திருந்தனர்.

தொடர்ந்து நடைபெறவிருக்கும் சிரமதானப் பணியிலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் நினைவேந்தல் நிகழ்வுக்கான ஏற்பாட்டுக்குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (2-315)

# சேதமடைந்த வாணிமோட்டை குளத்தின் புனரமைப்புப்பணி நிறைவுறும் நிலையில்



(கண்டாவளை)

முல்லைத்தீவு புத்துவெட்டுவான் பிரதேசத்தில் 100 ஏக்கர் நிலத்தில் உப உணவுச் செய்கையினை மேற்கொள்ளும் பொருட்டு சேதமடைந்த நிலையில் காணப்பட்ட வாணி மோட்டைக் குளம் மூன்று மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு புத்துவெட்டுவான் பிரதேசத்தில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட மணல் குளத்திற்கு மேலுள்ள வாணி மோட்டைக் குளத்தை புனரமைத்துத்தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில் இவ் வாண்டு மீள்குடியேற்ற அமைச்சினுடைய நிதி யொதுக்கீட்டின் கீழ் மூன்று மில்லியன் ரூபா செலவில் குறித்த குளம் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இதன் கட்டுமானப் பணிகள் தற்போது நிறைவடையும் தறுவாயில் காணப்படுகின்றது.

குறித்த குளத்தை புனரமைப்பதன் மூலம் இக் குளத்தின் கீழுள்ள கைவிடப்பட்ட 100 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் உப உணவுப் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ள முடியுமென துணுக்காய் கமநலசேவை நிலையத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# ஆறு மில்லியன் நிதியில் விளாத்திக்குளம் புனரமைப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்தில் கைவிடப்பட்டு சேதமடைந்த நிலையில் காணப்பட்ட விளாத்திக் குளம் ஆறு மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள கோட்டை கட்டியகுளம் பகுதியில் உடைப்பெடுத்த நிலையில் நீண்டகாலமாக புனரமைக்கப்படாது காணப்பட்ட விளாத்திக்குளத்தை புனரமைத்து இதன் கீழ் உள்ள விவசாய நிலங்களை பயிர்ச் செய்கைக்கு பகிர்ந்தளிக்குமாறு இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து, குறித்த குளம் இவ்வாண்டு ஆறு மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு தற்போது வருகின்றது.

இக்குளம் புனரமைக்கப் படுவதனால் இதன் கீழுள்ள 120 ஏக்கர் வயல் நிலங்களில் நெற் செய்கை மேற்கொள்ளக் கூடியதாக இருக்குமென துணுக்காய் கமநலசேவை நிலையத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# மூதாட்டியின் சங்கிலியை அறுத்த நபரை பொதுமக்கள் மடக்கிப் பிடித்தனர்

(கண்டா வளை)

கிளிநொச்சி கண்டாவளைப்பகுதியில் தனித்திருந்த மூதாட்டியின் சங்கிலியை அறுத்து மூதாட்டியை கொலை செய்யும் நோக்கில் கிணற்றிற்குள் தள்ளிவிட்ட நபரை பொதுமக்கள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கிளிநொச்சி கண்டாவளை பத்தர்மோட்டைப் பகுதியில் உள்ள தனது வீட்டில் இருந்த மூதாட்டியை அப்பிரதேசத்திற்கு வயல் வேலைக்காக சென்ற கிளிநொச்சி தருமபுரத்தைச் சேர்ந்த ஒருவர் கடந்த 6 ஆம் திகதி திங்கட்கிழமை தனித்திருந்த மூதாட்டியின் வீட்டிற்குச்சென்று அவரது கழுத்திலிருந்த சங்கிலியை அறுத்தெடுத்து மூதாட்டியை கொலைசெய்யும் நோக்கில் கிணற்றிற்குள் தள்ளி விட்டு தப்பிச்சென்றுள்ளார்.

இந்நிலையில் கிணற்றிற்குள் இருந்த கல் ஒன்றை பிடித்திருந்த நிலையில் கூக்குரலிட்டதையடுத்து அயலவர்களால் காப்பாற்றப்பட்டு தற்போது சாவகச்சேரி வைத்தியசாலையில் குறித்த மூதாட்டி அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய நபரொருவரை ஊர் மக்கள் பிடித்து அவரிடம் இருந்த மூதாட்டியின் சங்கிலியையும் மீட்டு கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

கண்டாவளை பத்தர் மோட்டையைச் சேர்ந்த பொன்னையா திலகவதி என்ற மூதாட்டியே இவ்வாறு பாதிக்கப்பட்டவராவார். இது தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (2-

# முத்தையன்கட்டு குளத்தின் வான்கதவில் பாரிய உடைவு சீர்செய்யப்படுகின்றது; அச்சம் கொள்ளத் தேவையில்லை



(கண்டாவளை)

முல்லைத்தீவு முத்தையன்கட்டுக்குளம் பெருந்தொகை நிதியில் புனரமைக்கப்பட்டபோதும், அதன் புனரமைப்புப்பணிகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை எனவும் குளத்தின் சில பகுதிகளில் உடைவுகள் ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகளும் விவசாய அமைப்புக்களும் குற்றம் சாட்டியுள்ளன.

முல்லைத்தீவு பாரிய நீர்ப்பாசனக்குளங்களில் ஒன்றான முத்தையன்கட்டுக்குளம் நீண்டகாலமாக புனரமைக்கப்படாது போதிய நீர் தேக்கி வைக்க முடியாத நிலை காணப்பட்டது.

இந்நிலையில் விவசாயிகளின் தொடர்கோரிக்கையை ஏற்று சுமார் 600 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட நிதியில் புனரமைக்கப்பட்ட இக்குளத்தின் வான் பகுதியில் பாரிய உடைவு ஏற்பட்டுள்ளதுடன், ஏனைய கட்டுமானங்களிலும் காணப்படுவதாக விவசாயிகளும் விவசாய அமைப்புக்களும் குற்றம் சாட்டியுள்ளன.

இந்நிலையில் இவ் விடயம் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட நீர்ப்பாசனத்திணைக்களம் மற்றும் முத்தையன்கட்டு நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகியவற்றில் வினவிய போது, குறித்த குளத்தின் புனரமைப்புப்பணிகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

குளத்தின் வான் பகுதியில் உடைவு ஒன்று காணப்படுகின்றது.

அதாவது புனரமைப்பின் போது ஏற்கனவே இருந்த வான் கதவிற்கு அருகில் மற்றுமொரு வான்கதவை அமைத்த போது, அதற்கிடையில் உடைவு ஒன்று காணப்படுகின்றது.

இதன் கட்டுமானப்பணிகளை மேற்கொண்ட ஒப்பந்தகாரர்களுடைய பிடிபணம் இருக்கின்றது.

இப்போது அந்த ஒப்பந்தகாரர்கள் குறித்த வேலையை சீர் செய்வதற்கு உடன்பட்டு அந்த வேலையைச் செய்கின்றார்கள்.

ஆகவே இதில் விவசாயிகள் அச்சப்படத்தேவையில்லை என மேற்படி திணைக்களங்கள் தெரிவித்துள்ளன. (2-315)

# 6 திறந்த பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டு தலைமறைவாகியிருந்த நபர் வவுனியாவில் கைது

(குருமன்காடு)

பல வருட காலமாக தேடப்பட்டு 6 திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் தலைமறைவாகியிருந்த நபர் ஒருவர் நேற்று முன்தினம் வவுனியா பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் மேலும் தெரிவிக்கையில்,

பிரஸ்தாப நபர் வவுனியா, வேப்பங்குளம் பகுதியில் வீடு ஒன்றினை உடைத்து திருடிய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணைகளை மேற்கொண்ட போதே அவர் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் என்பதும் நீதிமன்றால் 6 திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தவர் என்பதும் தெரியவந்துள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்றம், மட்டக்களப்பு நீதிமன்றம், கம்பளை நீதிமன்றம் உள்ளிட்ட பல்வேறு நீதிமன்றங்களால் குறித்த நபருக்கு எதிராக 6 திறந்த பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

குறித்த நபரிடம் இருந்து வேப்பங்குளம் பகுதியில் உள்ள வீட்டில் திருடப்பட்ட பொருட்களும் மீட்கப்பட்டுள்ளது. வவுனியா பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தென்னக்கோன் மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் பியசிறி பெர்னாந்து ஆகியோரின் வழிகாட்டலில் பிராந்தியத் தீர்க்கப்படாத குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி கோரலே கெதரவின் தலைமையில் பொலிஸ் சார்ஜன்ட், பொலிஸ் கான்டபிள்கள் ஆகியோர் அடங்கிய குழுவினரே குறித்த நபரை கைது செய்தனர்.

விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (2-250)




# குற்றத்தை ஒப்புக்கொண்ட 9 நபர்களுக்கு 5லட்சத்து 8ஆயிரத்து 500ரூபா தண்டப்பணம்

(மல்லாவி)

மல்லாவி பொலிஸ் நிலையப் பிரிவில் சட்டவிரோதமான முறையில் ஆற்று மணல் ஏற்றிப் பயணித்த உழவு இயந்திரங்களின் உரிமையாளர்களும் சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட கசிப்பு கோடாவை தமது உடைமையில் வைத்திருந்த சந்தேக நபர்களும் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம்.எஸ்.எம்.சம்சுதீன் 9 நபர்களுக்கும் 5 இலட்சத்து 8 ஆயிரத்து 500 ரூபா தண்டப் பணத்தை செலுத்துமாறு உத்தரவிட்டதுடன் நபர்களுக்கு கடுமையாக எச்சரிக்கையும் விடுத்துள்ளதாக மல்லாவி பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணைகள் நேற்று புதன்கிழமை காலை மல்லாவி பொலிஸ் நிலையப் பொலிஸாரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணைகள் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்றுள்ளது.

முதலில் நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சட்டவிரோதமான முறையில் ஆற்று மணல் ஏற்றிப் பயணித்த 6 உழவு இயந்திரங்களின் உரிமையாளர்களும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து ஒரு உழவு இயந்திர உரிமையாளருக்கு 60 ஆயிரம் ரூபா வீதம் 6 உரிமையாளர்களுக்கும் மொத்தம் 3 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் நீதிபதியினால் கடுமையாக எச்சரிக்கையும் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மல்லாவி -திருநகர் கிராமத்தில் வசிக்கும் 3 சந்தேக நபர்கள் சட்டவிரோதமான முறையில் தயாரிக்கப்பட்ட கசிப்புக் கோடா ஒரு இலட்சத்து 70 ஆயிரம் மில்லி லீற்றரையும் கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்களையும் தமது உடைமையில் வைத்திருந்த குற்றத்தை ஏற்றுக் கொண்டதையடுத்து ஒரு சந்தேக நபருக்கு தலா 49 ஆயிரத்து 500 ரூபா வீதம் 3 சந்தேக நபர்களுக்கும் மொத்தம் ஒரு இலட்சத்து 48 ஆயிரத்து 500 ரூபாவை தண்டப் பணமாகச் செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டதுடன், கடுமையான எச்சரிக்கையும் விடுத்துள்ளார். (2-15)

# வவுனியா பெற்றோல் நிலையங்களில் பெற்றோலுக்கு தட்டுப்பாடு தொடர்கின்றது



(குருமன்காடு)

வவுனியாவிலுள்ள எரிபொருள் நிலையங்களில் பெற்றோலுக்கு தட்டுப்பாடு தொடர்ந்தும் நிலவி வருகின்றது.

இதன் காரணமாக நேற்றைய தினமும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் ஆட்டோக்களின் சாரதிகள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

நாட்டில் ஏற்பட்ட எரிபொருள் பற்றாக்குறையடுத்து வவுனியாவிலும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் வவுனியாவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் மக்கள் கூட்டம் அதிகளவாக காணப்படுகின்றது. (2-250)

# கூட்டுறவு சங்கத்தை கணக்காய்வு செய்து புதிய நிர்வாகத்தை தெரிவு செய்யுங்கள்

## கால்நடை உரிமையாளர்கள் கோரிக்கை

(வவுனியா)

நெடுங்கேணி பிரதேசத்திலுள்ள கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கமானது கடந்த 5 வருடகாலமாக பல தொண்டர் நிறுவனங்களினால் பெருந்திரளான உதவிகள் சங்கத்திற்கு வழங்கப்பட்டு குறிப்பாக 40 பால் மாடுகள், 60 ஆடுகள் வழங்கப்பட்ட நிலையில் மேலிடத்து அனுமதிகளின்றி விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இக்கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தில் எஞ்சியுள்ள மாடு ஒன்றையும் ஆடு ஒன்றையும் விற்பனை செய்வதற்கு முயற்சி எடுத்தபோது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க கூட்டுறவு உதவி ஆணையாளரினால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இச் சங்கத்திற்கு இப்பிரதேசத்திலுள்ள கால்நடை உரிமையாளர்களிடமிருந்து நியாயமான விலைக்கு பாலை கொள்வனவு செய்து உற்பத்தி செய்யும் முகமாக சேவாலங்கா நிறுவனத்தினால் வாகனம் ஒன்றும் யூஸ் இயந்திரமும் வழங்கப்பட்ட நிலையில் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான யூஸ் இயந்திரம் இக்கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினால் உரிய முறையில் நடைமுறைப்படுத்த முடியாததால் துருப்பிடிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டதோடு நிறுவனத்தின் நிதியுதவியுடன் கோழி வளர்ப்பதற்கான கூடும் ஆடு வளர்ப்பதற்கான கொட்டிலும் மாடு வளர்ப்பதற்கான தொழுவமும் புனரமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்ட நிலையில் தற்போது அழிந்து போகும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இக்கால்நடை சங்கத்திற்கு வழங்கப்பட்ட பால் பதனிடும் உபகரணங்களும் கருவிகளும் துருப்பிடித்த நிலையில் காணப்படுவதால் இது தொடர்பில் கால்நடை உரிமையாளர்களினால் பல தடவைகள் அதிகாரிகளுக்கு முறையிட்ட போதிலும் அதிகாரிகளினால் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாத காரணத்தினால் இந்தச் சங்கத்திடமிருந்து கனகராயன் குளம் கால்நடை வளர்ப்போர் சங்கமாகவும் ஒலுமடு கால்நடை வளர்ப்போர் சங்கமாகவும் பிரிந்து தனியாகவே தங்கள் கால்நடை பால் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இதனை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் உடனடி கவனம் செலுத்தி இச்சங்கத்திலுள்ள சொத்துகளுக்கும் இச்சங்கத்திற்கு நிறுவனங்களால் வழங்கப்பட்ட கால்நடைகள், சம்பந்தமாகவும் கணக்காய்வு செய்து புதிய நிர்வாகத்தை சீர்செய்து தரும்படி கால்நடை உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# முதியோர் கௌரவிப்பு

(கிளிநொச்சி)

முதியோர் கௌரவிப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு கரைச்சி பிரதேச செயலர் பிரிவின் கோணாவில் கிராமத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் செ.பெஞ்சமின் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபையின் கிளிநொச்சி மாவட்ட உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன், கரைச்சி பிரதேச செயலகப் பிரிவின் சமூக சேவைகள் அலுவலர் திருமதி.தி. ஆரணி, கோணாவில் ஆலய அருட்தந்தை அமலதாஸ், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் மருத்துவ அதிகாரி மா.ஜெயராசா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக கோணாவில் கிராம அலுவலர் சி.சிவநேசன், கிளி/கோணாவில் மகாவித்தியாலய அதிபர் இதயசிவதாஸ், கோணாவில் காந்தி வித்தியாலய அதிபர் ஜோண் செல்வம், ஓய்வுநிலை தபாலதிபர் திருமதி.கந்தசாமி ஞானரதி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2)

# கட்டுரைப்போட்டி

## மாகாண மட்டத்தில் இரண்டாம் இடம்



(கிளிநொச்சி)

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் தேசிய ஐக்கியத்திற்கான பாக்கீர் மாக்கார் நிலையமும் ஒன்றிணைந்து நடத்திய கட்டுரைப் போட்டியில் கிளி/ இராமநாதபுரம் மகா வித்தியால மாணவி சா.அபிராமி மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் மாகாண மட்டத்தில் 2ஆம் இடத்தையும் பெற்றுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் விருது வழங்கப்பட்டது. இதேவேளை கிளிநொச்சி மாவட்ட அந்தணர் ஒன்றியத்தினால் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. (2-277)

# ஆயுதம் தேடி தோண்டும் பணி தோல்வியில் முடிவுற்றது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தேராவில் தேக்கங்காட்டு பகுதியில் அமைந்துள்ள 683 ஆவது படைத்தலைமையக வளாகத்தில் விடுதலைப்புலிகளால் புதைக்கப்பட்ட ஆயுதங்கள் இருப்பதாக தெரிவித்து நீதிமன்ற உத்தரவுக்கமைய இடம் பெற்ற தேடுவதற்கான தோண்டும் பணி எதுவும் கிடைக்காத நிலையில் முடிவடைந்தது. இதுகுறித்து மேலும் தெரிய வருவதாவது,

683 ஆவது படைத்தலைமையக வளாகத்தில் விடுதலைப்புலிகளால் புதைக்கப்பட்ட ஆயுதங்கள் இருப்பதாக தெரிவித்து அதனை தேடுவதற்காக நீதிமன்ற அனுமதி பெறப்பட்டிருந்தது.

அதற்கமைய நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் சம்பவ இடத்துக்கு விரைந்த முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி எஸ்.எம்.எஸ்.சம்சுதீன் முன்னிலையில் தோண்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இருப்பினும் குறித்த பகுதியில் எந்தவொரு பொருட்களும் கிடைக்காது தோண்டும் நடவடிக்கை முடிவடைந்தது. (2-281)

# கலைத் தரிசனம்



## அண்ணாவியார் வே.நந்தகோபாலன் அவர்களுடனான சந்திப்பு

ஈழத்தின் வடபகுதியில் முத்தமிழ் மூச்சுக் காற்றாய் விளங்கும் பருத்தித்துறை நகரில் நீர்வளம், நிலவளம், கடல்வளம் நிறைந்து எழில் கொஞ்சும் கிராமமான கற்கோவளம் கிராமத்தில் 1960 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 2 ஆம் திகதி பிறந்தார். இளமையிலேயே கலையார்வம் மிக்க இவர் 1975 இல் தனது 15 ஆவது வயதில் ஆதிகாத்தானாக நடித்துத் தனது கலைப் பயணத்தைத் தொடங்கினார்.

1980 இல் அண்ணாவியராகி சிந்துநடைக் கூத்துக்கள் மட்டுமல்லாது பல இசை நாடகங்கள், வில்லிசைப்பாட்டு, கும்மி, கரகம், காவடி, கோலாட்டம் போன்ற கலை வடிவங்களையும் தனது கிராம மக்களுக்கு மட்டுமல்லாது பல பாடசாலைப் பிள்ளைகளுக்கும் பழக்கி மேடையேற்றி வருகிறார். பல போட்டி நாடகங்களில் பங்குபற்றி வெற்றியீட்டியதுடன் 2012 இல் கலைப்பரிதி விருதையும் 2017 இல் கலை மாமணி விருதையும் பெற்றார். இவர் ஒரு நடிகராக, நாடக எழுத்தாளராக, அண்ணாவியாராக வளர்ச்சியடைந்ததிற்கு கும்மி அம்மாளும் கற்கோவளம் வாழ் மக்களும் கலைஞர்களுமே காரணம் என்கிறார். அண்ணாவியார் வே.நந்தகோபாலன் அவர்கள் தன் கலைப்பணி பற்றி மனந்திறந்து கூறியவை வலம்புரியில் பிரசுரமாகின்றது.

**❖ தங்கள் கலைப் பயணத்தின் ஆரம்பம் பற்றிக் கூறுங்கள்?**

1975 இல் எனது சகோதரன் வே.சரவணபவானந்தன் அண்ணாவியார் அவர்களால் அரங்கேற்றப்பட்ட காத்தவராயன் சிந்துநடைக் கூத்தில் ஆதிகாத்தானாக முதன் முதல் நடித்து கலையுலகில் கால்பதித்தேன். பின்னர் எனது கலை ஆர்வத்தால் இசை நாடகத்தையும் பயின்று 1989 இல் அண்ணாவியராக நாடகங்களைப் பழக்கி மேடை ஏற்றத்தொடங்கினேன். 1992 இல் மயானத்தின் மன்னன், சத்தியவான் சாவித்திரி என்ற இசை நாடகங்களை முதன் முறையாக நான் நெறிப் படுத்தி எங்கள் கும்மி அம்மன் ஆலய முன்றலில் மேடை ஏற்றினேன்.

எனக்குப்பின் எனது கிராமத்தில்பல அண்ணாவிமார்களை உருவாக்கி வருகின்றேன்.

**❖ சிந்துநடைக் கூத்து மட்டுமல்லாமல் வேறு கலை வடிவங்களையும் கற்றுத் தருகின்றீர்களா?**

ஆம், சிந்துநடைக் கூத்துடன் பல இசை நாடகங்கள், எனது எழுத்துருவில் ஆக்கப்பட்ட இசை நாடகங்களான சீதா கல்யாணம், இராமர்பட்டாபிஷேகம் என்பவையுடன் மரபுவழி பாரம்பரியக் கலைகளான கரகம், காவடி, கும்மி, கோலாட்டம் என்பனவற்றையும் பயிற்றுவித்து வருகின்றேன். வில்லிசையையும் இத்துடன் இணைத்துக் கொள்ளலாம். எனது "சீதா கல்யாணம்" இசை நாடகம் 2007 இல் வடமராட்சி வடக்கு கலாசாரப் பேரவை நடத்திய நாடகப் போட்டியில் முதல் இடம்பெற்றது.

**❖ நீங்கள் பழக்கி அரங்கேற்றிய கூத்துக்கள், நாடகங்கள் பற்றி?**

காத்தவராயன் கூத்தும் நான் எழுதிய "கர்ணன்" சிந்துநடைக் கூத்தையும் கூறலாம். இசை நாடகங்களாக சம்பூரண அரிச்சந்திரா, அரிச்சந்திர மயான காண்டம், கோவலன் கண்ணகி, வள்ளி திருமணம், சீதா கல்யாணம், பாமாவி ஜயம், ஞானசவுந்தரி என்பனவாகும்.

இவற்றில் சிலவற்றை கற்கோவளம் மெதடிஸ் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவ, மாணவிகளுக்குப் பழக்கி பரிசில்களும் பெற வைத்துள்ளேன். தும்பளை சிவப்பிரகாச வித்தியா சாலை மாணவர்களுக்கும் பயிற்று வித்தேன்.

**❖ உங்கள் மன்றத்தின் ஆரம்பம்?**


1989 இல் எங்கள் கிராம இளைஞர்களின் ஊக்கத்தாலும் பெரியவர்களின் ஒத்தாசையாலும் கும்மி அம்மனின் ஆசியுடனும் "வேணுகான சபா" என்ற நாடக மன்றத்தை ஆரம்பித்தோம். இதற்கு முன் மன்றம் என்றில்லாமல் ஊரின் பெயரிலேயே இயங்கி வந்தது.

**❖ தாங்கள் பிறந்து வளர்ந்த பருத்தித்துறை கற்கோவளம் கிராமப் பகுதியில் எக்காலப்பகுதியில் கூத்துக்கள் ஆரம்பிக்கப்பட்டதெனக் கூற முடியுமா?**

ஆம். நான் முன்பு கூறியது போல் 1926 இல் மரபுவழி களரிக் கூத்துக்கள் விளையாடப்பட்டதாக அறிகின்றேன். கும்மி, கோலாட்டம் என்பனவும் வழிவழி வந்தவைதான்.

**❖ கூத்துக்களில் மிகவும் கடினமான தாள வகைகள் பற்றி...?**

இது ஒரு நல்ல கேள்வி. அண்ணாவிமார்களிடம் கேட்கப்பட



வேண்டிய கேள்விதான். தாளம் இல்லாமல் பாடல்கள் அமையாது. பாடல், ஆடல் இல்லாமல் கூத்துக்கள் இல்லை. தாளம் பிசகினால் எல்லாமே கெட்டு விடும். அதனால்தான் அண்ணாவியார் தாள மிசைத்துக்கூத்தை நடத்திச் செல்ல வேண்டும். அண்ணாவி இல்லாமல் கூத்து இல்லை. கஷ்டமான தாளங்கள், தாளக்கட்டுக்கள் எல்லாமே கைவந்தவர் தான் ஒரு அண்ணாவி. அத்துடன் குரல் வளமும் உள்ளவராக இருக்க வேண்டும்.

**❖ கூத்தை நவீன மயப்படுத்துவதற்காக புதிய ஆடல், பாடல் நடைகளை உங்கள் கூத்துக்களில் சேர்த்துள்ளீர்களா?**

கூத்துக்களிலிருந்து நாங்கள் கற்க வேண்டிய எத்தனையோ சங்கதிகள் காத்துக்கிடக்கின்றன. அதை விடுத்து கூத்துக்களுக்கு நாங்கள் கற்றுத்தர முயல்வது அறிவீனம். கூத்துக்களின் பழைமை பேணப்பட வேண்டும். அதன் மரபுவழி காக்கப்பட வேண்டும். அதன் பாரம்பரியம் தவறக் கூடாது. கட்டிக் காக்கப்பட வேண்டும் என்பதே எனது நோக்கம்.

**❖ கூத்திற்கான கொப்பி கொடுப்பது முதல் அதன் பயிலும் காலம் மற்றும் அரங்கேற்றத்தின் போதும் தாங்கள் பெற்ற அனுபவங்களைச் சுருக்கிக் கூறமுடியுமா?**

கூத்துக்கள் பயிலும் போது எங்களுக்கு எந்தப் பிரச்சினைகளும் ஏற்படவில்லை. காரணம் எங்கள் கலைஞர்கள் எல்லோருமே கூத்தில் ஆர்வம் மிக்கவர்கள். அரங்கேற்றத்தின் போது பல அனுபவங்கள் ஏற்பட்டதுண்டு. அதில் ஒன்றை மட்டும் கூறுகின்றேன்.

அன்று சித்திரைப் பௌர்ணமி நாள். வழமைபோல் கூத்துப் போட எல்லா ஆயத்தங்களும் நடைபெற்றாகி விட்டது. திடீரென நல்ல மழை கொட்டத் தொடங்கி விட்டது. செய்வதறியாமல் தவித்தோம். மழை சற்று ஓய்ந்ததும் கூத்து விளையாடத் தீர்மானித்து அம்மாளின் வாசலில் காப்புப் படிக்க எல்லா பிள்ளைகளையும் அழைத்த போது அம்மனுக்கு வேசம் காட்டியவர் மட்டும் எந்தவித மறுமொழியும் பேசாது மேடையில் இருந்தார். அவரை அங்கேயே விடுத்து மற்றவர்கள் அம்மனின் வாசலுக்கு வந்து பார்த்தால் அவர் வாசலில் எமக்காகக் காத்து நிற்கின்றார். மழையும் ஓய்ந்து நிலவு தெரிகின்றது. அப்படி என்றால் அம்மாளே மேடையில் இருந்து காட்சி தந்ததை எப்படிச் செல்ல.

**❖ உங்கள் கூத்துக்கள் நாடகங்களால் தங்களுக்குக் கான சமூக வரவேற்பு எவ்வாறு அமைந்துள்ளது.**

எங்கள் சமூக மக்கள் இளைஞர்கள் முதல் முதியவர்கள் வரை எல்லோருமே மிகுந்த கலையார்வம் கொண்டவர்கள். இன்றும் ஒவ்வொரு சித்திரைப் பௌர்ணமி தினத்தன்றும் கும்மி அம்மாள் வாசலில் ஊர் கூடிக் காத்தவராயன் கூத்து நடத்துவோம். அண்ணாவியார் என்ற முறையில் என்னை அவர்கள் மதித்து நடத்தத் தவறியதில்லை. அவர்களுக்கு நான் நன்றி உடையவனாக இருப்பேன்.

**❖ சிந்துநடை என்பது இந்தக் கூத்தின் பாடல்களின் மெட்டைக் குறிக்குமா? அல்லது ஆடலைக் குறிக்குமா?**

நடை என்பது பொதுவாகவே பாடல்களின் மெட்டைக் குறிக்கும் ஒரு பதம். கானா நடைப்பாடல், தெம்மாங்கு நடைப்பாடல் என்பது போல் சிந்துநடைப் பாடல்களும் ஒரு வகையான துள்ளல் நடையே சிந்துநடைப் பாடல்களின் ஆட்டமாக அமைகின்றது.

**❖ கலை நிகழ்வுகளில் தாங்கள் பெற்றுக் கொண்ட விருதுகளும் பட்டங்களும்?**

வடமராட்சி வடக்கு கலாசார பேரவையினால் 2012 இல் "கலைப் பரிதி" விருதினையும் தேசோதயம், சர்வோதயம் இணைந்து நடத்திய மக்கள் திலகம் M.G.R. அவர்களின் நூறாவது ஜனன தின விழாவில் 28.01.2017 இல் "கலைமாமணி" விருதினையும் பெற்றுள்ளேன்.

**❖ பொதுவாகக் காத்தவராயன் சிந்துநடைக் கூத்து மற்றும் நாடகங்களின் இன்றைய நிலை பற்றிக் கூறுங்கள்.**

இன்று "நாடகமும் அரங்கியலும்" என்ற கற்கை நெறிக்குள் நாடகம் ஒரு கட்டுக் கோப்புடன் வளர்ந்து வருகின்றது. நாடகம் நடத்துவதற்கு பார்வையாளர் நிறைந்த ஓர் அரங்கு முக்கியத்துவம் பெற்று நிற்கின்றது. அன்றுபோல் இன்று அரங்கு நிறைந்த பார்வையாளர்கள் இருப்பதில்லை.

இன்றைய நாடகங்கள் தனது அரங்கைத் தொலைத்து தனியாகத் தனது கடைசி மூச்சைக் கையில் பிடித்தபடி மேடையில் நிற்கும் பரிதாப நிலையைத் தான் காணக் கூடியதாக உள்ளது. இதற்குக் காரணம் இன்றைய சின்னத் திரை நாடகங்களும் கை பேசி மற்றும் ஊடகங்களின் நேரடி ஒளிபரப்பும் தான் காரணம் எனலாம்.

நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே நேரடி ஒளிபரப்பு நடப்பதனால் பார்வையாளர்கள் ஆங்காங்கே தடுத்து நிறுத்தப்படுகின்றனர். அதனால் அரங்கு தன்னிறைவை இழந்து போகின்றது. இது எவர் மனத்தையும் புண்படுத்துவதற்காக நான் கூறவில்லை. ஒரு கலைஞனாக என்மன ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றேன்.

**❖ இறுதியாகக் கூத்துக்கள், நாடகங்கள் பற்றி வளர்ந்து வரும் இன்றைய இளம் கலைஞர்களுக்கு தாங்கள் கூற விரும்புவது?**

கலை என்பது காலத்தின் கண்ணாடி. கலைகள் அழிக்கப்படுவது, அழிந்து போவது என்பதை நாங்கள் பார்த்திருக்க முடியாது. அப்படி நடந்தால் எங்கள் கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம், விழுமியங்கள் எல்லாமே மெல்லச் சாகும் என்பதே எனது கருத்து.

கலையை வளர்ப்பதால் எங்களை, எங்கள் கிராமத்தை, எங்கள் திருநாட்டை உலகறிய வைக்கலாம். திரும்பிப் பார்க்க வைக்கலாம்.

நாடக மாமேதைகள், சங்கரதாஸ் சுவாமிகள், ஆங்கில நாடக மேதை சேக்ஸ்பியர் போன்றவர்கள் இன்னமும் எங்கள் மனத்தில் சாகாமல் உயிருடன் இருக்கின்றார்கள் என்றால் அதற்குக் காரணம் அவர்கள் வளர்த்த கலைகள் தான்.

இளைஞர்களே எங்கள் கலை வடிவங்களில் தான் எங்கள் மூதாதையர்களின் மூச்சுக் காற்று உள்ளது. எங்கள் நாகரிகம் அந்த ஓலைச் சுவடிகளில் தான் புதைந்து கிடக்கின்றது.

அவர்களின் பொட்டகங்களைத் திறந்து தூசு தட்டி அவைகளுக்கு உயிர் கொடுத்து உலகறிய வையுங்கள். உங்கள் நல்ல நேரங்களை பழைமை பேணும் கலை வடிவங்களுக்குத் தாருங்கள் என்று கேட்டுக் கொண்டு கும்மிஅம்மனின் ஆசியுடன் வலம்புரி பத்திரிகைக்கும் தம்பி ஜெகனுக்கும் நன்றிகள் கூறி நிற்கின்றேன்.

**நேர்காணல்: ஜெயம் ஜெகன்**

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலை திட்டமிட்டு தாமதப்படுத்தவில்லை

## அமைச்சர் பைஸர் நியாயப்படுத்தல்



(கொழும்பு)

"உள்ளூராட்சி மன்றத் தேர்தலை, நான் திட்டமிட்டு காலதாமதப்படுத்தவில்லை. எனது கடமைமையை நான் செய்துவிட்டேன். சட்ட விதி முறைக்கு அமைவாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன" என உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

நவம்பர் மாதத்தின் முதலாவது நாடாளுமன்ற அமர், சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் ஆரம்பமானது.

சபை அமர்வின்போது ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, "உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான வர்த்தமானியில் அமைச்சர் கையொப்பம் இட்டுள்ளார். எனினும் வர்த்தமானி இன்னும் அச்சிடப்படவில்லை. அவ்வாறெனின் தேர்தலை கால தாமதப்படுத்தவே, அரசாங்கம் இவ்வாறு செயற்படுகிறதா?" எனக் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர்,

"உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நான் திட்டமிட்டு காலதாமதப்படுத்தவில்லை. அப்படியோர் அவசியம், அரசாங்கத்துக்குக் கிடையாது. அமைச்சர் என்ற வகையில் நான் எனது கடமையைச் செய்துள்ளேன். சட்ட விதி முறைகளுக்கு அமைவாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நீங்கள் நடைமுறைகளைத் தெரிந்து கொள்ளாமல் பேசுகிறீர்கள்" என தன்னை நியாயப்படுத்தினார். (இ-7)

# இலங்கையில் ஒரு நாள் கடவுச்சீட்டு சேவை பாதிப்பு

(கொழும்பு)

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தினால் வழங்கப்படும் கடவுச்சீட்டுக்கான ஒரு நாள் சேவை நேற்று முன்தினம் பாதிப்படைந்துள்ளது.

கணனி கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக ஒருநாள் சேவையின் கீழ் வழங்கப்படும் கடவுச்சீட்டு அச்சிடும் நடவடிக்கையில் தடை ஏற்பட்டுள்ளது.

கணனி கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறுகளை மீண்டும் சீர்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக ஒரு நாள் சேவையில் கடவுச்சீட்டு பெற்று கொள்வதற்காக வந்த பெருமளவு மக்கள் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தில் காத்து நின்றுள்ளனர்.

கணனி கட்டமைப்பு சீரபடுத்திய பின்னர் மீண்டும் அலுவலக நேரத்தில் கடவுச்சீட்டு விநியோகிப்பதில் சிரமம் ஏற்படலாம் என குறிப்பிடப்படுகின்றது.

தொழில்நுட்ப பிரிவில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக ஒருநாள் சேவை இவ்வாறு தடைப்பட்டுள்ளதாக குடிவரவு மற்றும் குடிய கல்வு திணைக்களம் மக்களுக்கு அறிவித்துள்ளது. (இ-7)

# அன்பேசிவம் அமைப்பின் வரப்புயர மர நடுகைத் திட்டம்





(யாழ்ப்பாணம்)

வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு சூரிச் சிவன் கோவிலின் அன்பே சிவம் அமைப்பால் வரப்புயர மரநடுகைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. வடக்கின் முன்னாள் விவசாய அமைச்சரும் மாகாணசபை உறுப்பினருமான பொ.ஐங்கர நேசன் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை முகமாலையில் சம்பிரதாயபூர்வமாக இம்மரநடுகையை ஆரம்பித்து வைத்துள்ளார்.

சுவிஸ்லாந்தில் அமைந்துள்ள சூரிச் சிவன் கோவிலின் அன்பேசிவம் அமைப்பு தமிழர் தாயகமான வடக்கு கிழக்கெங்கும் பல்வேறு சமூக நலத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

அதன் ஒரு கட்டமாகவே வரப்புயர என்ற பெயரில் மரநடுகைத் திட்டத்தையும் செயற்படுத்தி வருகிறது. வடக்கு மாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு ஆண்டு தோறும் கார்த்திகை மாதத்தில் இம் மரநடுகை அன்பே சிவம் அமைப்பினர் தொண்டர்களால் மேற்கொள்ளப்படுகிறது. இதன் தொடர்ச்சியாகவே நடப்பு ஆண்டுக்கான மரநடுகை முகமாலையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முகமாலை கண்டி வீதியில் அன்பேசிவம் அமைப்பால் அண்மையில் எட்டு ஏக்கர் அளவான காணி கொள்வனவு செய்யப்பட்டு அதற்குச் சிவபுரம் வளாகம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. முதியோர் இல்லம் மற்றும் கலாசார மண்டபம் அமையவுள்ள இந்த வளாகத்திலேயே மரநடுகை இடம் பெற்றுள்ளது.

இதன்போது பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டு 200 தென்னங் கன்றுகளை நாட்டி வைத்துள்ளனர். சிவபுரம் வளாகத்திலும் அதனை அண்டியுள்ள கண்டி வீதியிலும் தொடர்ந்து மரநடுகை இடம் பெறவுள்ளதாக அன்பேசிவம் அமைப்பால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மரநடுகை நிகழ்ச்சியில் அன்பேசிவம் அமைப்பின் இலங்கைக்கான தலைவர் அ.அருளானந்த சோதி, பிரதம நிறைவேற்று அதிகாரி கு.குமணன், செயலாளர் தில்லையம்பலம் வரதன், உபசெயலாளர் வே.செல்வகுமார், வல்லை ந.அனந்தராஜ், பளை மத்திய கல்லூரி அதிபர் சி.பாலகிருஸ்ணன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். பங்கேற்ற பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் பழமரக் கன்றுகளும் கற்றல் உபகரணங்களும் அன்பேசிவம் அமைப்பால் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# விஞ்ஞானமாணிக் கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தினால் விஞ்ஞானமாணி பட்டக் (BSc) கற்கை நெறி 2017/2018 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் க.பொ.த உயர்தரத்தில் கணித அல்லது விஞ்ஞானப் பிரிவில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருந்தல் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான அத்திவாரப் பாடநெறிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் www.ou.ac.lk என்ற இணையத்தள முகவரி ஊடாக விண்ணப்பிக்க முடிவதுடன் மேலதிக விபரங்களை யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ள முடியுமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

# கைவெட்டப்பட்ட நிலையில் பெண்ணின் சடலம் மீட்பு

(கொழும்பு)

பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொகவந்தலாவை டின்சின் தோட்ட மூன்றாம் இலக்க தொடர் வீட்டுப் பகுதியிலிருந்து பெண்ணின் சடலம் ஒன்றை பொகவந்தலாவை பொலிஸார் நேற்றுக் காலை மீட்டுள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட பெண் பழனியாண்டி சின்னம்மா (வயது-63) என அடையாளம் காணப்பட்டுள்ளார். உயிரிழந்த பெண்ணின் இடது கை வெட்டப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதால் சந்தேகங்கள் காணப்படுவதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தோடு சடலம் தொடர்பில் அட்டன் நீதிமன்ற நீதவான் மரண விசாரணையை நேரில் வருகை தந்து மேற்கொண்டதன் பின்னர் சட்ட வைத்திய பிரேத பரிசோதனைக்காக சடலம் நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-7)

# இலங்கையின் யுத்த வாகனங்கள் ஐ.நா.அமைதி காக்கும் படையில்



(கொழும்பு)

இலங்கையின் யுத்த வாகனங்கள் ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

மாலியில் ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் படையினர், அமைதி காக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் யுத்த வாகனங்கள் கொழும்புத் துறைமுகத்தின் ஊடாக அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இந்த யுத்த வாகனங்களை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஸ் சேனாநாயக்க கொழும்பு துறைமுகத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

நிலக்கண்ணி வெடி அகற்றுதல், தாக்குதல் வாகனங்கள் உள்ளிட்ட பல்வேறு யுத்த வாகனங்கள் அடங்கிய 55 கொள்கலன்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளன. (இ-7)

# கடந்த 10 நாட்களில் கிளிநொச்சியில் 365 மி.லீ மழைவீழ்ச்சி பதிவாகியது

(கண்டாவளை)

கிளிநொச்சியில் கடந்த 27ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரையான பத்து நாட்களில் 365 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக இரணைமடு திணைக்களத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலம் நிலவிய வரட்சிக்குப் பின்னர் கடந்த மாதம் 27ஆம் திகதி முதல் பருவ மழை பெய்ய ஆரம்பித்துள்ளது.

நேற்று முன்தினம் வரையான பத்து நாட்களில் 365 மில்லிலீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதுடன் 7அடி 3 அங்குலமாகக் காணப்பட்ட இரணைமடுக் குளத்தினுடைய நீர்மட்டம் 16 அடி 7 அங்குலமாக உயர்வடைந்துள்ளதாகவும் நீர்ப்பாசனத் திணைக்கள தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# பாரதம்

# இந்தியாவின் பொருளாதார சீர்திருத்தம் அனைத்தும் சீனாவிற்கே சாதகமானது

## மோடி அரசுமீது மன்மோகன் சிங் பகிரங்க குற்றச்சாட்டு



(டில்லி)

இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்கள் அனைத்தும் சீனாவிற்கே சாதகமாக அமைந்துள்ளது என முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அகமதாபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில், வர்த்தகர்கள் முன் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

பிரதமர் மோடி தலைமையிலான தற்போதைய பா.ஜ.க. அரசின் பொருளாதாரத் திட்டங்கள் அனைத்திலும், சீனாவே இலாபம் பெறுகின்றது. சீனாவின் ஏற்றுமதி இந்த ஆண்டில் அதிகரித்துள்ளது.

குஜராத் போன்ற மாநிலங்களில், பணமதிப்பு நீக்கம் மற்றும் ஜி.எஸ்.டி ஆகியன சிறு வணிகஸ்தர்களை பாதிக்கின்றது.

எனவே பணம திப்பு நீக்கம் என்பது இந்திய பொருளாதாரம் மற்றும் ஜனநாயகத்தில் கறுப்பு தினமாகும்.

புல்லட் ரயில் திட்டமானது, பிரதமர் மோடி தன் பெருமையை பறைசாற்றுவதற்காக கொண்டுவரப்பட்டதாகும்" எனவும் முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங் மேலும் குற்றஞ்சாட்டினார். (இ-7)

## 'பாரடைஸ் பேப்பர்ஸ்' விவகாரம் மத்திய அமைச்சர், பா.ஜ.க.எம்.பி பதவிவிலக காங்.போர்க்கொடி





(டில்லி)

வெளிநாடுகளில் கறுப்பு பணம் விவகாரத்தில் சிக்கிய மத்திய அமைச்சர் ஜெயந்த் சின்கா, பா.ஜ.க. எம்.பி. ரவிந்திரகிஷோர் சின்கா ஆகியோர் பதவி விலக வேண்டும் என்று காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

வெளிநாடுகளில் கறுப்பு பணத்தை குவித்து வைத்துள்ளவர்கள் தொடர்பாக 'ஆப்பிள்பை' என்ற சட்ட நிறுவனம் வெளியிட்டுள்ள பட்டியலில் 714 இந்தியர்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

"பாரடைஸ் பேப்பர்ஸ்" என்று அழைக்கப்படும் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ள தகவல்களை கொண்டு விசாரணை நடத்த இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியம் (செபி) முடிவு செய்துள்ளது.

கறுப்புப் பணம் பதுக்கியவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் பார்த்தால் இந்தப் பட்டியலில் இந்தியா 19ஆவது இடத்தில் உள்ளது. தற்போது கசிந்துள்ள "பாரடைஸ் பேப்பர்ஸ்" ஆவணங்களில் மத்திய அமைச்சர் ஜெயந்த்சின்கா, பாரதிய ஜனதா எம்.பி. ரவிந்திர கிஷோர் சின்கா ஆகியோரின் பெயர்களும் இடம்பெற்றிருப்பதாக கூறப்படுகிறது.

இதுதவிர தொழில் அதிபர் விஜய்மல்லையாவுடன் தொடர்புடைய சிலர் உள்ளிட்ட தனிநபர்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன.

இது தொடர்பாக காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் ரன்தீப் சுர்ஜேவாலா கூறுகையில்,

வெளிநாடுகளில் இந்தியர்கள் பதுக்கி வைத்துள்ள கறுப்புப் பணத்துக்கு எதிராகவும், ஊழலுக்கு எதிராகவும் பிரதமர் நரேந்திர மோடி எந்த நடவடிக்கையும் எடுக்காததன் மூலம் மக்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டார்.

ஏற்கனவே வெளியான பனாமா ஆவணங்களில் தெரிவிக்கப்பட்ட நபர்களுக்கு எதிராக இதுவரை எந்த வழக்கும் பதிவு செய்யப்படவில்லை.

பாரடைஸ் பேப்பர்ஸ் ஆவண விவகாரம் குறித்து மோடி அரசு விசாரணைக்கு உத்தரவிட வேண்டும். இந்த ஆவணங்களில் வெளிவந்துள்ள மத்திய அமைச்சர் ஜெயந்த் சின்கா மீதும் மற்றவர்கள் மீதும் பிரதமர் மோடி நடவடிக்கை எடுப்பாரா?

இந்த விவகாரத்தில் சிக்கிய ஜெயந்த் சின்கா மத்திய அமைச்சர் பதவியையும், பாரதிய ஜனதாவைச் சேர்ந்த ரவிந்திர கிஷோர் சின்கா எம்.பி. பதவியையும் இராஜினாமா செய்ய வேண்டும் என வலியுறுத்தினார். (இ-7)

## ஊழலுக்கு எதிரான நடவடிக்கை கடுமையானதாக இருக்கும் கமல் திட்டவட்டம்!



(சென்னை)

அரசியல் பயணத்தில் ஊழல் குற்றவாளிகளுக்கும் பழைய மூட்டைகளுடன் வருபவர்களுக்கும் இடமில்லை என நடிகர் கமல்ஹாசன் உறுதியாக தெரிவித்துள்ளார்.

அத்துடன் தனக்கு பின்னால் வரும் அரசியல்வாதிகள் நேர்மை தவறினால் அவர்களை கடுமையாக தண்டிக்க தான் ஒருபோதும் பின்னிற்கப்போவதில்லை என்றும் கூறினார்.

தனது பிறந்தநாளை முன்னிட்டு நேற்று முன்தினம் நற்பணிமன்றம் சார்பில் இலவச மருத்துவ முகாமை ஆரம்பித்து வைத்த கமல்ஹாசன், அதன்பின்னர் தியாகராய நகரில் செய்தியாளர்களைச் சந்தித்து கருத்து தெரிவிக்கும் போதே, இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில், சினிமாவும் அரசியலை போன்றதுதான், கடை நிலை ஊழியர் ஒருவர் தவறு விடுவாராயின் முழுச் சினிமாவையும் நாமாக்கி விடும். அவ்வாறான சூழலில் வெற்றிகரமாக பல சினிமாக்களை தயாரித்துள்ளதாக நம்புகின்றேன்.

அதேபோன்று, அரசியலிலும் சாதாரண தொண்டர் தவறு விடுவாராயினும் நான் உட்பட அனைவரையும் பாதித்துவிடும். எனவே, என்னுடைய அரசியலில் இணைந்திருப்பவர்கள் யாராவது தவறு விடுவார்களாயின் கடுமையான தண்டனையை எதிர்கொள்ள நேரிடும் எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

# மத்திய... 26 இ... சடல...

(ரோம்)

மத்திய தரைக்கடலில் 26 இளம் பெண்களின் சடலங்கள் மீட்கப்பட்டன தொடர்பாக இத்தாலி அதிகாரிகள் விசாரணையைத் ஆரம்பித்துள்ளனர்.

உள்நாட்டுப் போர் நடைபெற்று வரும் சிரியா, லிபியா உள்ளிட்ட ஆபிரிக்க நாடுகளில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகள் சென்ற வண்ணம் உள்ளனர். இவர்கள் மத்திய தரைக்கடல் வழியாக. ஆபத்தான படகுப் பயணம் மேற்கொள்ளும் போது சில சமயங்களில் விபத்தில் சிக்கி உயிரிழக்கின்றனர்.

இந்நிலையில், கடந்த இரு தினங்களுக்கு முன் மத்திய தரைக்கடலில் இத்தாலி அதிகாரிகள் மேற்கொண்ட

## பயமில்லாத ஏவுக...


(டில்லி)

இந்தியப் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பினால் தயாரிக்கப்பட்ட நிர்பை ஏவுகணையின் சோதனை நேற்று முன்தினம் ஒடிசா மாநிலத்தில் நடத்தப்பட்டுள்ளது.

300கிலோ எடைகொண்ட வெடிபொருள்களைத் தாங்கிக் கொண்டு நீண்ட தூரம் சென்று தாக்கும் திறன் கொண்ட குறித்த ஏவுகணை சோத னையின் ஆரம்பம்

## வடகொரி... பிரச்சினை...

### அமெரிக்க ஜனாதி...



(சியோல்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆசிய நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அவர் ஜப்பான் பயணத்தை முடித்துக்கொண்டு நேற்று முன்தினம் தென்கொரியா சென்றார்.

தலைநகர் சியோலுக்கு வெளியேயுள்ள ஓசன் விமானப்படை தளத்தில், மனைவி மெலனியாவுடன் ஏர்போர்ஸ் ஒன் விமானத்தில் சென்று தரை இறங்கினார். அங்கு அவருக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

## மாமியார் மீதான வெறுப்பில் டெவின் பற்றிக் தேவாலயத்தில் படுகொலைகளை செய்தாரா?

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள புனித அந்தோனியார் தேவாலயத்தில் நடந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தின் பின்னணி மாமியார் மீது மருமகன் கொண்ட வெறுப்பின் விளைவாக எழுந்ததாக சந்தேகிக்கப்படுகிறது.

ஆனால் தனது வெறுப்புக்குரிய மனைவி குடும்பம் தேவாலயத்தில் இல்லாத போது அவர் நடத்திய இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் 26 பேர் கொல்லப்பட்டனர் மேலும் 30 பேர் காயமடைந்த னர்.

முன்னாள் வான் படை உறுப்பினரான டெவின் பற்றிக் கெல்லேக்கு சட்டரீதியான ஆயுதப்பாவனைக்கு அனுமதி இல்லை. ஆயினும் அவரிடம் உப தானியங்கி துப்பாக்கி உட்பட மொத்தம் 3 துப்பாக்கிகள் இருந்தன.

இந்த மூன்று ஆயுதங்களால் தான் அவர் தனது நாசகார தாக்குதலை நடத்தியுள்ளார்.

கவச உடைகளை அணிந்து அதிரடியாக ஆலயத்துக்குள் நுழைந்த டெவின் கெல்லே அங்கு சரமாரியாக துப்பாக்கிப்பிரயோகம் செய்தார்

இதுதான் டெக்சாஸ் வரலாற்றில் மிக மோசமான பெரிய துப்பாக்கிச் சூடாக அமைந்தது. பலியானவர்களில் 5 முதல் 72 வயது வரையானவர்கள் அடங்கினர். தாக்குதலின் பின்னர் அங்கிருந்து வாகனத்தில் டெவின் தப்பிச்சென்ற போது இன்னுமொரு சம்பவம் இடம் பெற்றது.

டெவின் தப்பிச்செல்வதைக்கண்ட ஒருவர் தன்னிடமிருந்த ஆயுதத்துடன் தனது வாகனத்தால் அவரை துரத்திச்சென்றார். ஒரு கட்டத்தில் இருவருக்கும் இடையில் துப்பாக்கிச்சண்டை இடம் பெற்றது.

இதில் டெவினுக்கு சூடுபட்டது. இதனையடுத்து தனது தந்தைக்கு தொலைபேசி அழைப்பை எடுத்த டெவின் தான் உயிர்பிழைக்க மாட்டேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்பின்னர் இறந்த நிலையில், இருந்த டெவினின் உடலை பொலிஸார் மீட்டனர். கடந்த சில நாட்களுக்கு முன்னர் தனது மாமியாரை அச்சுறுத்தும் வகையில் டெவின் கெல்லே தொலைபேசி குறுஞ்செய்திகளை அனுப்பியுள்ளார் எனத் தெரிய வருகிறது. (இ-7)

# வெளிநாடு

# ...ய தரைக்கடலில் ...ளம் பெண்களின் ...லங்கள் மீட்பு!



...மீட்புப் பணியின்போது, 26 இளம்பெண்களின் உடல்களை மீட்டுள்ளனர்.

14 முதல் 18 வயது வரை கொண்ட அந்தப் பெண்கள் நைஜர் மற்றும் நைஜீரியாவைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்றும், லிபியா வழியாக ஐரோப்பிய நாடுகளுக்கு செல்ல இந்த ஆபத்தான பாதையில் பயணித்திருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது.

படகு மூழ்கியதால் அவர்கள் இறந்திருக்கலாம் என்று பொதுவாக கூறப்பட்டாலும், அவர்களின் மரணத்திற்கான உண்மையான காரணம் தெரியவில்லை.

இறந்து போன இளம் பெண்களின் உடல்கள் நேற்று பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. விசாரணையும் தொடங்கியுள்ளது. இதுபற்றி பொலிஸ் துறையின் மூத்த அதிகாரி லோரனா சிகோட்டி தெரிவிக்கையில்,

இளம்பெண்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளதால் இது குறித்து விசாரணை நடத்தப்படும்.

ஆட்கடத்தல் தொடர்பாக எகிப்து மற்றும் லிபியாவைச் சேர்ந்த இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ...வுகணையை பரிசோதித்தது இந்தியா

...முயற்சி ஒடிசா - சாண்டிபுர் கடற்கரைப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

கடந்த சோதனைகளை விடவும் இந்த சோதனையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் நிர்பை தொடர்பில் இறுதி முடிவுகள் இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

வெற்றிகரமாக அமைந்துள்ளதாக பாதுகாப்பு ஆராய்ச்சி அமைப்பின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


பயமில்லாத எனப் பொருள்படும் குறித்த ஏவுகணையின் தயாரிப்பு பணிகள் 2007 ஆம் ஆண்டுகளில் ஆரம்பமானதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன் பின்னர் தொடர்ந்து நடைபெற்ற 4 சோதனை முயற்சிகளிலும் தோல்விகள் ஏற்பட்டன. இதன்போது பயணப்பாதையை விட்டு பயணித்தல், பாதையை விட்டு விலகிச்செல்லல் போன்ற தோல்விகள் ஏற்பட்டுள்ளன.

எனும் மேற்குறித்த 4 சோதனைகளில் ஒரு சோதனையில் மட்டும் சிறிதளவு முன்னேற்றம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இதன் 5ஆவது சோதனை...

# அமெரிக்காவிடமிருந்து பல பில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்களை கொள்வனவு செய்ய தென்கொரியா முன்வந்துள்ளது

## ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவிப்பு



(சியோல்)

அமெரிக்காவிடமிருந்து பல பில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்களை தென்கொரியா கொள்வனவு செய்யவுள்ளதாக, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

தென்கொரியாவில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே, அவர் இதனைக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தபோது, உலகளாவிய ரீதியில் மிகப் பெரிய இராணுவ உபகரணங்களை நாம் வைத்திருக்கும் நிலையில், எம்மிடம் ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கு தென்கொரியா முன்வந்துள்ளது.

இந்நிலையில், பல பில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்காக தென்கொரியா எம்மிடம் விண்ணப்பித்துள்ளது.


இதனையடுத்து, தென்கொரியாவுக்கு ஆயுதங்களை விற்பனை செய்வதற்கு நாமும் ஒத்துக்கொண்டுள்ளோம் என்றார்.

இதேவேளை, அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் தத்தமது பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரித்துள்ளதென்பதுடன், தேவைப்படின் எமது இராணுவத்திறன்களை பயன்படுத்தவும் நாம் தயங்கமாட்டோம்.

வடகொரியாவின் நடவடிக்கைகளை நாம் ஒன்றாக இணைந்து எதிர்ப்போம் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# தொலைக்காட்சி நிலையத்தில் தீவிரவாதிகள் தாக்குதல்

## ஆப்கானிஸ்தானில் சம்பவம்



(காபூல்)

ஆப்கானிஸ்தானின் காபூல் நகரிலுள்ள தனியார் தொலைக்காட்சி நிலையத்தில் புகுந்த தீவிரவாதிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 2 பேர் உயிரிழந்ததுடன், 20 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் பர்ஷோத் மொழி தொலைக்காட்சி நிலையம் உள்ளது. நேற்று முன்தினம் காலை இங்கு ஆயுதங்களுடன் புகுந்த தீவிரவாதிகள் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் காவலர் ஒருவரும், அலுவலக ஊழியர் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

இதனையடுத்து, அலுவலகத்தில் இருந்த மற்ற பணியாளர்கள் தங்களது உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ள போராடினர்.

தாக்குதல் குறித்து தகவலறிந்த பாதுகாப்புப் படையினர், அலுவலகத்தின் ஒரு பக்க சுவரை உடைத்து தீவிரவாதிகள் மீது அதிரடி தாக்குதலை நடத்தினர்.

இதில் இரண்டு தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் காரணமாக தொலைக்காட்சி நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டது.

இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ் தீவிரவாத இயக்கம் பொறுப்பேற்றுள்ளது. (இ-7)

# ...ரியாவின் அணு ஆயுத ...னைக்கு தீர்வு அவசியம்

## ...ாதிபதி ட்ரம்ப் உறுதி



அதைத் தொடர்ந்து தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன்னுடன் கேம்ப் ஹம்ப்ரேஸில் அமைந்துள்ள அமெரிக்க இராணுவ தளத்துக்கு ஹெலிகொப்டரில் சென்றார்.

அங்கு அவர் அமெரிக்கா மற்றும் தென்கொரியா இராணுவத்தினரை சந்தித்துப் பேசினார். அதைத் தொடர்ந்து நிருபர்களிடம் பேசினார். அப்போது வடகொரியாவின் அணு ஆயுதத் திட்டங்களால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களுக்கு தீர்வு கண்டே ஆக வேண்டும் என்று கூறினார்.

மேலும் அவர் வடகொரியா விவகாரம் தொடர்பாக இராணுவத் தளபதிகளை சந்தித்து பேசியது தொடர்பாக குறிப்பிடுகையில்,

கடைசியில் இதுதான் நிச்சயம் வேலை செய்யும். இதுதான் எப்போதும் வேலை செய்யும்.

அது வேலை செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டார். ஆனால் இதுபற்றி அவர் விரிவாக எதுவும் குறிப்பிடவில்லை.

தென்கொரியாவின் ஜனாதிபதி மூன் ஜே இன்னை அவர் பாராட்டினார். அப்போது அவர் வடகொரியாவை எப்படி எதிர்கொள்வது என்பதில் கருத்து வேறுபாடுகள் தென்கொரியாவின் மிகப்பெரிய ஒத்துழைப்பு பாராட்டுக்கு உரியது என்றும் குறிப்பிட்டார். (இ-7)

# வியட்நாமில் பாரிய அனர்த்தம் உயிரிழந்தோர் 70ஆக அதிகரிப்பு

(ஹனோய்)

வியட்நாமில் கடும் மழையுடன் ஏற்பட்ட சூறாவளி மற்றும் மண்சரிவு காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 70ஆக அதிகரித்துள்ளது.


அத்துடன் 30 பேர் காணாமல் போயுள்ள நிலையில், அவர்களைத் தேடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வியட்நாமில் கடந்த சில நாட்களாக கடும் மழை பெய்துவருவதுடன், கடந்த சனிக்கிழமை தாம்ரே எனும் சூறாவளி தாக்கியுள்ளது.

இதனையடுத்து, அங்கு மண்சரிவு ஏற்பட்டுள்ளது. இந்த அனர்த்தங்களில் சிக்கி 70 பேர் உயிரிழந்துள்ளதுடன், 30 பேர் காணாமல் போயுள்ளனர்.

மழை காரணமாக வீதிகள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கியுள்ள நிலையில், போக்குவரத்திலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

சுமார் ஒரு இலட்சம் வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன், சுமார் ஒரு மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக, அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.



மேலும், மழை தொடர்ச்சியாகப் பெய்துவரும் நிலையில் ஆறுகளில் நீர்மட்டம் அதிகரித்து வருகின்றது.

இதன் காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் காணப்படுவதாகவும், அனர்த்த முகாமைத்துவ நிலையம் எச்சரித்துள்ளது. (இ-7)

# நாடு நாளுக்கு நாள் அதள பாதாளத்தை நோக்கிச் செல்கிறது

## பலசேனா ஞானசார தேரர் கவலை

(கொழும்பு)

நாட்டுக்குத் தேவையான பெற்றோலை சரியாக விநியோகித்துக்கொள்ள முடியாத ஒரு அரசாங்கம் தான் அதிகாரத்தைப் பகிரப் பார்க்கின்றது என பொதுபல சேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் சுட்டிக்காட்டியுள்ள அதே வேளை நாடு நாளுக்கு நாள் அதள பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாகவும் கவலையுடன் தெரிவித்தார்.



கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# ரஷ்ய போர்க்கப்பல் கொள்வனவு மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்

## ரொகான் பலேவத்த எச்சரிக்கை

(கொழும்பு)

நாடு ஏற்கனவே பொருளாதார நெருக்கடிகளுக்குள் சிக்கியுள்ள நிலையில், ரஷ்யாவிடமிருந்து போர்க்கப்பலைக் கொள்வனவு செய்வது மோசமான பொருளாதார விளைவுகளை ஏற்படுத்தும் என்று இலத்திரனியல் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியாளர் சங்கத்தின் தலைவரான ரொகான் பலேவத்த எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மைத்துநரான பலேவத்த, இலங்கை இலத்திரனியல் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியாளர் சங்கத்தின் கூட்டத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

8 ஆண்டுகளுக்கு முன்னர் போர் வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு விட்ட நிலையில் அதிக விலைகொண்ட போர்க் கப்பல் அவசியமற்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவிடம் இருந்து இலங்கை கடற்படைக்காக 158.5 மில்லியன் டொலர் பெறுமதியான ஜிபார்ட் 5.1 (Gepard 5.1) ரகத்தைச் சேர்ந்த ஆழ்கடல் ரோந்துக் கப்பல் ஒன்றைக் கொள்வனவு செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

2020 ஜனாதிபதித் தேர்தலில் நாம் போட்டியிடவுள்ளதாக ரொகான்பலே வத்த கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சுமந்திரனைச் சந்தித்தார் அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரி



(கொழும்பு)

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பதில் உதவிச் செயலர் ரொம் வஜ்டா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த இந்தச் சந்திப்பின் போது, இலங்கையின் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில், கொழும்பிலுள்ள அமெரிக்க துணை தூதுவர் ரொபேர்ட் ஹில்டனும் கலந்து கொண்டார். (இ-7)

# நாடாளுமன்றத்துக்குள் நுழைய கீதா குமாரசிங்கவுக்குத் தடை

(கொழும்பு)

நாடாளுமன்ற சிறப்புரிமைகளைப் பயன்படுத்தி கீதா குமாரசிங்க நாடாளுமன்ற வளாகத்துக்குள் நுழைவதற்கு சபாநாயகர் கருஜெயசூரிய தடை விதித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிப்பதற்கு கீதா குமாரசிங்க தகுதியற்றவர் என்று உச்சநீதிமன்றம் கடந்த வாரம் அளித்த தீர்ப்பு, நேற்று முன்தினம் பிற்பகல் நாடாளுமன்ற சபாநாயகருக்கு முறைப்படி அறிவிக்கப்பட்டது.

இதையடுத்தே, கீதா குமாரசிங்கவை நாடாளுமன்ற சிறப்புரிமைகளைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்துக்குள் நுழைவதற்கு அனுமதிக்கக் கூடாது என்று சபாநாயகர் உத்தரவிட்டுள்ளார்.

அதேவேளை, தகுதி நீக்கம் செய்யப்பட்ட கீதா குமாரசிங்கவுக்குப் பதிலாக, காலி மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர்களின் விருப்பு வாக்குகளில் அடுத்த நிலையில் உள்ள முன்னாள் அமைச்சர் பியசேன கமகேவை நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்க ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நேற்று முன்தினம் முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக தேர்தல் ஆணையத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், பியசேன கமகே நாடாளுமன்ற உறுப்பினராக அறிவிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே தகுதி நீக்கம் செய்யப்பட்ட கீதா குமாரசிங்க, கடந்த இரண்டு ஆண்டுகளில் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்த போது பெற்றுக் கொண்ட ஊதியம் மற்றும் சிறப்பு கொடுப்பனவுகள் போன்றவற்றை மீளச்செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### பிரச்சினைகளை அணுகும் விதம்!

நம் நினைவேடுகளை மெல்லப் புரட்டிப் பார்த்தால் நமக்கே வியப்பாக இருக்கும். எத்தனை எத்தனை துன்பங்களைச் சந்தித்தாயிற்று! எப்படியெல்லாம் அவற்றை வெற்றி கொண்டிருக்கின்றோம் அல்லது சமாளித்திருக்கின்றோம்? குறைந்தபட்சம் அவற்றால் தாக்குண்டு நமக்குப் பழகிப் போய்விட்டதுமுண்டு.

நாம் சந்திக்காத தர்மசங்கடங்கள் அல்லது சோகங்கள் இந்த உலகத்தில் இனி என்ன இருக்க முடியும்?

அனைத்துக்கும் பழகிப் போய்விட்ட நாம் ஏனோ இன்று ஒரு பிரச்சினை வந்து விட்டது என்பதற்காக பிஸ்கெட் பறிக்கப்பட்ட பிள்ளையைப்போல் முகத்தை வைத்துக் கொள்கிறோம். ஒரு நூறு ரூபாய் நோட்டைத் தொலைத்துவிட்டால் கூட இதயத்தில் இமயத்தை தூக்கி வைத்துக்கொண்டு சுமப்பதைப்போல் சிரமப்படுகின்றோம். தினம் தினம் ஒவ்வொருவருக்கும் விதவிதமான பிரச்சினைகள். ஆனால் இதேபோன்ற பிரச்சினைகளை நாம் சந்தித்தவர்கள் தாம். அதன்படி இந்நேரம் நம் மனம் அடிபட்டு அடிபட்டு மரத்துப்போயிருக்க வேண்டுமல்லவா?

பலர் விடயத்தில் இந்த அணுகுமுறை அறவே இல்லை. அன்றாடப் பிரச்சினைகளை ஏதோ முற்றிலும் புதிய ஒன்றை அணுகுவதைப் போல் அணுகுகிறார்கள்.

16 ஆம் வாய்ப்பாடு நன்கு தெரிந்த ஒரு குழந்தையிடம் 16×16 எவ்வளவு என்று கேட்டால் உடனே விடையைச் செல்லாமல் பதினாறொன்று பதினாறு பதினாறு ரெண்டு முப்பத்திரண்டு என்று ஆரம்பிப்பதைப் போன்றது இது.

நாம் சந்தித்த எவ்வளவோ பிரச்சினைகளை இன்று நம் நண்பர்களிடமும் உறவினர்களிடமும் வேடிக்கையாகச் சொல்லி மகிழ்வதில்லையா? அவற்றையே நகைச்சுவையாக ஆக்கி இன்று சிரிப்பதில்லையா?

அந்த மனநிலையில் ஒரு 50 சதவிகிதத்தை அந்தப் பிரச்சினையை அணுகும் போதே ஏற்படுத்திக கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்?

கொஞ்சம் எளிமைப்படுத்திச் சொல்வது என்றால் ஒரு பிரச்சினை வந்ததுமே அதை ஒரு பத்து நாள் கழித்து எப்படி எடுத்துக் கொள்வோம். ஒரு வருடம் கழித்து அந்தப் பிரச்சினையைப் பற்றி என்ன நினைப்போம்? என்கிற கண்ணோட்டத்தில் சிந்தித்தால் பிரச்சினை என்பது நமக்கு ஒரு பெரிய மலைப்பாகத் தெரியாது.

இது ஒரு தற்காலிகப் பிரச்சினையே! ஏற்கனவே நாம் பெற்றிருக்கும் அனுபவத்தை வைத்து இதை நாம் வென்றுவிட முடியும் என்கிற உற்சாகக் காற்றை இதய பலூனில் நிரப்பிக் கொள்ள வேண்டும்.

இந்த மனநிலை மலைத்து விடாமலும் சோர்ந்து விடாமலும் திறமையாகவும் பிரச்சினைகளைச் சமாளிக்க நமக்கு மிகவும் உதவும்.

**லேனா தமிழ்வாணன்**

# தரமற்ற பெற்றோலை நான் இறக்கமாட்டேன்

## அமைச்சர் அர்ஜுன உறுதி



(கொழும்பு)

எவர் என்ன கூறினாலும் என்னை வீட்டுக்கு அனுப்பினாலும் நான் அமைச்சராக இருக்கும் வரை தரமில்லாத பெற்றோலை கப்பலில் இருந்து இறக்க மாட்டேன். அத்துடன் இந்த விடயத்தில் ஜனாதிபதியோ அல்லது பிரதமரோ எனக்கு அழுத்தம் பிரயோகம்செய்யவில்லை. மேலும் இந்தப் பிரச்சினையை ஒரு சிலர் அரசியலாக்க முயற்சிக்கின்றனர். தயவு செய்து இந்தப் பிரச்சினையைத் தீர்க்க எனக்கு இடமளியுங்கள் என துறைமுக மற்றும் கப்பல் துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க சபையில் தெரிவித்தார்.

இந்த நிலைமைக்கு நாட்டைக் கொண்டு வந்தமைக்கு காரணமானவர்களை இனங்காணும் வகையில் விசாரணையை ஆரம்பிக்கவுள்ளோம். இந்த விசாரணையின் போது நான் முன்னின்று செயற்படுவேன். இதன்படி குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்குவோம் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நிலையியற் கட்டளை 23 இன் கீழ் 2 தினேஷ் குணவர்த்தன மற்றும் அநுர குமார திஸாநாயக்க எம்.பிக்கள் வினவிய கேள்விக்கு பதலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைக்கு எமக்கு டீசலில் எந்தவொரு குறையும் இல்லை. பெற்றோல் மாத்திரமே எமக்கு போதாமல் உள்ளது. எனினும் நாம் சாதாரண தரகின் அடிப்படையிலேயே எரிபொருளை கொண்டு வருகின்றோம். இந்தப் பிரச்சினைக்கு தரமில்லாத எரிபொருள் வந்தமையே பிரதான காரணமாகும். எனினும் அந்தக் கப்பலை நாம் திருப்பி அனுப்பி விட்டோம். என்றாலும் இன்று வரை குறித்த கப்பல் திருகோணமலையில் தரித்து வைக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இன்று வியாழக்கிழமை பிரச்சினைகளை தீர்த்து சாதாரண நிலைமைக்கு கொண்டுவர முடியும். ஏற்கனவே புதன்கிழமை இரவு 11 இற்கு வரக் கூடியதாக இருந்த கப்பல் 9 மணிக்கு வரவிருப்பதாக எமது செய்மதி தகவல் தெரிவிக்கின்றன.

அத்துடன் தற்போது எமக்கு சந்தேகம் ஒன்று உள்ளது. சாதாரணமாக பெற்றோல் விநியோகம் நடந்து கொண்டிருந்தது. எனினும் திடீரென வந்த குறுந் தகவலை அடுத்தே நாட்டு மக்கள் பதற்றமடைந்தனர். அத்துடன் அந்தத் தகவல் வந்ததை அடுத்து எமது கணனி கட்டமைப்புகள் இயங்கவில்லை. எமது சுத்திகரிப்பு நிலையத்தில் மின் துண்டிப்புக் கோளாறும் ஏற்பட்டது. விநியோகிப்பதற்கு பெற்றோல் இருந்தும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் விநியோகம் செய்யாமல் இருந்தமை போன்ற சிக்கலான பிரச்சினைகள் எமக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளன. எவ்வாறாயினும் இது தொடர்பாக நாம் விசாரணை செய்யவுள்ளோம்.

இந்த நிலைமைக்கு நாட்டைக் கொண்டு வந்தமைக்கு காரணமானவர்களை இனங்காணும் வகையில் விசாரணையை ஆரம்பிக்கவுள்ளோம். இந்த விசாரணையின் போது நான் முன்னின்று செயற்படுவேன். இதன்படி குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்குவோம்.


எமது நாட்டை பொறுத்த வரையில் 90 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருள் மாத்திரமே களஞ்சியப்படுத்த முடியும். இது நான் அமைச்சராக பதவியேற்க முன்பு இருந்த நிலைமை தான். அதுவே இன்னும் உள்ளது. இதன் பிரகாரம் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து முன் செல்ல வேண்டும்.

அத்துடன் நாம் சாதாரணமாக ஒரு நாளைக்கு 2 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் பெற்றோலையே விநியோகம் செய்கின்றோம். எனினும் ஞாயிற்றுக்கிழமை விநியோகம் செய்வதில்லை. கடந்த சனிக்கிழமை 2 ஆயிரத்து 800 மெற்றிக் தொன் பெற்றோல் விநியோகம் செய்துள்ளோம். பொதுவாக ஞாயிற்றுக்கிழமைகளில் விநியோகம் செய்யாவிடினும் கடந்த ஞாயிற்றுக்கிழமை 963 மெற்றிக் தொன் பெற்றோல் விநியோகம் செய்துள்ளோம். கடந்த திங்கட்கிழமை 2 ஆயிரத்து 966 மெற்றிக் தொன் விநியோகம் செய்தோம். நேற்று முன்தினம் 3ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோல் விநியோகம் செய்துள்ளோம். இன்று வியாழக்கிழமை சாதாரண நிலைமைக்கு நாடு திரும்பும்.

இருந்த போதிலும் வேறு காலங்களில் 2ஆயிரத்து 500 மெற்றிக் தொன் கோரிக்கை இருந்தாலும் தற்போது மக்கள் பதற்றமடைந்தமையை அடுத்து 4 ஆயிரத்து 700 மெற்றிக் தொன் பெற்றோல் கோரிக்கை எழும்பியுள்ளது. தரமில்லாத பெற்றோலை எவர் கூறினாலும் நான் அமைச்சராக இருக்கும் வரை கப்பலில் இருந்து இறக்க மாட்டேன்.

என்னை வீட்டுக்கு அனுப்பினாலும் நாட்டுக்கு தீங்கானதை நான் செய்ய மாட்டேன். அத்துடன் பிரச்சினை விடயத்தில் ஜனாதிபதியோ அல்லது பிரதமரோ எனக்கு அழுத்தம் பிரயோகிக்கவில்லை. மேலும் இந்தப் பிரச்சினையை ஒரு சிலர் அரசியலாக்க முயற்சிக்கின்றனர்.

தயவு செய்து இந்தப் பிரச்சினையை தீர்க்க எனக்கு இடமளியுங்கள் என அவர் கோரிக்கை விடுத்தார். (இ-7)




# இலங்கைத் தமிழர்களுக்காக குரல் கொடுத்த விஜயகாந்த்



(கொழும்பு)

இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மட்டுமல்லாமல் மலையகப் பகுதிகளிலும் தமிழர் அடையாளங்களை அழிக்க இலங்கை அரசு முயற்சித்து வருவதற்கு தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்திலிருந்து இலங்கை விடுதலை பெற்ற பின்னர், சிங்கள ஆட்சியாளர்களின் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக போராடி இந்திய வம்சாவழி தமிழர்களின் உரிமைகளை நிலைநாட்டியவர் சௌமியமூர்த்தி தொண்டமான்.

மலையக மக்களின் நம்பிக்கைக்கு உரியவராகத் திகழ்ந்த அவரைப் போற்றும் வகையில், இலங்கை மத்திய மாகாணத்தில், தொண்டமான் தொழிற்பயிற்சி மையம், தொண்டமான் கலாசார மன்றம், தொண்டமான் மைதானம் என சில அரசு நிறுவனங்களுக்கு அவருடைய பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இவற்றில் தொண்டமான் தொழிற்பயிற்சி மையத்துக்கு இந்திய அரசு நிதியுதவி அளித்து வருகிறது. இந்நிலையில், இம்மையங்களில் இருந்து தொண்டமான் பெயரை நீக்கிவிட்டு, அந்தந்தப் பகுதியின் பெயரை இலங்கை ஆட்சியாளர்கள் சூட்டியுள்ளனர். இந்த நடவடிக்கை அதிர்ச்சியளிக்கிறது. சிங்கள ஆட்சியாளர்களின் இந்த நடவடிக்கையை மத்திய அரசு கண்டிக்க வேண்டும். மேலும், அரசு மையங்களுக்கு மீண்டும் தொண்டமான் பெயரைச் சூட்டவும் பிரதமர் வலியுறுத்த வேண்டும்" என விஜயகாந்த் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ-7)

# 20,000 மெற்றிக்தொன் அரிசி அனுப்பி வைப்பு



(கொழும்பு)

இறக்குமதி செய்யப்பட்ட சுமார் 136 கோடி ரூபா பெறுமதியுடைய 20 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசி வர்த்தக நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வாரங்களில் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நாட்டரிசியே இலங்கை சதொச மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களுக்கு இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. டிசெம்பர் மாதமளவில் மேலும் 50 இலட்சம் மெற்றிக்தொன் நாட்டரிசி, 30ஆயிரம் மெற்றிக்தொன் சம்பா அரிசி மற்றும் 50 ஆயிரம் மெற்றிக்தொன் வெள்ளை கெக்குளு அரிசியை இறக்குமதி செய்ய எதிர்பார்த்துள்ளதாக அந்த அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

# இலஞ்சம் கொடுக்க முற்பட்டவர்களுக்கு எதிராக அர்ஜுன ரணதுங்க முறைப்பாடு செய்ய வேண்டும்

## நாமல் வலியுறுத்து



(கொழும்பு)

தனக்கு இலஞ்சம் கொடுக்க முற்பட்டவர்களுக்கு எதிராக அமைச்சர் அர்ஜுன ரணதுங்க முறைப்பாடு செய்ய வேண்டும் என அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வலியுறுத்தினார்.


முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நிர்மாணிக்கப்பட்ட அம்பாந்தோட்டை தங்கல்லை அங்குனுகொலபெலஸ்ச சிறைச்சாலை வளாகத்தை நேற்று முன்தினம் பார்வையிட சென்ற அவர் அங்கு ஊடகங்களுக்கு மேலும் கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிலர் தனக்கு இலஞ்சம் கொடுக்க முற்பட்டதாக அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் அர்ஜுன ரணதுங்க வெளிப்படையாக குற்றம் சுமத்தியுள்ளார். இந்த அரசாங்கத்தில் உள்ளவர்கள் தங்கள் இயலாமையை மறைத்துக்கொள்ள அமைச்சர்களுக்கு இலஞ்சம் கொடுத்தாவது யாவனைக்கு பொருத்தமில்லாத எரிபொருளை நாட்டிற்குள் கொண்டுவர முயற்சிக்கின்றனர்.

அர்ஜுன ரணதுங்கவை அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கவே இந்த சூழ்ச்சி இடம்பெறுவதாக விஜயதாஸ ராஜபக்ஷ கூறியுள்ளார். அம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்பனை செய்வதற்கு எதிர்ப்பு வெளியிட்டதால் அர்ஜுன ரணதுங்க அந்த அமைச்சு பதவியில் இருந்து நீக்கப்பட்டமையானது பிழை என கூறியமைக்காக விஜதாஸ ராஜபக்ஷ அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். இந்த நிலையில் தனக்கு இலஞ்சம் கொடுக்க முற்பட்டவர்களுக்கு எதிராக அமைச்சர் அர்ஜுன ரணதுங்க முறைப்பாடு செய்ய வேண்டும். அல்லது அவர் கூறிய விடயங்களை வைத்து பொலிஸார் இதனை விசாரணை செய்ய வேண்டும் என நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-7)



# எரிபொருளை வைத்து எதிர்ப்பைப் புதுப்பித்த இரண்டு அமைச்சர்கள்



(கொழும்பு)

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், எரிபொருள் தட்டுப்பாடு தொடர்பாக கடுமையான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன. இதன்போது, பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவுக்கும் விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜெயசேகரவுக்கும் இடையில் கடுமையான வாதங்கள் இடம்பெற்றன.

பெற்றோலியப் பிரச்சினை தொடர்பாக அமைச்சர் அர்ஜுன, அமைச்சரவைக்கு விளக்கமளிக்கும் போது இடைமறித்த அமைச்சர் தயாசிறி இந்நிலை, ஜனாதிபதியை இக்கட்டான நிலைக்குக் கொண்டு செல்லும். மக்கள், ஜனாதிபதியையே திட்டுகின்றனர் என்றார். இதனாலேயே வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டன.

இதன்போது உரையாற்றிய, மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரும் முன்னாள் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க, இது சிறிய பிரச்சினை அல்ல. எண்ணெயைக் களஞ்சியப்படுத்தி வைக்காத நிலையே இப்போது உள்ள பிரச்சினை. ஆனால், இது ஒரு மாபியா பிரச்சினை என்பதை மறக்க வேண்டாம். இதை இலகுவாக எடுக்க வேண்டாம். எனது காலத்திலும் இந்த மாபியா செயற்பட்டது என்று தெரிவித்தார்.

இதன்போது அமைச்சர் தயா கமகே, அமைச்சர் அர்ஜுனவுக்கு ஆதரவாக உரையாற்றினார்.

பின்னர் உரையாற்றிய அமைச்சர் அர்ஜுன, இந்தப் பிரச்சினை தொடர்பாக உடனடியாக விசாரணையொன்றை மேற்கொள்ள வேண்டும். எண்ணெய் ஸ்ட்ரைக் என்று ஒரு குறுஞ்செய்தி பரப்பப்பட்டது. இதுபற்றி விசாரணையொன்றை மேற்கொள்ள வேண்டும்.


நாங்கள் எப்படியாவது இந்தப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம் என்று தெரிவித்துள்ளார்.

அந்தோடு, அமைச்சர் தயாசிறியைப் பார்த்து, இந்தப் பிரச்சினையில் அமைச்சர் தயாசிறி இலாபம் தேடுவதை நினைத்து அவருக்கு அவருடைய அமைச்சைச் சரியாக செய்ய முடியவில்லையே என்று நான் கவலைப்படுகின்றேன் என்றும் கிண்டலடித்தார்.

இதனால் இருவருக்கும் இடையில் மீண்டும் வாதப்பிரதிவாதங்கள் ஆரம்பித்தன. நல்லாட்சி அரசில் சுதந்திரக்கட்சி சார்பில் அமைச்சர் தயாசிறியும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் அர்ஜுன ரணதுங்கவும் அங்கம் வகிக்கின்றனர்.

இருவருக்கும் இடையில் விளையாட்டுத்துறை அமைச்சு தொடர்பாக நீண்ட காலமாக பிரச்சினை நிலவி வருவது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சைட்டம் கல்லூரிக்கு எதிரான உண்ணாவிரதப் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது



(கொழும்பு)

சைட்டம் தனியார் மருத்துவப் பல்கலைக்கழகத்தை மூடுமாறு கோரி கொழும்பில் ஆரம்பிக்கப்பட்ட சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் மூன்றாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

இந்த உண்ணாவிரதப் போராட்டம் கொழும்பு ஹோட்டன் பகுதியிலுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முன்பாக கூடாரம் அமைத்து நடத்தப்படுகின்றது.

அரச பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த பெற்றோர் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்திருந்தனர்.

இதேவேளை இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் நோக்கில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய மாணவர்கள் நேற்று முன்தினம் பாரிய ஆர்ப்பாட்டமொன்றை கொழும்பில் நடத்தியிருந்தனர். (இ-7)

# சைட்டத்திற்கு எதிராக பேராதனை பல்கலை மாணவர் போராட்டம்





(கொழும்பு)

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி விவகாரத்தில் நியாயமான தீர்வினை பெற்றுத் தரும்படி கோரிக்கை விடுத்து பேராதனைப் பல்கலைக் கழக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் போராட்டம், நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், பேராதனையிலிருந்து கண்டிவரை மாபெரும் பேரணியையும் நடத்தினர்.

இதன்போது, ஆர்ப்பாட்டக்காரர்கள் பேராதனையில் இருந்து கண்டி வரை நான்கு இடங்களில் பாதையில் டயர்களையும், கண்டி பேருந்து நிலையத்தில் இரண்டு உருவப் பொம்மைகளையும் எரித்துள்ளனர்.


இதேவேளை, சைட்டம் நிறுவனம் அரசுடைமையாக்கப்பட வேண்டுமே தவிர போலி தீர்வுகளை முன்வைத்து மக்களை திசை திருப்ப வேண்டாம் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மாணவர் சங்கத் தலைவர் நிபுன சங்கல்ப கூறுகையில்,

ஜனநாயகம், நல்லாட்சி என்பவற்றை பாதுகாப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அரசு இலவச கல்வி வழங்குவதாக கூறி, மறுத்து வருகின்றது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# கலப்புமுறைத் தேர்தல் முஸ்லிம்களுக்கு பாதகம்

## முன்னாள் முதல்வர் நஷீர் தெரிவிப்பு



(ஏறாவூர்)

கலப்புமுறை தேர்தல் முறையானது இலங்கை முஸ்லிம் மக்களுக்கு பாதகமாகும் என கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஷீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

ஏறாவூர் பிரதேசத்திலுள்ள சுமார் 5000 முஸ்லிம் தமிழ் மாணவர்களுக்கு புத்தகப்பை, எழுதுகருவி உள்ளிட்ட பொருட்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அல் அஷ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

விகிதாசார தேர்தல் முறையை இல்லாதொழித்து தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ள கலப்பு முறை மூலமான எதிர்கால தேர்தல் முடிவுகள் அனைத்தும் இந்த நாட்டின் முஸ்லிம் அரசியல் பிரதிநிதித்துவங்கள் பறிக்கப்பட்டிருப்பதை பிரதிபலிப்பதாக அமையும் என்றும் இத்தகைய நடைமுறை எதிர்காலத்தில் முஸ்லிம்களுக்கு ஏற்படப்போகும் பாதிப்பை உணர்த்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இந்த சட்டமூலம் நாடாளுமன்றில் அங்கீகரிக்கப்படுவதற்கு ஆதரவளித்த அனைத்து முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சமூகத் துரோகிகள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமின்றி, கலப்பு முறை தேர்தல் சட்டமூலம் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தின் அரசியல் உரிமைகளை குழிதோண்டி புதைப்பதாக சுட்டிக்காட்டிய முன்னாள் முதலமைச்சர் நஷீர் அஹமட், புதிய கலப்பு முறைத் தேர்தல் மூலம் தெரிவாகப் போகும் முஸ்லிம் சிறுபான்மையினரின் பரிதிநிதித்துவங்கள் நாடாளுமன்றத்திலும் மாகாண சபைகளிலும், உள்ளூராட்சி மன்றங்களிலும் கணிசமாகக் குறையும் வாய்ப்பு உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் இது தொடர்பில் பகிரங்கமாக விவாதிப்பதற்கு தான் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# புதிய யாப்பிற்காகவே ஜனாதிபதியாக மைத்திரிபால தெரிவு செய்யப்பட்டார்

(கொழும்பு)

இலங்கையில் புதிய யாப்பு ஒன்றை உருவாக்கவே 98 வீதமான மக்கள் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவை கொண்டு வந்தனர் என்பதை புரிந்து கொள்ள வேண்டும் என்று இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் பேராயர் ஆசிரி பெரேரா தெரிவித்துள்ளார்.

புதிய யாப்பு உருவாக்கம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு தேர்தல் வாக்கெடுப்பில் தெரிந்தெடுக்கப்பட்டதன் அடிப்படை நோக்கத்தை தெளிவான, மக்கள் ஆணையை பெற்ற அரசு பலவீனமான அரசியல், மதசார்பானவர்களின் நெருக்கடிகள் மத்தியிலும் புதிய யாப்பு ஒன்றை வரைய தொடர்ந்து எடுக்கும், அரசுசார்பான அனைத்து அரசியல் கட்சிகளினதும் விடாமுயற்சியை குறித்து இலங்கை மெதடிஸ்த திருச்சபை தனது பாராட்டுக்களை தெரிவிக்கின்றது.

அதேவேளை கடந்த ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ (47வீதம்) வாக்குகளையும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன (51வீதம்) வாக்குகளையும் பெற்றிருந்தனர்.

நாம் 2015 இல் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் புதிய யாப்பு ஒன்றை முன்வைப்பதாக உறுதியளித்தனர். இதனை சிறிவர சிந்திப்பின் இலங்கையில் புதிய யாப்பு ஒன்றை உருவாக்கவே 98 வீதமான மக்கள் 2015 ஜனவரி 8 ஆம் திகதி வாக்களித்தனர் என புரிந்து கொள்ள வேண்டும்.

தற்போது புதிய யாப்பு முறையை எதிர்ப்பவர்கள் இலங்கையின் பெரும்பான்மை மக்களின் அபிலாசைகளுக்கு முரணாக செயற்படுகின்றனர் என்பதனை உணர வேண்டும்.


இதனால் இவ் யாப்பு உருவாக்கத்திற்கு எதிராக செயற்பட எத்தனிக்கும் நபர்கள், குழுக்கள் இவ்வித செயற்பாட்டை கைவிட்டு இலங்கையில் அனைத்து மக்களின் அபிலாசைகளை உள்வாங்கும் புதிய யாப்பு உருவாக்க ஏற்படும் வேற்றுமைகள், இணக்கப்பாடு அற்ற நிலைகள் ஏற்படினும் அவைகள் மத்தியில் சுமுகமாக செயற்பட பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஆனாலும் இவைகள் குறித்து தகுந்த இடங்களில் விவாதித்து செயற்பட வேண்டுமேயன்றி தகாத சுலோகங்களை பாவித்து, கோஷம் எழுப்பி மக்களை வீதிகளுக்கு இழுத்து வருவதும், அவர்களை குழப்புவதும் முறையற்றது.

எனவே இலங்கை மெதடிஸ்த திருச்சபை முறையான விவாதத்திலும், கலந்துரையாடல்களிலும் ஈடுபடவும், நாட்டில் ஏற்பட்ட உயிரிழப்பு ஏற்படுத்திய சம்பவங்கள் மீண்டும் ஏற்படாவண்ணம் தவிர்க்கவும், ஏற்ற தீர்வு காணவும் அதற்கு ஏற்ற யாப்பு உருவாக்கவும் செயற்பட அனைத்து நாட்டு மக்களையும் அழைப்பதோடு, சிறப்பாக கிறிஸ்தவர்கள் இதற்காக செபிக்கும்படியாகவும் கேட்டுக் கொள்கிறோம்.

கடவுளின் அனுமதி அனைத்து மனித புரிந்துகொள்ளுதலையும் கடந்து இலங்கையர்கள் மேலும் தங்கியிருப்பதாக என குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# ஜம்பு பழச்செய்கை







**Syzygiumaqueum** - நீர் தன்மையானறோஸ் அப்பிள்
**Syzygiumjambos** - றோஸ் அப்பிள்/ஜம்பு
**Syzygiummalaccense** - மலாய்றோஸ் அப்பிள்
**Syzygiumsamarangense** - ஜாவாறோஸ் அப்பிள்

பொதுவாக தமிழில் ஜம்பு என அறியப்படும் தாவரம் றோஸ் அப்பிள், மெழுகு அப்பிள் என வெவ்வேறு பெயர்களிலும் அழைக்கப்படுகின்றது. இது வெப்ப மண்டல மற்றும் இடை வெப்ப மண்டலத்துக்குரிய பயிர். தென்கிழக்கு ஆசியாவிற்கு சொந்தமானது. இலங்கை, இந்தியா உட்பட உலகம் முழுவதும் பரவலாக வளர்க்கப்படுகின்றது. நான்கு வகையான இனங்கள் உள்ளன.

இலங்கையைப் பொறுத்த மட்டில் அதிகளவில் ஜாவா றோஸ் அப்பிள் இனங்கள் பயிரிடப்படுகின்றன.

### போசனை முக்கியத்துவம்

அதிக அளவு விற்றமின் "சி", பொட்டாசியம் மற்றும் கல்சியத்தை கொண்டுள்ளது.

### மருத்துவகுணம்

உயர் நார்ச்சத்தை கொண்டிருப்பதனால் மலச்சிக்கலை தடுத்து செரிமானத்தை தூண்டும்.

மரப்பட்டையில் உள்ள அல்கலைட்டு சேர்வை நீரிழிவு நோயை கட்டுப்படுத்தக்கூடியது.

ஈரல், சிறுநீரகத்தில் இருந்து நச்சுத்தன்மையை அகற்றுகின்றது. கொலஸ்ரோலை கட்டுப்படுத்துவதன் மூலம் இதய நோய்களில் இருந்து பாதுகாக்கின்றது.

இதில் உள்ள விற்றமின் "சி" குறிப்பிட்ட வகையான புற்றுநோய்கள் ஏற்படுவதை தடுப்பதோடு உடலுக்கு நோய் எதிர்ப்புத்தன்மையை அதிகரிக்கின்றது.

ஒக்சி நேற்றம் மற்றும் உயர் பொட்டாசியம் இதய நோயை தடுக்கின்றது.

### இனப்பெருக்கம்

பொதுவாக பதிய முறை மூலமாகவே இனப்பெருக்கம் செய்யப்படுகின்றது. விதைகள் மூலமும் இனப்பெருக்கம் செய்யலாம்.

தண்டுத்துண்டம் மூலம் வீடுகளில் இலகுவில் நாற்றுக்களை உற்பத்தி செய்யலாம். ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட தாவரங்களில் இருந்து பென்சில் தடிப்புள்ள ஒரு அடி நீளமான நடுகை துண்டங்கள் பெறப்பட்டு மேல்மண் : கூட்டெரு : மணல் மண் 1:1:1 என்னும் விகிதத்தில் கலந்து நிரப்பப்பட்ட பொதிகளில் நடுகை செய்து நிழலான இடத்தில் வைத்து பராமரிப்பதன் மூலம் தரமான நாற்றுக்களை உற்பத்தி செய்ய முடியும்.

### நடுகை

நடுகை குழியினை 2 மீற்றர் X 2மீற்றர் X2மீற்றர் நீளம், அகலம், ஆழம் இருக்கத்தக்கவாறு தயார் செய்து அதனுள் மேல்மண், உக்கிய மாட்டெரு அல்லது கூட்டெரு 1:1 என்ற விகிதத்தில் கலந்து குழி நிரப்பப்பட்டு அதனுள் நடுகை செய்யவும். 7மீற்றர் X 5மீற்றர் நடுகை இடைவெளி ஒரு ஏக்கரில் 115 மரங்களை நடுகை செய்ய முடியும்.

### கத்தரித்தலும் பழக்கப்படுத்தலும்

12மீற்றர் தொடக்கம் 15 மீற்றர் உயரம் வரை வளரக் கூடியது. எனினும் கத்தரித்தல் மூலம் 4 மீற்றர் தொடக்கம் 5 மீற்றர் உயரத்துக்கு பேணுவதன் மூலம் அறுவடையை எளிதாக்கலாம்.

### அறுவடை

நட்டு மூன்று வருடங்களில் பழத்தை பெற்றுக்கொள்ளலாம், ஒருமரத்தில் இருந்து சராசரியாக 600 தொடக்கம் 700 வரையிலான பழங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

இப்பழத்தினை நேரடியாகவும், வெவ்வேறு பழங்களுடன் பழக்கலவையாகவும் (Mix fruit salads)ஆக சாப்பிடலாம். ஜாம், ஜெலிசெய்ய இயலாது. பழுத்தபழத்தை ஊறுகாய் செய்யப் பயன்படுத்தலாம்.

இத்தகைய சிறப்புமிக்க ஜம்புமரத்தினை நாமும் எமது வீடுகளில் நட்டுபலனை பெறுவோம்.

அன்ரனி ஜெஸ்மன் கிறேசியன் மார்க்
பாடவிடய உத்தியோகத்தர் (மறுவயற் பயிர்).
பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகம்.
முல்லைத்தீவு.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1244

Search for people, places and things  Nagendram  Home

**சுதா மகேஸ்**





**கெங்கா**




**வாகீசன்**




**நஞ்சிதமலர்**




**விபுலன்**




**மோகனா**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சர்வதேசத்தின் அச்சுறுத்தலுக்கு இலங்கை முகங்கொடுக்கும்

## கூட்டு எதிரணியின் தலைவர் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

**நாட்டில் பெரும் எரிபொருள் நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் இலங்கை அரசு சர்வதேசத்தின் அச்சுறுத்தலுக்கு முகங்கொடுக்கும் சூழல் ஏற்பட்டுள்ளதாக கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற குழுக்களின் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிலையியற் கட்டளை 23 இன் கீழ் இரண்டில் பெற்றோலியப் பிரச்சினை குறித்து கேள்வி எழுப்பும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தற்போது முழு நாடும் பெரும் நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது. வாகனங்களுக்கு எரிபொருளை வழங்குவதில் பெரும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுள்ளது.

மக்களது வாழ்க்கைக்கும் பொருளாதார மற்றும் சேவை நடவடிக்கைகளுக்கும் பெரும் சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடுகள் தொடர்பில் அமைச்சர் மக்களுக்கு தெளிவான விளக்கமொன்றை வழங்குவாரா?

பெற்றோலிய நெருக்கடி தொடர்பில் அமைச்சர், பிரதி அமைச்சர் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் என ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர்.

எரிபொருள் விவகாரம் மீண்டும் சீராகவுள்ள தினம் பற்றி ஒவ்வொருவரும் மாறுபட்ட கருத்துக்கள் வெளியிடப்படுவதால் முழு நாடும் குழப்பத்தில் மூழ்கியுள்ளது.

நாட்டின் பொருளாதாரம் ஸ்தம்பிதமடையும் நிலை அமைச்சரின் கருத்தின் பிரகாரம் பார்க்கையில், இந்த நெருக்கடியை இன்னும் பல தினங்களுக்கு தீர்க்க முடியாது என்று கூறுவதற்கான காரணம் என்ன? எதிர்பார்க்கப்படும் எரிபொருள் கப்பல் எப்போது வந்தடையும் என்பது தொடர்பில் உறுதியான முடிவொன்றை சொல்ல முடியாமலுள்ளமைக்கான காரணம் என்ன? பொதுவாக எரிபொருள் களஞ்சியத்தில் பெருந் தொகை எரிபொருள் எஞ்சியிருக்கும். அது கட்டாயமாகும்.

அந்தத் தொகை எரிபொருளை களஞ்சியத்தில் பேண முடியாது போனமைக்கு யார் பொறுப்புக் கூற வேண்டும்?

இந்தியாவிடமிருந்தான விநியோகத்தை நம்பிகாத்துக் கொண்டிருக்கிறீர்கள். திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை எரிபொருள் களஞ்சியங்கள் எம்மிடம் இல்லை.

அவை எம்மிடம் இருந்திருந்தால் இந்த பிரச்சினை எமக்கு ஏற்பட்டிருக்காது. கொலன்னாவை களஞ்சியத்திலும் இந்திய நிறுவனமும் சரி இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் சரி எமது குழாயிலிருந்து தான் எரிபொருளை பெறுகின்றன.

ஆகவே, இந்திய நிறுவனமும் எமதுநிறுவனமும் வாரத்துக்கு ஒருமுறை சந்திப்பார்கள்.

சரியாக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமாயின் இவ்வாறான தொரு நெருக்கடி எப்படி ஏற்பட்டது? அப்படியென்றால் சர்வதேச அச்சுறுத்தலொன்றுக்கா நாம் தற்போதுமுகம் கொடுத்திருக்கின்றோம் என்பதை கூறுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## உள்ளூராட்சி தேர்தலில் மு.கா.வெற்றிபெறும்



(ஏறாவூர்)

காத்தான்குடி பிரதேசத்தில் முஸ்லிம் காங்கிரஸ்"க்கான ஆதரவு தற்போது அதிகரித்துள்ளதாகவும் இதன் காரணமாக எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் காத்தான்குடி நகரசபையின் ஆட்சியை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கைப்பற்றும் என்றும் கட்சியின் தேசிய கொள்கை பரப்புச் செயலாளரும் நகர திட்டமிடல் நீர் வழங்கல் அமைச்சின் இணைப்புச் செயலாளருமான யூ.எல். எம்.என். முபீன் தெரிவித்துள்ளார்.

காத்தான்குடி நகரசபை பிரதேசத்தின் அரசியல் முன்னெடுப்புக்கள் தொடர்பில் நேற்று புதன்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-7)

## கசிப்பு உற்பத்திகளை கட்டுப்படுத்துமாறு கோரி கையொப்பமிட்டு மகஜர்கள் கையளிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் பகுதியில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் சட்டவிரோத கசிப்பு உற்பத்திகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரி 12 இற்கும் மேற்பட்ட கிராமமட்ட அமைப்புக்கள் மற்றும் பிரதேச மக்கள் ஒன்றிணைந்து கையொப்பமிட்ட மகஜர்கள் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், பிரதிப்பொலிஸ்மா அதிபர் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளன.

வன்னேரிக்குளம், ஐயனார்புரம், திக்காய் போன்ற பகுதிகளில் தொடர்ச்சியாக சட்டவிரோத கசிப்பு உற்பத்தி, விற்பனைகள் இடம்பெற்று வருவதாகவும் பல்வேறு தரப்புக்களும் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்நிலையில் வன்னேரிக்குளம் பிரதேசத்தின் பொது அமைப்புக்கள் மற்றும் அப்பிரதேசத்தில் வாழ்கின்ற நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் கையொப்பமிட்ட மகஜர்களை மாவட்ட அரசாங்க அதிபர் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர், கரைச்சிப் பிரதேச செயலாளர், மதுவரித்திணைக்களம், இராணுவப்பொறுப்பதிகாரி, சமுர்த்தி உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், அங்கஜன் இராமநாதன் சிறுவர் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோருக்கு மகஜர்களை நேற்று கையளித்துள்ளனர்.

இவர்கள் கையளித்துள்ள மகஜர்களில் மீள்குடியேற்றத்தின் பின்னர் கசிப்பு உற்பத்தியானது ஆரம்பிக்கப்பட்டு படிப்படியாக பல்வேறு இடங்களிலும் பரவியுள்ளது.

இதனைக் கட்டுப்படுத்த வேண்டிய தரப்பினர் இவ்விடயங்களை கண்டும் காணாமலும் இருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளதுடன், கடந்த இரண்டு வருடங்களிற்கு முன்னர் இந்தப் பிரதேசத்தில் கசிப்பு தொடர்பில் நடராஜா பரமேஸ்வரன் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இவ்வாறு சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனைகளால் எமது இளம் சமூகம் அழிவின் விளிம்பிற்கு கொண்டு செல்லப்படுகின்றது.

கடந்த 4 ஆம் திகதி திக்காய் குளத்திற்கு அருகில் பெண்ணொருவர் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட வேளை அந்தப்பிரதேச மக்களால் சுற்றிவளைக்கப்பட்டு 150 லீற்றர் கசிப்பு அழிக்கப்பட்டு பொருட்களும் சேதமாக்கப்பட்டன.

இந்த விடயம் தொடர்பில் கிராம அலுவலருக்கும் தெரியப்படுத்தப்பட்டது. இதனையடுத்து கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு பெண்ணால் அப்பிரதேசத்தில் வாழ்கின்ற தாய் மற்றும் மகனுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பாக அக்கராயன் பொலிஸ் நிலையத்தில் கடந்த 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முறைப்பாடு செய்யப்பட்ட போதும், பொலிஸார் எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. வன்னேரிக்குளம் பகுதியில் பொலிஸ் காவலரண் ஒன்றினை அமைக்குமாறும் இப்பிரதேசத்தில் இடம்பெற்று வரும் சட்டவிரோத கசிப்பு உற்பத்திகளை கட்டுப்படுத்துமாறும் கோரிக்கை விடுததுள்ளனர்.

இதேவேளை இந்தப் பிரதேசத்தில் கசிப்பு உற்பத்திவிற்பனைகளால்பாடசாலை மாணவர்கள், பெண்கள், குழந்தைகள் எனப் பலரும் அசெகரியங்களுக்குள்ளாவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர். (2-315)





யாழ். அல்வாய் இந்து தமிழ்க்கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா நேற்று நடைபெற்றது. (படங்கள்:-மகாலிங்கம்)

# நிதி மோசடி, இலஞ்ச ஊழல் குறித்து விசாரிக்க விசேட மேல் நீதிமன்றம்

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

ஊழல் மோசடிகள் மற்றும் நிதி மோசடிக் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்துவதற்காக விசேட மேல் நீதிமன்றம் அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மூன்று நீதிபதிகளைக் கொண்ட மூன்று தீர்ப்பாயங்கள் இதற்கிணங்க அமைக்கப்படவுள்ளன. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் முற்பகல் அமைச்சரவைக் கூட்டம் இடம்பெற்றது. இதன்போது விசேட மேல் நீதிமன்றங்களை அமைப்பதற்காக பிரேரணையினை நீதியமைச்சர் தலதா அத்து கோரள முன்வைத்தார். இந்த பிரேரணை தொடர்பில் ஆராயப்பட்டதுடன் இதற்கு அமைச்சரவை அங்கீகாரமும் வழங்கியது.

கடந்த ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற நிதி மோசடிகள், மற்றும் இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்படவில்லையென்று பெரும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில் அந்த விடயங்கள் குறித்து விசாரிக்க விசேட மேல்நீதிமன்றங்கள் அமைப்பதற்கு அமைச்சரவை தற்போது அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதற்கான பிரேரணையினை நேற்று முன்தினம் அமைச்சரவையில் நீதி அமைச்சர் தலதா அத்துகோரள சமர்ப்பித்ததுடன் இதற்கு சகல அமைச்சர்களும் ஆதரவு வழங்கினர். நிதி மோசடி குற்றச்சாட்டுக்கள் மற்றும் இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள், பொதுச் சொத்துக்களை தவறாகப் பயன்படுத்தியமை, பயங்கரவாதத்திற்கு பணம் வழங்க முற்பட்டமை, பணத்தினை பதுக்க முற்பட்டமை, நிதி தொடர்பில் ஒழுங்குபடுத்தப்பட்ட தவறினை மேற்கொண்டமை உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து துரிதமாக விசாரணை நடத்துவதற்காகவே இந்த விசேட மேல் நீதிமன்றங்கள் அமைக்கப்படுவதாக பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது சாதாரண மேல் நீதிமன்றங்களில் இடம்பெற்று வரும் நிதி மோசடிக் குற்றச்சாட்டுக்கள், மற்றும் இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான வழங்குகளை பிரதம நீதியரசர், சட்டமா அதிபர் ஆகியோரின் கோரிக்கைக்கு இணங்க விசேட மேல் நீதிமன்றங்களுக்கு மாற்ற முடியும் என்றும் இந்த விசேட நீதிமன்றங்களை அமைப்பதற்கான சட்டத்திருத்தங்களை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டுமென்றும் நீதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையில் கோரப்பட்டிருந்தது. இத்தகைய சட்டதிருத்தங்களை மேற்கொள்வதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங் கியுள்ளது.

இந்த விசேட மேல் நீதிமன்றங்களால் அளிக்கப்படும் தீர்ப்புக்களுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் சம்பந்தப்பட்டவர்கள் மேன் முறையீடு செய்ய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ-7)

## அபிவிருத்தி, கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்தும் திட்டங்களுக்கு உதவுவதாக ஜப்பான் வாக்குறுதி

(டோக்கியோ)

இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கும், கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கும் தொடர்ந்து உதவிகளை வழங்குவதாக ஜப்பான் உறுதியளித்துள் ளது.



ஜப்பானுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த இலங்கையின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவிடம், ஜப்பானிய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் கஷீயுகி நகானே இந்த உறுதிமொழியை அளித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது, கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கும் கடலோரக் காவல் படையைப் பலப்படுத்துவதற்கும்ஜப்பான்அளித்து வரும் ஆதரவுக்கு இலங்கை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் நன்றியைத் தெரிவித்துள்ளார். (இ-7)

## மரண வீட்டுக்கு சென்றோர் விபத்து

### 11 பேர் காயம்

(கொழும்பு)

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில் லொறியொன்று விபத்துக்குள்ளானதில் 11 பேர் காயமுற்ற நிலையில், லிந்துலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனரென, தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹற்றன், வெலிஓயாவிலிருந்து எல்ஜின் பகுதிக்கு மரண வீடொன்றுக்குச் சென்றவர்கள் பயணித்த லொறியே, நேற்று முன்தினம் 11 மணியளவில் இவ்வாறு விபத்தில் சிக்கியுள்ளது.

தலாவக்லை தேயிலை தொழிற்சாலைப் பகுதியை நெருங்கியதும், லொறியில்



திடீரென தடை (பிரேக்) இயங்காத நிலையிலே பாதை யோரமிருந்த மண் மேட்டில் லொறி மோதுண்டுள்ளது.

இதில் லொறியின் சாரதி உட்பட 10பேர் பெண்களுமாக 11 பேர் காயமுற்று லிந்துலை வைத்தியசாலை யில் அனுமதித்தப்பட்ட போதிலும் மேலதிக சிகிச்சைக் காக இருவர், நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனரென, தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு ராஜபக்ஷக்களே காரணமாம்

### ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழ்பு)

நாட்டில் தற்போது நிலவி வரும் எரிபொருள் தட்டுப்பாட்டுப் பிரச்சினைக்கு ராஜபக்ஷக்களே காரணம் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நலின் பண்டார தெரிவித்துள்ளார்.



கட்சியின் தலைமையகம் சிறிகொத்தவில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் தேவையற்ற இடங்கள் தேவையற்ற வகையில் அபிவிருத்தி செய்யப்பட்டது.

இதனால் நாட்டின் முக்கியமான எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் அபிவிருத்தி செய்யப்படவில்லை. எண்ணெய்சுத்திகரிப்பு நிலையங்கள் உரிய முறையில் பராமரிக்கப் படவில்லை. மகிந்த ஆட்சிக் காலத் தில் இவ்வாறான அத்தி யாவசியத் தேவைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படவில்லை.

கொழும்பை அபிவிருத்தி செய்யாது ராஜபக்ஷக்கள் தங்களது ஊரை அபிவிரு த்தி செய்தனர். இதனால் நாட்டுக்கு தேவையானஎரிபொருளை பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட் டது.

45 முதல்50 நாட்களுக்கு தேவையான எரி பொருளை களஞ்சியப்படுத்தக்கூடிய களஞ்சியசாலைகள் காணப்படுகின்றன. எனினும் முழுமையாக எரிபொருள் தீரும் வரையில் அதிகாரிகள் என்ன செய்தார்கள் என்பது பற்றியும் விசாரணை செய்யப்பட வேண்டி யது அவசியம் என தெரிவித்துள்ளார். (இ-7)

## யாழ்.வட இந்து ஆரம்பப் பாடசாலை கற்றல் வள நிலையத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். வட இந்து ஆரம்பப் பாடசாலை கற்றல் வள நிலையத் திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பாடசாலை வளாகத்தில் பாடசாலை அதிபர் த.ரவீந்திரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வியமைச்சர் க.சர்வேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம், வே.சிவயோகன், சி.அகிலதாஸ், ச.சுகிர்தன், க.தர்மலிங்கம் ஆகியோர் கலந்துளளகொள்வர். (இ-7-60)

## உயர் தொழிற்றுறை தொடர்பாடலுக்கான ஆங்கிலமொழி உயர்தரச் சான்றிதழ் கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தினால் உயர் தொழிற்றுறை தொடர்பாடலுக்கான ஆங்கில மொழி உயர்தரச் சான்றிதழ் கற்கைநெறி 2017/2018 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் 18 வயதை பூர்த்தி செய்திருப்பதுடன் க.பொ.த. சாதாரண தரத்தில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் www.ou.ac.lk என்ற இணையத்தள முகவரி ஊடாக 02.12.2017 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடிவதுடன் மேலதிக விபரங்களை யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியுமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-7)

## பெற்றோல் இல்லை நாடாளுமன்றுக்கு 'கட்' அடித்த எம்.பிக்கள்

### விமல் வீரவன்ச கவலை



(கொழும்பு)

எரிபொருள் நெருக்கடியால் பல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சபைக்கு வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விமல் வீரவன்ச நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். இது தொடர்பாக சபாநாயகர் விசேட கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். சபாநாயகரின் அறிவிப்புக்களையடுத்து ஒழுங்குப்பிரச்சினையொன்றை அவர் முன்வைத்தார்.

"பெற்றோல் தட்டுப்பாட்டினால் எம்.பிகளுக்கு பாராளுமன்றத்திற்கு வர முடி யாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் தூர இடங்களிலிருந்து வரும் எம்.பிக்கள் கூடுதலாக பாதிக்கப்பட்டுள்ளனர். வரலாற்றில் முதன் முறையாக எரிபொருள் பிரச்சினையால் எம்.பிக்களுக்கு பாராளு மன்றத்திற்கு வர முடியாத நிலை உருவாகியுள்ளது. இது தொடர்பில் கவனம் செலுத்தி எம்.பிகளுக்கு பாராளுமன்றத்திற்கு வருவதற்கு உரிய ஏற்பாடுகளை செய்து கொடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)



# சிறுவர் அரங்கம்

## காலத்தினால் செய்த நன்றி

செல்லப்பன் ஒரு தொழிற்சாலையில் பணிபுரிந்து வந்தான். அவனுக்கு ஒரு மகன் இருந்தான். ரவி என்று பெயரிட்டு மிகவும் செல்லமாக வளர்த்து வந்தான். அவனுக்கு பத்து வயதுதான் இருக்கும்.

செல்லப்பனுக்கு தன் மகன் மீது கொள்ளை பிரியம். தினமும் அருகில் இருக்கும் ரொட்டிக் கடையில் ரொட்டி வாங்கிக்கொடுத்து அவன் சாப்பிட்ட பிறகே வேலைக்குச் செல்வான். ரவியும் அப்பாவின் மடியில் அமர்ந்து கொண்டு ரொட்டி சாப்பிட்டுவிட்டுப் பள்ளிக்குச் செல்வான்.

ஒருநாள் தொழிற்சாலைக்குச் சென்ற செல்லப்பன் விபத்தில் அடிபட்டு இறந்துவிட்டார்.

அவன் அம்மாவோ ராணி மாதிரி வாழ்ந்தவள் இப்போது கணவன் செய்த கூலி வேலைக்குச் செல்லத் தொடங்கினாள். சிலநாட்கள் வரை தன் கணவன் செய்தது போல் மகனுக்கு ரொட்டி வாங்கிக் கொடுத்தாள். அவளுக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டதால் வேலைக்குச் செல்ல முடியவில்லை. அதனால் ரொட்டி வாங்கிக் கொடுக்க இயலவில்லை. ஆனால் சிறுவனான ரவிக்கு இதெல்லாம் புரியாது. அவன் தினமும் ரொட்டிக் கடைக்கு முன் நின்று அழுதுகொண்டு இருப்பான்.

ஒருநாள் அந்த ரொட்டிக் கடை முதலாளி அவனிடம் ஒரு ரொட்டியைக் கொடுத்தார். மகிழ்ச்சியோடு பெற்றுக் கொண்டான். மறுநாளும் அங்கு வந்து நின்றான். அந்த முதலாளி அவன் கையைப் பிடித்து அருகே அமர்த்திக் கொண்டார்.

"தம்பி ரவி, நான் தினமும் உனக்கு ரொட்டி தாறேன். சாப்பிட்டு நீ பாடசாலைக்குப் போகணும். அங்கே உனக்கு மதியச் சாப்பாடு போடுறாங்க. அதைச் சாப்பிட்டுட்டு நல்லாப் படிக்கோணும். நீ படிச்சு முடிந்ததும் பெரியவனாகி விடுவாய். அப்புறம் என் கடையிலேயே வேலை செய்யணும். செய்வியா?" என்றார். தினமும் ரொட்டி கிடைக்கும் என்ற மகிழ்ச்சியுடன் தலையை ஆட்டினான் ரவி. ரொட்டியை வாங்கித் சாப்பிட்டுவிட்டு பரபரப்புடன் வீட்டுக்குள் நுழைந்தான். தன் நீலக் காற்சட்டையையும் வெள்ளைச் சட்டையையும் தேடிப் போட்டுக் கொண்டான். நெற்றியில் திருநீற்றை இட்டுக் கொண்டு கையால் தலையை ஒதுக்கிக் கொண்டான். மூலையில் கிடந்த தன் பையையும் புத்தகங்களையும் தேடி எடுத்துக் கொண்டவன் "அம்மா, நான் பாடசாலைக்குப் போய்வாறேன்" என்ற படியே ஓடினான். அவன் செயலைப் பார்த்துக் கொண்டிருந்த அவன் அம்மாவுக்கு மகிழ்ச்சியாயிருந்தது.

வருடங்கள் செல்லச் செல்ல ரவிக்குக் கல்வி அறிவோடு நல்ல ஒழுக்கமும் வளர்ந்தது. இப்போது அவன் பத்தாவது படிக்கும் மாணவன்.

மாலைநேரத்தில் பாடசாலை விட்ட பின் ரொட்டிக்கடை முதலாளிக்கு உதவியாக இருக்கத் தொடங்கினான். ஏனென்றால் தினமும் ஓசியில் ரொட்டி வாங்கிச் சாப்பிட அவன் மனம் இடம் கொடுக்கவில்லை. அவன் தன்மானத்தைப் பார்த்த அந்த முதலாளிக்கு அவன் மீது மிகுந்த மதிப்பு ஏற்பட்டது.



நல்ல முறையில் பத்தாம் வகுப்புத் தேறிய ரவிக்கு அந்த முதலாளி பாராட்டுத் தெரிவித்ததோடு மேலே படிக்க உதவுவதாகக் கூறினார். ஆனால் தன் அம்மாவை நல்ல முறையில் காப்பாற்றவேண்டுமானால் வேலை செய்துதான் ஆகவேண்டும் என்பதால் ரவி அந்தக் கடையிலேயே வேலை செய்வதாகக் கூறிவிட்டான்.

அதை ஏற்றுக் கொண்ட கடை முதலாளி அவனுக்கு ஒரு சிறிய ரொட்டிக் கடை வைத்துக் கொடுத்தார். ஐந்தாண்டுகளில் ரவி நல்ல நிலைக்கு உயர்ந்தான். அவனது அயராத உழைப்பும் நாணயமும் தான் அவனை உயர்த்தின.

அன்று ரவியின் கடை திறந்த ஐந்தாம் ஆண்டு விழா. கடை அலங்கரிக்கப்பட்டு வந்தவர்களுக்கு அமர இருக்கைகள் போடப்பட்டிருந்தன. தனக்கு உதவி செய்து தன்னை உயர்த்திய முதலாளியை வணங்கி அவருக்கு மாலையிட்டு மரியாதை செய்தான் ரவி.

மிகவும் கூச்சத்துடன் அந்த முதலாளி, "ரவி இதென்னப்பா, எனக்குப் போயி மாலையெல்லாம்..." என்று கூறினார்.

ரவியோ அவர் கால்களில் விழுந்து வணங்கினான். "ஐயா, நீங்க இல்லேன்னா இன்னைக்கி நான் இல்லே"

"என்னப்பா ரவி, உன்னோட உழைப்பாலே நீ முன்னுக்கு வந்தே. என்னை எதுக்கு இப்படி உயர்த்தி வைக்கிறே?"

"ஐயா, நான் சின்னப் பையனா இருந்தப்போ நீங்க ரொட்டித் துண்டைக் கொடுத்து பாடசாலைக்கு போன்னு சொன்னதாலே நான் படிச்சேன்.

நல்ல விடயங்களைக் கத்துக்கிட்டேன். உங்ககிட்டேயிருந்து உழைப்பையும் கத்துக்கிட்டேன். நீங்க என்னை அன்றைக்கே விரட்டி விட்டிருந்தா, ஒரு ரொட்டித் துண்டாலே நான் திருடனா ஆகியிருப்பேன். இன்றைக்கு நான் உயர்ந்து நிக்க நீங்கதான் ஐயா காரணம்"

"என்னப்பா இது. ஒரு சின்ன உதவி செய்ததையா நீ இவ்வளவு புகழ்கிறே?"

ஐயா, "காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது" அப்படீன்னு படிச்சிருக்கேனய்யா. என்னுடைய சின்ன வயசுல நீங்க செஞ்ச உதவி இந்த உலகத்தை விடப் பெருசுங்கய்யா" என்று கண்களில் நன்றிக் கண்ணீருடன் பேசினான் ரவி.

ரவியின் நன்றி பாராட்டும் பண்பையும் அவன் முதலாளியின் தகுந்த காலத்தில் உதவி செய்யும் குணத்தையும் மறவாமல் அவர்களைப் போல வாழ்ந்தால் வாழ்க்கை சிறப்பாக அமையுமல்லவா?

## 09 11.2017 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

❖ 1793- கிறிஸ்தவ மதகுரு வில்லியம் கேரி கொல்கத்தா வந்து சேர்ந்தார்.

❖ 1799- பிரெஞ்சுப் புரட்சி முடிவுக்கு வந்தது. நெப்போலியன் பொனபார்ட் பிரான்சைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தான்.

❖ 1887- ஐக்கிய அமெரிக்கா ஹவாயின் பேர்ள் துறைமுகத்தின் உரிமையைப் பெற்றது.

❖ 1913- மகாத்மா காந்தி கைது செய்யப்பட்டு 9 மாதச் சிறைத் தண்டனையடைந்தார்.

❖ 1921- அல்பேர்ட் ஐன்ஸ்டீன் ஒளியின் விளைவை விளக்கியமைக்காக இயற்பியலுக்கான நோபல் பரிசைப் பெற்றார்.

❖ 1937- ஜப்பானியப் படைகள் சீனாவின் ஷாங்காய் நகரைக் கைப்பற்றினர்.

❖ 1967- நாசா நிறுவனம் கேப் கென்னடி தளத்தில் இருந்து ஆளில்லா அப்பல்லோ 4 விண்கலத்தை விண்ணுக்கு அனுப்பியது.

❖ 1994- டார்ம்சிட்டாட்டியம் என்ற தனிமம் கண்டுபிடிக்கப்பட்டது.

❖ 2005- வீனஸ் எக்ஸ்பிரஸ் என்ற ஐரோப்பாவின் விண்கலம் கசகஸ்தானில் இருந்து ஏவப்பட்டது.

❖ 2005- ஜோர்தானின் அம்மான் நகரில் மூன்று விடுதிகளில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் 56 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

❖ 1877- முகமது இக்பால், பாகிஸ்தானிய மெய்யியலாளர், கவிஞர், அரசியல்வாதி (இ. 1938)

❖ 1880- கீயோம் அப்போலினேர், பிரெஞ்சு எழுத்தாளர் (இ. 1918)

❖ 1896- திருவிடைமருதூர் பி. எஸ். வீருசாமிப்பிள்ளை, நாதசுவரக் கலைஞர் (இ. 1973)

❖ 1897- ரொனால்ட் ஜார்ஜ் விரேஃபோர்ட் நோரிஷ், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேய வேதியியலாளர் (இ. 1978)

❖ 1914- ஹெடி லமார், ஆஸ்திரிய-அமெரிக்க நடிகை (இ. 2000)

❖ 1934- கார்ல் சேகன், அமெரிக்க வானியலாளர், எழுத்தாளர் (இ. 1996)

❖ 1952- ஜாக் சோஸ்டாக், நோபல் பரிசு அமெரிக்க உயிரியலாளர்

❖ 1952- கே. என். நேரு, இந்திய அரசியல்வாதி

❖ 1959- ஈ. காயத்ரி, வீணைக் கலைஞர்

### இறப்புகள்

❖ 1576- நான்காம் சாமராச உடையார், மைசூர் மன்னர் (பி. 1507)

❖ 1918- கீயோம் அப்போலினேர், இத்தாலிய-பிரெஞ்சுக் கவிஞர் (பி. 1880)

❖ 1953- அப்துல்லாசீஸ் பின் அப்துல் அசீஸ், சவுதி அரேபிய மன்னர் (பி. 1880)

❖ 1962- தோண்டோ கேசவ் கார்வே, இந்திய செயற்பாட்டாளர் (பி. 1858)

❖ 1992- தா. சிவசிதம்பரம், இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (பி. 1926)

❖ 1998- பி. எஸ். வீரப்பா, தமிழ்த் திரைப்பட நடிகர் (பி. 1911)

❖ 2005- கே. ஆர். நாராயணன், இந்திய அரசியல்வாதி (பி. 1921)

❖ 2006- வல்லிக்கண்ணன், தமிழ் எழுத்தாளர் (பி. 1920)

❖ 2015- சிற்பி, ஈழத்து எழுத்தாளர், ஊடகவியலாளர் (பி. 1933)

### சிறப்பு நாள்

❖ இறந்தோர் நாள் (பொலிவியா)

❖ விடுதலை நாள் (கம்போடியா, 1953)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 150 | 160 | 200 |
| உருளைக்கிழங்கு | 100 | 140 | 95 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 500 | 600 | 450 | 600 | 500 |
| தக்காளி | 120 | 200 | 100 | 140 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 30 | 30 | 60 | 60 |
| கோவா | 140 | 160 | 70 | 140 | 160 |
| கரட் | 120 | 200 | 100 | 100 | 240 |
| பூசணி | 80 | 100 | 70 | 50 | 80 |
| புடோல் | 100 | 100 | 70 | 100 | 120 |
| வாழைக்காய் | 60 | 100 | 80 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 400 | 250 | 300 | 320 |
| பெரிய வெங்காயம் | 200 | 250 | 200 | 200 | 240 |
| பாகற்காய் | 350 | 450 | 180 | 240 | 400 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 70 | 100 | 160 |
| கருணைக்கிழங்கு | 80 | 60 | 70 | 100 | 100 |
| பயற்றங்காய் | 180 | 100 | 120 | 140 | 200 |
| லீக்ஸ் | 150 | 200 | 170 | 200 | 240 |
| பீற்றூட் | 100 | 120 | 60 | 120 | 120 |
| கறிமிளகாய் | 300 | 250 | 200 | 240 | 320 |
| முருங்கைக்காய் | 400 | 200 | 150 | — | 80 |
| இஞ்சி | 200 | 200 | 100 | 130 | 160 |
| கத்தரிதும்பளை | 150 | 100 | 120 | — | 160 |
| கீரை - 1பிடி | 50 | 20 | 30 | 40 | 40 |
| தேசிக்காய் | 150 | 100 | 150 | 130 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 75 | 90-100 |
| இராசவள்ளி | — | — | 200 | — | — |
| வெங்காயப்பூ | — | — | 230 | — | 240 |
| முள்ளங்கி | 80 | — | 30 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 40 | — | 35 | 40 | 40 |
| வல்லாரை | 15 | — | 8 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | — | 30 | — | 80 |

வெல்லுக அறமும் மெய்ம்மையும் பொறையும்
மேகமேனியனும்
வெல்லாமை செல்லுக பாவம், பொய் மொழி, கோபம்...
*~ வில்லிபாரதம்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பேசாதிருந்துவிட்டு பிழை சொல்வது பாவம்

ஒரு நாட்டில் மிகப்பெரும் அக்கிரமங்கள், அநியாயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இதனால் சீற்றமடைந்த கடவுள் அந்த நாட்டை அழித்துவிடுமாறு தனது பரிவாரங்களை அனுப்பி வைத்தார்.

கடவுளின் உத்தரவுக்கமைய அந்த நாட்டை அழிப்பதற்காக பரிவாரங்கள் தேவலோகத்தில் இருந்து அந்த நாட்டுக்குச் செல்கின்றன.

அவர்கள் வந்திறங்கிய இடத்தில் ஒரு வழிபாட்டுத் தலம். அதில் ஒரு பெரியவர் சதா கடவுளை வழிபட்ட வண்ணம் இருக்கிறார். அவரின் தோற்றத்தில் தெய்வீகப் பொலிவு தெரிகிறது. அவரைக் கண்ட மாத்திரத்தில் நாட்டை அழிக்க வந்தவர்கள் திகைத்துப் போயினர்.

கடவுளை சதா வழிபடும் இந்த பெரியவரையும் கொல்வதா? இந்த ஐயம் ஏற்பட்டதும் வந்த பரிவாரங்கள் திரும்பிச் சென்று கடவுளைச் சந்தித்தன.

சுவாமி உங்கள் கட்டளைப்படி அந்த நாட்டை அழிக்கச் சென்றோம். ஆனால் அங்கு ஒரு பெரியவர் தங்களைத் தொழுத வண்ணம் இருக்கிறார். அவரையும் கொல்வதா சுவாமி என்றனர்.

இதனைக் கேட்ட கடவுள் அந்தப் பெரியவரைத்தான் முதலில் கொல்லுங்கள் என்றார்.

திகைத்துப்போன பரிவாரங்கள் சுவாமி ஏன்? அப்படிச் சொல்கிறீர்கள் என்று கேட்டன. அதற்குக் கடவுள் பின்வருமாறு பதிலளித்தார்.

நாட்டில் அக்கிரமமும் அநியாயமும் நடந்து கொண்டிருக்கும்போது என்னை தொழுவதால் என்ன பயன்? தர்மம், நீதி, நியாயம் தெரிந்த அந்தப் பெரியவர் அவற்றை மக்களுக்கு எடுத்துரைத்து மக்களை நல்வழிப்படுத்தியிருக்க வேண்டும்.

ஆனால் அதனை அவர் செய்யத் தவறிவிட்டார். உண்மை, நீதி, நியாயம், தர்மம் தெரிந்தவர்கள் பேசாதிருந்தால் அது பெரும் பாவம். ஆகையால் அந்தப் பெரியவரை முதலில் கொல்லுங்கள் என்றார் கடவுள்.

இதைக் கேட்ட பரிவாரங்கள் கடவுளின் உத்தரவை நிறைவேற்ற மீண்டும் அந்த நாட்டுக்குச் சென்றன.

இச்செவிவழி கதை நமக்கு ஓர் உண்மையை எடுத்தியம்புகிறது. அதாவது அநியாயம் நடக்கிறது என அறியும்போது அல்லது எக்காலத்திலும் அக்கிரமம், அநியாயம் நடக்கக்கூடாது என்பதற்காக அறத்தை, அன்பை, மனுநீதியை எடுத்தியம்புவது கற்றறிந்தார் கடமை.

அதைச் செய்யத் தவறும்போது அதனால் கேடு நடக்கும். அந்தக் கேடு மக்கள் சமூகத்தைப் பாதிக்கும்.

ஆகவே எப்போதும் உண்மைக்காகக் குரல் கொடுப்பதும் பொது நீதியை, சமூக நீதியை ஏற்படுத்துவதற்காகப் பாடுபடுவதும் கற்றவர்கள், புத்திஜீவிகள், மதத் தலைவர்கள், பெரியவர்கள், அனுபவஸ்தர்கள் ஆகியோரின் தலையாய கடமையாகும்.

அந்தவகையில் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலின்போது வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகத்தில் செயல்திறன்மிக்க உள்ளூராட்சி சபைகள் அமைவதற்கு எத்தகைய பொறிமுறைகளைக் கையாள வேண்டும் என்பதை மேற்குறித்த பெரியவர்கள் துணிந்து கருத்துரைக்க வேண்டும்.

இதைவிடுத்து தேர்தல் நடக்கும் வரை மௌனமாக இருந்துவிட்டு, தேர்தல் முடிந்து சபைகளில் பதவியேற்று அவை செயலற்று இருக்கும்போது குறைகூறுவது என்பது மிகப் பெரும் பாவச் செயலாகும்

# இலங்கையின் நகரொன்றுடன் சகோதர நகராக இணையும் சியோல்

(கொழும்பு)

தென் கொரிய தலைநகரான சியோல் நகரத்தின் மேயர் பார்க் வொன்சூன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தார். சர்வதேச மன்றங்களில் தென் கொரியாவுக்கு இலங்கை வழங்கிவரும் ஒத்துழைப்புகளுக்கு அவர் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்ததுடன், இலங்கையின் சகோதர நகரமொன்றுடன் இணைப்பை ஏற்படுத்த சியோல் விரும்புவதாகவும் தெரிவித்தார்.

நகரங்களுக்கிடையிலான இத்தகைய இணைப்பு நகர அபிவிருத்தி மூலோபாயங்களை கற்றுக்கொள்ள இருதரப்புக்கும் உதவும் என்று ஜனாதிபதி தெரிவித்தார். இலங்கை மற்றும் தென் கொரிய குடியரசுக்கிடையிலான இராஜதந்திர உறவுகளுக்கு 40 ஆண்டுகள் நிறைவடைவதை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அடுத்த 40 ஆண்டுகளில் எவ்வாறான பலமான உறவுகளைக் கட்டியெழுப்ப முடியும் என்பது குறித்து சிந்திப்பதற்கு இது சரியான சந்தர்ப்பம் என்றும் தெரிவித்தார்.

சியோல் நகரத்தின் நான்கு சிரேஷ்ட உறுப்பினர்களைக் கொண்ட தூதுக்குழு மற்றும் இலங்கைக்கான கொரிய தூதுவர் சாங் வொன் சாம் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். (இ-7)

# போராட்டங்கள் பற்றிய சிறந்த பாடத்தை ஒக்டோபர் புரட்சி கற்றுக் கொடுத்துள்ளது

## ஜனாதிபதி மைத்திரி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பொதுப் போராட்டங்கள் பற்றிய சிறந்த பாடத்தை ஒக்டோபர் புரட்சி கற்றுக் கொடுத்துள்ளது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஒக்டோபர் புரட்சியின் நூற்றாண்டு பூர்த்தியை முன்னிட்டு இலங்கை கொமியுனிஸ்ட் கட்சியால் நேற்று முன்தினம் பிற்பகல் தாமரைத் தடாகக் கலையரங்கில ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட நிகழ்வில் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரச ஆட்சிக்கு எதிராக 1917ஆம் ஆண்டு லெனின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட ஒக்டோபர் புரட்சியின் வெற்றியானது, சோவியத் ஒன்றியத்திற்கு மட்டுமன்றி ஒட்டுமொத்த மானிடர்களும் பெற்றுக்கொண்ட வரலாற்று ரீதியான வெற்றியாகவே கருதப்படுகிறது.

இன்றும் மக்கள் சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்திற்கான புரட்சிகளை மேற்கொண்டபோதிலும் அதற்கான சிறந்த தலைமைத்துவம் குறைவாகவே காணபடுகின்றதெனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ரஷ்யா மற்றும் இலங்கைக்கிடையே காணப்படும் இருதரப்பு உறவுகள் தற்போது பலமடைந்துள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி,

44 ஆண்டுகளுக்குப் பின்னர் ரஷ்யாவுக்கான அரச முறை விஜயம் மேற்கொள்ளுமாறு இலங்கை அரச தலைவருக்கு கிடைத்த முதலாவது சந்தர்ப்பத்தை நினைவுகூரும் வகையில் தான் மேற்கொண்ட ரஷ்ய விஜயத்தை நினைவுகூர்ந்ததுடன், அதன் பெறுபேறாகவே தற்போது இரு நாடுகளுக்குமிடையிலான பொருளாதார, வர்த்தக உறவுகள் மேலும் விரிவடைந்துள்ளதுடன் பலமடைந்தும் காணப்படுவதாகத் தெரிவித்தார்.

கொம்யுனிஸ்ட் கட்சியினால் உருவாக்கப்பட்ட இலங்கையைச் சேர்ந்த புத்திஜீவிகளின் கடிதங்கள அடங்கிய "ஒக்டோபர் புரட்சியோடு முன்னோக்கி" எனும் நூல் கொம்யுனிஸ்ட் கட்சியின் கல்விப் பிரிவின் செயலாளர் அகா ஜெயசேனவினால் ஜனாதிபதியிடம் இதன போது கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சபாநாயகர் கரு ஜெயசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.சம்பந்தன் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் பலரும் இலங்கைக்கான ரஷ்ய தூதுவர், ரஷ்யாவிற்கான இலங்கைத் தூதுவர் உள்ளிட்ட அதிகாரிகளும் இலங்கை கொம்யுனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டியு குணசேகர உள்ளிட்ட கட்சி உறுப்பினர்களும், புத்தி ஜீவிகள் மற்றும் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)




நானிலம் காக்கும் வேங்கடாசலபதியின் நயனங்களைப் பாதி மூடி நெற்றி நிறைய திருத்தமாய்ச் சாத்தப்பட்ட திருமண் திகழ்கிறது.

இந்தத் திருநாமம், கற்பூரமும் புனுகுத் தைலமும் குங்குமப் பூவும் குழைத்து இடப்பட்டு இறைவனுக்கு எந்நேரமும் மணம் பரப்புகின்றன.

அனந்தாழ்வான் அடித்த அடியை ஆற்ற மோவாயில் பச்சைக் கற்பூரப் பற்று.

முகுந்தனின் முகம் பார்த்த விழிகள் தாழ்ந்து அவன் திருப்பாதங்களைத் தேடி வீழ்கின்றன.

ஆனந்தம், ஆனந்தம் அளப்பரிய பரவசம்.(தொடரும்)

# மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று 09.11.2017 வியாழன் காலை 8 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை கிளிநொச்சி பிரதேசத்தில் கரை கட்டுக்குளம், நாச்சிக் குடா, நாகபடுவான், முழங்காவில, குமுழமுனை, பல்லவராயன்கட்டு, வெள்ளாங்குளம், SLLI கணேஷ புரம், வெள்ளாங்குளம், 651 ஆவது படைப் பிரிவு முகாம், 652 ஆவது படைப்பிரிவு முகாம், 2ஆவது அதிரடிப் படை முகாம், நாச்சிக்குடா கடற்படை முகாம், இயாஸ் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் குருக்கள் புதுக்குளம், குருக்கலூர், பறயனாலங்குளம், நீலியாமோட்டை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# சத்திய தரிசனம்



## அனைவரிடமும் அன்பு காட்டுங்கள்


❖ இழந்த செல்வத்தை மீண்டும் பெறலாம். ஆனால், ஒழுக்கத்தை இழந்தால் அது உயிரை இழப்பதற்குச் சமமாகி விடும்.

❖ செய்த செயலின் பலன் பன்மடங்காகப் பெருகி நம்மிடமே திரும்பும். அதனால் நற்செயலில் மட்டும் ஈடுபட வேண்டும்.

❖ சந்தனக் கட்டை தன்னையே அழித்துக் கொண்டு பிறருக்கு மணம் தருகிறது. அதுபோல மனிதன் பிறர்நலனுக்காக வாழ்வை அர்ப்பணிக்க வேண்டும்.

❖ பணத்தால் மட்டுமே பிறருக்கு உதவ முடியும் என்று எண்ணாதீர்கள். சேவை செய்பவனுக்கு உள்ளத்தில் அன்பும், உடலில் வலிமையும் இருந்தால் போதும்.

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**கர்ப்ப காலத்தில் மேற்கொள்ளக்கூடாத கர்மங்கள் எவை?'**

கர்ப்ப காலத்தில் பெண்கள் அதிகமாக வேலைகளைச் செய்யக் கூடாது. ஆனால் உடலை அசைத்து சிறு சிறு வேலைகளைச் செய்ய வேண்டும். அதிக நேரம் குனிந்து நின்று செய்யும் வேலைகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும். உணவருந்துவதை முறைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

கர்ப்பகாலத்தில் சிலருக்குச் சில உணவுகள் மீது ஆசை வருவது இயற்கையே. அதனால் அவற்றை அதிகளவில் உண்ணக்கூடாது. அதிகமாக உண்ணக்கூடாது. ஆனால் உணவருந்தாமல் இருப்பதுவும் கூடாது. நல்ல சத்தான உணவுகளை உண்பது வயிற்றில் இருக்கும் சிசுவின் ஆரோக்கியத்திற்கு நல்லதாகும். பகலில் உறங்கக் கூடாது. ஆனால் உறங்காமலும் இருக்கக்கூடாது. (தொடரும்)

# டோனியை விமர்சனம் செய்வது ஏன் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை

## விராட் கோலி கண்டனம்



இருபது ஓவர் கிரிக்கெட் போட்டியில் டோனி சரியாக விளையாடவில்லை என்று முன்னாள் வீரர்களின் கருத்துக்கு இந்திய அணி கப்டன் விராட் கோலி, டோனி மீதான விமர்சனம் நியாயமற்றது என்று தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் வெற்றிகரமான கப்டன் மகேந்திர சிங் டோனி. இரண்டு உலக கோப்பையை வென்று (20 ஓவர் 2007. ஒருநாள் போட்டி 2011) இந்தியாவுக்கு பெருமை தேடித் தந்தார்.

டெஸ்ட் போட்டியில் இருந்து ஏற்கனவே ஓய்வுபெற்ற அவர் ஒருநாள் போட்டி மற்றும் 20 ஓவர் கப்டன் பதவியில் இருந்து விலகி இருந்தார்.

தற்போது ஒருநாள் போட்டி மற்றும் 20 ஓவர் அணியில் மட்டும் ஆடி வருகிறார்.

நியூசிலாந்துக்கு எதிராக ராஜ்கோட்டில் நடந்த 2 ஆவது 20 ஓவர் போட்டியில் இந்திய அணி தோற்றபோது டோனி விமர்சனத்துக்கு உள்ளானார். இந்த ஆட்டத்தில் அவர் 37 பந்தில் 49 ஓட்டங்கள் எடுத்தார். கோலிக்கு அடுத்தப் படி அவர்தான் அந்த ஆட்டத்தில் அதிக ஓட்டங்களை எடுத்தார்.

ஆனாலும் அவரை முன்னாள் வீரர்களான வி.வி.எஸ்.லட்சுமணன். அஜித் அகர்கர். ஆகாஷ் சோப்ரா விமர்சனம் செய்தனர்.

20 ஓவர் போட்டியில் டோனியால் அதிரடியாக விளையாட முடியவில்லை. இதனால் இளம் வீரர்களுக்கு அவர் வழிவிட வேண்டும் என்று தெரிவித்தனர்.

ஷேவாக் கூறும்போது, இளம் வீரர்களுக்கு டோனி ஒருபோதும் தடையாக இருந்தது இல்லை என்றும், அதேநேரத்தில் தான் சந்தித்த முதல் பந்தில் இருந்தே டோனி அதிரடியாக' ஆட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இந்த நிலையில் டோனி மீதான விமர்சனம் நியாயமற்றது என்று அவருக்கு இந்திய அணி கப்டன் விராட் கோலி ஆதரவு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறியதாவது.

டோனியை விமர்சனம் செய்வது ஏன்? என்று எனக்கு முதலில் தெரியவில்லை. இதை என்னால் புரிந்துக்கொள்ள முடியவில்லை. நான் 3 முறை சரியாக ஆடா விட்டால் என்னை யாரும் விமர்சிப்பது இல்லை. ஏனென்றால் எனக்கு 35 வயதுக்கு மேல் ஆகவில்லை.

டோனி 36 வயதிலும் நல்ல உடல் தகுதியுடன் இருக்கிறார். அனைத்து வகையான உடல் தகுதியிலும் தேர்வாகி உள்ளார். அணியின் வெற்றிக்கு ஒவ்வொரு முறையும் அவரது பங்களிப்பு இருந்துள்ளது.

ஆடுகளத்தில் அவரது ஆலோசனை பயனாகிறது. இலங்கை, அவுஸ்திரேலியத் தொடரை பார்த்தால் தெரியும். இந்த தொடரில் டோனியின் பட்டிங் நன்றாக இருந்தது.

டோனி எந்த வரிசையில் ஆடுகிறார் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். ஹர்த்திக் பாண்டியா ராஜ்கோட் போட்டியில் வந்தவுடன் வெளியேறினார்.

அப்படி இருக்கும்போது ஒரே ஒரு மனிதரை மட்டும் விமர்சிப்பது ஏன்? அவர் களம் வரும்போதே ரன்ரேட் 8.5 அல்லது 9 ஆக இருந்தது.

இதனால் டோனியை மட்டும் விமர்சனம் செய்வதில் எந்த நியாயமும் இல்லை. அவர் மீதான விமர்சனம் தேவையற்றது.

இவ்வாறு விராட் கோலி கூறியுள்ளார்.

விராட் கோலி ஏற்கனவே தனது பிறந்தநாளின்போதும் எனக்கும், டோனிக்கும் உள்ள நட்புறவை யாரும் அசைக்க முடியாது என்று தெரிவித்து இருந்தார்.

டோனிக்கு முன்னாள் கப்டனும், டெலிவிஷன் வர்ணனையாளருமான கவாஸ்கர் ஆதரவு தெரிவித்து இருந்தார்.

இந்திய அணியின் கப்டன் விராட் கோலி தனது முழு ஆதரவை தெரிவித்துள்ளார். (க)

# இத்தாலி கால்பந்து வீரர் ஆன்ட்ரியோ பிர்லோ ஓய்வு



நியூயோர்க் சிட்டி கிளப்புக்காக ஆடிய ஆன்ட்ரியோ பிர்லோ, கிளப் உள்ளிட்ட அனைத்து வகையிலான கால்பந்து போட்டியில் இருந்தும் ஓய்வு பெறுவதாக நேற்று முன்தினம் அறிவித்தார்.

இத்தாலி கால்பந்து வீரர் ஆன்ட்ரியோ பிர்லோ. 38 வயதான இவர் இத்தாலி அணிக்காக 116 போட்டிகளில் விளையாடி 13 கோல்கள் அடித்துள்ளார். 2006-ம் ஆண்டு உலக கோப்பையை வென்ற இத்தாலி அணியிலும் அங்கம் வகித்தார்.

'பிரி கிக்' அடிப்பதில் வல்லவரான பிர்லோ, தேசிய அணியில் இருந்து விடைபெற்றாலும், கிளப் அளவிலான போட்டிகளில் தொடர்ந்து விளையாடி வந்தார்.

கடைசியாக நியூயோர்க் சிட்டி கிளப்புக்காக ஆடிய ஆன்ட்ரியோ பிர்லோ, கிளப் உள்ளிட்ட அனைத்து வகையிலான கால்பந்து போட்டியில் இருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். (க)

# பளு தூக்கும் போட்டியில் பங்குபெற மலேசியா செல்லும் மாணவிக்கு உதவி



அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பளு தூக்கும் போட்டியில் முல்லைத்தீவு பாண்டியன் குளம் மகா வித்தியாலயம் மாணவி தே.தர்சிகா 44 கிலோகிராம் பிரிவில் 78 கிலோகிராம் பளு தூக்கி தங்கப்பதக்கம்பெற்று இருந்தார். இவர் மலேசியாவில் நடைபெறும் பளு தூக்கும் போட்டியில் பங்குபெற தெரிவான நிலையில் போட்டிக்கு செல்வதற்கான வறுமை நிலையில் இருந்தமையால் உதவி கோரி இருந்தார்.

இந்நிலையில் தெல்லிப்பழை மகாஜன கல்லூரி பழைய மாணவர்கள் விளையாட்டுக் கழகம் ஆகிய கிறாஸ்கொப்பர் அணியின் ஜி.பி.ல். பிரிவினர் பத்தாயிரம் ரூபர்வும், கிறாஸ்கொப்பர் கழக உறுப்பினர் திலகராஜ் ஆசிரியர் ஐயாயிரம் ரூபாவும் சங்கர் ஐயாயிரம் ரூபாவும், மகாஜன கல்லூரி பிரதி அதிபரினால் இரண்டாயிரம் ரூபாவுமாக மொத்தம் இருபத்திரண்டு ஆயிரம் ரூபாய் பணம் குறித்த மாணவிக்கு வழாங்கப்பட்டது.

பாண்டியன் குளம் மாணவிக்கும் மகாஜன கல்லூரிக்கும் கல்லூரி சார்ந்த கழகத்திற்கும் எந்த தொடர்பும் அற்ற நிலையில் முல்லைத்தீவு மாவட்ட செயலக விளையாட்டு பிரிவின் கோரிக்கைக்கு இணங்க வடமாகாணத்தவர் மற்றும் தமிழர் என்ற ரீதியில் மனமுவந்து உதவி அளித்தமை யாவருக்கும் முன் உதாரணம். ஆகும். (க-250)

# ஐ.எஸ்.எல். கால்பந்து தொடக்க விழா சல்மான்கான், கத்ரினா கைப் நடனம்



ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டி எதிர்வரும் 17-ஆம் திகதி தொடங்குகிறது. இதன் தொடக்க விழாவில் ஹிந்தி நடிகர் சல்மான்கான், நடிகை கத்ரினா கைப் ஆகியோர் நடனம் ஆட இருப்பதாக ஐ.எஸ்.எல். நிர்வாகம் தெரிவித்துள்ளது.

4-வது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்து போட்டி வருகிற 17ஆம் திகதி தொடங்கி மார்ச் மாதம் வரை பல்வேறு நகரங்களில் நடைபெறுகிறது. 10 அணிகள் பங்கேற்கும் இந்த தொடரில் 95 ஆட்டங்கள் நடக்கிறது. 17ஆம் திகதி கொச்சி நேரு அரங்கத்தில் நடக்கும் தொடக்க ஆட்டத்தில் கேரளா பிளாஸ்டர்சும், அட்லெ டிகோ டி கொல்கத்தாவும் மோதுகின்றன.

அதற்கு முன்பாக இரவு 7.15 மணிக்கு கோலாகலமான தொடக்க விழா அரங்கேறுகிறது. இதில் ஹிந்தி நடிகர் சல்மான்கான், நடிகை கத்ரினா கைப் ஆகியோர் கலைஞர்களுடன் இணைந்து நடனம் ஆடி ரசிகர்களை குதூகலப்படுத்த இருப்பதாக ஐ.எஸ்.எல். நிர்வாகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# ஆஷஸ் டெஸ்ட் தொடரிலிருந்து ஸ்டீவன் பின் விலகல்



ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் விளையாடுவதற்கான இங்கிலாந்து அணியில் இடம் பெற்றிருந்த வேகப்பந்து வீச்சாளர் ஸ்டீவன் பின், காயம் காரணமாக தொடரில் இருந்து விலகினார்.

5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் விளையாடுவதற்காக இங்கிலாந்து அணி அவுஸ்திரேலியாவுக்கு சென்றுள்ளது. முதலாவது டெஸ்ட் போட்டி வருகிற 23 ஆம் திகதி பிரிஸ் பேனில் தொடங்குகிறது. இதற்கான இங்கிலாந்து அணியில் இடம் பெற்றிருந்த வேகப்பந்து வீச்சாளர் ஸ்டீவன் பின், இடது கால் முட்டியில் காயத்தால் அவதிப்பட்டார். சில தினங்களாக வலிக்கு ஊசி போட்டுக்கொண்டு தொடர்ந்து பயிற்சிமேற் கொண்டார். ஆனாலும் உடல்தகுதி விடயத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் இல்லாததால் ஆஷஸ் தொடரில் இருந்து நேற்றுமுன்தினம் விலகினார்.

அவர் உடனடியாக தாயகம் திரும்புகிறார். அவருக்கு பதிலாக 22 வயதான வேகப்பந்து வீச்சாளர் டாம் குரன் சேர்க்கப்பட்டுள்ளார்.(க)

## ஆறு அத்தியாவசிய...

எண்ணெய் மற்றும் மரக்கறி எண்ணெய ஆகியவற்றின் லீற்றர் ஒன்றுக்கான விலை 25 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதோடு உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் கிலோ கிராம் ஒன்றிற்கு விதிக்கப்பட்டுள்ள சிறப்பு சந்தை வரி 39 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது.

மேலும் பருப்பு ஒரு கிலோ கிராமுக்கு விதிக்கப்பட்டுள்ள சிறப்பு சந்தை வரி 12 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதோடு கருவாட்டுக்காக விதிக்கப்பட்டுள்ள சிறப்பு சந்தை வரி 50 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதாகவும் நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (ம-4)

## இரணைமடு இராணுவ...

களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டிருந்த இராணுவ ஊடகப் பேச்சாளரிடம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தொடர் வலியுறுத்தலின் பேரில், கிளிநொச்சி-இரணைமடுவிலுள்ள இராணுவ முகாம் அகற்ற முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதா என்று வினவப்பட்டது.

இதற்குப் பதிலளித்த மேஜர் ஜெனரல் ரொஜான் செனவிரத்ன,

“இரணைமடு முகாம் அகற்றல் தொடர்பில் பல்வேறு ஊடகங்களிலும், இணையத்தளங்களிலும் தகவல்கள் வெளியாகியிருந்தன. ஆனால் அண்மைய தினங்களில் இவ்வாறு முகாம் அகற்றப்படல் தொடர்பில் எந்தவித நடவடிக்கையும் இடம்பெறவில்லை. இரணைமடுவில் நீர்வழங்கல் திணைக்களத்திற்கு சொந்தமான கட்டிடத்தில் இராணுவ முகாம் அமைந்திருந்தது. அந்தக் கட்டிடம் கடந்த வருடம் ஒக்டோபர் மாதத்தில் திருப்பிக் கொடுக்கப்பட்டது. எனினும் அந்த காணியில் இராணுவத்தினால் புனர்நிர்மாணிக்கப்பட்ட 3 கட்டிடங்கள் இன்னும் காணப்படுகின்றன. இந்த நிலையில் அண்மையில் எந்தவொரு இராணுவ முகாமும் அகற்றப்படவில்லை என பதை தெரிவித்துக் கொள்கின்றேன் என்று கூறினார். (ம-4)

## மாற்று கருத்தை...

போவதாக அறிவித்துள்ளது மாற்றுக் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் நாங்கள் இல்லாவிட்டால் இதுபோன்ற பிரச்சினைகள் ஏற்பட கூடும். நாங்கள் சில விடயங்களில் சொல்வது தான் சரி, செய்வது தான் சரி என்ற எண்ணத்தில் மாற்று கருத்துக்களுக்கு இடம் கொடுக்காமல் இருந்தோமானால் அந்த மாற்று கருத்துக்கள் உள்ளவர்கள் எங்களுக்கு எதிரான நிலையில் தான் இருப்பார்கள். அந்த நிலை தான் தற்போது ஈ.பி.ஆர்.எல்.எவ். இற்கு நடந்துள்ளது.

இதனை நாங்கள் வராது தடுத்திருக்கலாம், என்னுடைய கருத்து என்னவென்றால், அனைத்து கட்சிகளுக்கும் அந்தந்த இடங்களில் சில சில இடங்களை ஒதுக்கி தமிழரசு கட்சிக்கு சில கூடிய இடங்களை ஒதுக்கி அனைவரும் ஒற்றுமையாக தேர்தலை எதிர்நோக்க வேண்டும் என்பது தான் எனது கருத்து என முதலமைச்சர் தெரிவித்துள்ளார். (ம-4)

## யாழில் புதிய மலேரியா...

ஆரம்பத்தில் மன்னார் மாவட்டத்தில் இருந்த மலேரியா அச்சுறுத்தல் தற்போது யாழ். மாவட்டத்திற்கு வந்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் தொடர்பில் நேற்றைய தினம் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இங்கு அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

பருவமழை ஆரம்பித்திருக்கும் நிலையில் டெங்கு காய்ச்சலின் தாக்கம் தீவிரமடைந்திருக்கின்றது. கடந்த வருடத்தை காட்டிலும் இந்த வருடம் அதிகரித்துள்ளது.

கடந்த வருடம் 1,700 பேர் டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருந்தனர். இந்த வருடம் நவம்பர் மாதம் வரையில் சுமார் 4,700 பேர் டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

அதேசமயம் டெங்கு நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டு இருக்கின்றது. மேலும் மலேரியா நுளம்பு பெருக்கம் பல இடங்களில் அவதானிக்கப்பட்டிருக்கின்றது.

ஆரம்பத்தில் மன்னார் மாவட்டத்தில் அவதானிக்கப்பட்ட இந்த மலேரியா நுளம்பு தற்போது யாழ். மாவட்டத்தில் பல இடங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த மலேரியா நுளம்புகள் கிணறு, தண்ணீர் தொட்டிகள், பிளாஸ்டிக் போத்தல்கள் உள்ளிட்ட நுளம்பு பெருக்கத்துக்கு ஏதுவான இடங்களில் அதிகளவில் பெருகி வருகின்றது. இந்நிலையில் நுளம்பு பெருகும் சாத்தியங்கள் உள்ள பொதுமக்களின் கிணறுகளில் சுகாதார திணைக்களத்தின் ஊடாக மீன் குஞ்சுகள் விடப்படுகின்றன.

மக்களின் பாவனையில் இல்லாத கிணறுகளுக்கு மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றது. எனவே இந்த விடயத்தில் பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியமாக உள்ளது.

உதாரணமாக மலேரியா நுளம்பு களை கட்டுப்படுத்துவதற்கான மீன் குஞ்சுகளை சுலபமாக பெற முடியாதுள்ளது. எனவே அந்த மீன் குஞ்சுகள் உள்ளவர்கள் மீன்களை தந்து உதவலாம்.

அதேபோல் நுளம்பு பெருகும் இடங்களை அழித்து நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்தவும் மக்கள் உதவிகளை வழங்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். (ம-4)

## தமிழ் மக்களுக்கான...

இடைக்கால அறிக்கை குறித்த விவாதம், அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் வேண்டுகோளுக்கு இணங்க நேற்று ஐந்தாவது நாளாகவும் அரசியலமைப்பு நிர்ணய சபையில் இடம்பெற்றது.

இவ்விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

இலங்கையில் நடைமுறையில் உள்ள நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குமாறு நாம் ஆரம்பத்திலிருந்து கூறி வருகின்றோம்.

குறிப்பாக கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்திலும் இவ்விடயத்தைக் கூறியிருந்தேன்.

அதன் பின்னர், மத்திய செயற்குழு கூட்டத்தில் பங்கேற்க எனக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

அத்தோடு, வடக்கு மக்களுக்கு அதிகாரங்களை வழங்குவதில் எமக்கு எந்தவித பிரச்சினைகளும் கிடையாது. அம் மக்களுக்கு கிடைக்கவேண்டிய விடயங்கள் கிடைக்க வேண்டும்.

அவை மக்களுக்கு கிடைக்க வேண்டுமே தவிர, அரசியல் கட்சிகளுக்கு கிடைக்கக் கூடாதென்றே நாம் கூறி வருகின்றோம்.

எவ்வாறெனினும், அதிகாரமோ சமஷ்டியையோ அம்மக்கள் கேட்கவில்லை.

அவர்களுடைய சொந்த நிலங்களை மீளக கையளிக்கமாறும் பொருளாதாரத்தை மேம்படுத்துமாறே கோருகின்றனர்.

இவற்றை வைத்து நோக்கும்போது, புதிய அரசியல் யாப்பானது, இலங்கை மக்களுக்கு நன்மை பயப்பதாக இல்லை. அது சர்வதேசத்தின் தேவைக்காகவே கொண்டுவரப்படவுள்ளது என்றார். (ம-4)

## த.வி.கூட்டணி...

யிட தீர்மானித்துள்ளது. இதற்கமைய வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்குமான தேர்தலில் உதயசூரியன் சின்னத்தில் தமது வேட்பாளர்கள் களமிறங்கவுள்ளதாக கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்த சங்கரி தெரிவித்தார். (ம-4)

## அரசு தரும் அதிகாரங்கள்...

சமஷ்டி முறையிலான அரசியல் யாப்பு தான் தமிழ் மக்களுக்கு போதுமான உரித்துக்களை தர முடியும். ஒற்றையாட்சியின் கீழ் என்னதான் தந்தாலும், அதன் கீழ் பெரும்பான்மை மக்களுடைய அதிகாரமே மேலோங்கி நிற்கும், அந்த அதிகாரத்தின் மூலமாக எமக்கு தருவதையும் திருப்பி எடுக்கப்படகூடிய பழைய நிலை ஏற்படும், எனினும் குறித்த அதிகாரங்கள் திருப்பி எடுக்கப்பட மாட்டாது என சிலர் கூறுகின்றார்கள். ஆனால் மேலதிகாரம் யார் கைவசம் இருக்கின்றதோ அவர்களால் தான் எதனையும் செய்ய முடியும். இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பதினெட்டு வருடங்களாக வடக்கு கிழக்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் இணைத்து வைத்திருந்தார்கள். ஆனால் ஏதோ ஒரு காரணத்தை முன்வைத்து உச்ச நீதிமன்றம் வடக்கையும் கிழக்கையும் பிரித்து விட்டது. இவ்வாறு ஒற்றையாட்சியின் கீழ் தருவதை சட்டப்படி திருப்பி எடுத்துவிட முடியும் என தனது கருத்துக்கு மேற்கோள் ஒன்றையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். முதலமைச்சருடைய அலுவலகத்தில் ஊடகவியலாளர்கள் சந்தித்து இடைக்கால அறிக்கை தொடர்பில் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரசு தங்களால் என்ன தர முடியுமோ அதனை தான் தரவுள்ளார்கள். எங்களை பொறுத்தவரையில் இந்த பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்பதே. பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்றால், பிரச்சினைக்கான காரணம் அறியப்பட்டு அதற்கேற்ப தீர்வை முன்வைக்கப்பட வேண்டும். வெறுமனே இவ்வளவு தான் தரலாம் என்று கூறிகொண்டு இருந்தால், பிரச்சினைக்கு தீர்வாக அமையாது. அரசு தற்போது தமிழ் மக்களுக்கு தருவதாக கூறுவது காணவே காணாது. ஆனால் அரசு தற்போது தருவதாக கூறுவதை தரட்டும், அது அவர்களின் கடப்பாடு, ஆனால் எங்களை பொறுத்தவரையில் எங்கள் பிரச்சினைகள் என்ன? அவற்றுக்கான தீர்வு என்ன என்பது தொடர்பில் நாங்கள் தெளிவாக இருக்கின்றோம்.

சமஷ்டி முறையிலான அரசியல் யாப்பு தான் எங்களுக்கு போதுமான உரித்துக்களை தர முடியும் என்பது எமது அவதானம், ஒற்றையாட்சியின் கீழ் என்னதான் தந்தாலும், அந்த ஒற்றையாட்சியின் கீழ் பெரும்பான்மை மக்களுடைய அதிகாரம் மேலோங்கி நிற்கும், அந்த அதிகாரத்தின் மூலமாக தருவதையும் திருப்பி எடுக்கப்பட கூடிய நிலை ஏற்படும், எனினும் குறித்த அதிகாரங்கள் திருப்பி எடுக்கப்பட மாட்டாது என சிலர் கூறுகின்றார்கள். ஆனால் மேலதிகாரம் யார் கைவசம் இருக்கின்றதோ அவர்களால் தான் எதனையும் செய்ய முடியும்.

உதாரணமாக பதினெட்டு வருடங்களாக வடக்கு கிழக்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் இணைத்து வைத்திருந்தார்கள். ஆனால் ஏதோ ஒரு காரணத்தை முன்வைத்து உச்ச நீதிமன்றம் வடக்கையும் கிழக்கையும் பிரித்து விட்டது. இவ்வாறு ஒற்றையாட்சியின் கீழ் தருவதை சட்டப்படி திருப்பி எடுத்துவிட முடியும். இதன் காரணத்தால் தான் ஏனைய நாடுகளில் இருப்பது போல் சமஷ்டி முறையை கோருகின்றோம். ஒவ்வொரு இனங்களுக்கும் சமஷ்டி அலகுகளை கொடுத்து எவரும் மற்றவருடைய அதிகாரத்திற்குள் தலையிட முடியாத நிலையை ஏற்படுத்தினால் இந்த நாட்டை அனைவரும் சேர்ந்து நடாத்த முடியும்.

நாட்டை பிரிக்க வேண்டும் என்று நாம் எப்போதும் கேட்கவில்லை. சமஷ்டியை கொண்ட நாடுகள் பிரிவினையை கோரவில்லை. அண்மையில் கனடாவில் பிரெஞ்சு மொழி பேசும் கியூபெக் கனடாவிலிருந்து பிரிய தேவையில்லை. எங்களுக்கு பிரிவதற்கு பிரியம் இல்லை என்று கூறியுள்ளனர். இதே போன்று தான் ஸ்கொட்லாந்தும் கூறியுள்ளது. ஆகவே எங்களுக்கு தர வேண்டியவற்றை தந்தால் நாங்கள் பிரிந்து செல்ல வேண்டிய அவசியம் இல்லை. இவற்றை வைத்து கொண்டு இடைக்கால அறிக்கையை பார்க்க வேண்டும். இந்த விதத்தில் இடைக்கால அறிக்கை பல குறைபாடுகளை கொண்டுள்ளது. ஏக்கிய இராட்சிய என்றால் ஒற்றையாட்சியை தான் குறிக்கின்றது என முதலமைச்சர் மீள்வும் தெரிவித்தார். (ம-4)

# அரசியல் கைதிகளின் விடுதலைக்காக தொடர்ச்சியாக போராடுவோம்

## மாணவர் ஒன்றியம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக யாழ்.பல்கலைகழக மாணவர்கள் தொடர்ச்சியாக போராட்டங்களை முன்னெடுப்பார்கள் என தெரிவித்துள்ள யாழ்.பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றிய தலைவர் கிருஸ்ணமேனன், மாணவர்களாகிய தாமே அவர்களுக்காக போராட தொடங்கியிருக்கும் நிலையில் மக்களும் அரசியல்வாதிகளும் இவ்விடயத்தில் பின்னிப்பது ஏன் எனவும் கேள்வியெழுப்பியுள்ளார்

யாழ். ஊடக அமையத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்ட விடயத்தை தெரிவித்திருந்தார். இந்நிலையில் இவ் விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

அநுராதபுரத்தில் உண்ணாவிரத்தில் ஈடுபட்டிருந்த மூன்று தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக யாழ்.பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் நடத்தியிருந்த நிர்வாக முடக்கல் போராட்டத்தினால் யாழ்.பல்கலைக்கழகத்தின் 3 பீடங்களின் மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குள் நுழைவத ற்கு நிர்வாகத்தால் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இருந்த போதிலும் மாணவர்களாகிய நாம அதனை பொருட்படுத்தாது எமது போராட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்து தமிழ அரசியல் கைதிகளின் கோரிக்கைகளுக்கு வலுச்சேர்ந்திருந்தோம். அதன்பின்னர் மாணவர்களாகிய நாம் அவர்களுடைய போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்போம் என்ற உறுதிமொழிக்கு ஏற்ப அரசியல் கைதிகள் தமது உண்ணாவிரத போராட்டத்தை இடைநிறுத்தியுள்ளனர்.

இதனை தொடர்ந்து நாமும் எமது நிர்வாக முடக்கல் போராட்டத்தை கைவிடுவதாக அறிவித்துள்ள நிலையில் பல்கலைக்கழகத்தின் தடையானது எதிர்வரும் 12ஆம் திகதி நீக்கப்பட்டு கற்றல் செயற்பாடுகள் 13ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இந்நிலையில் நாம் அவ் அரசியல் கைதிகளின் வழக்கை மீள வவுனியா நீதிமன்றத்துக்கு மாற்றும் வரை தொடர்ச்சியாக போராட்டங்களை முன்னெடுப்போம்.

ஆனால் இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படும் போராட்டங்கள் மாணவர்களது கற்றல் செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படுததாத வகையில் அரசுக்கு அழுத்தம் கொடுக கூடிய போராட்டங்களை தொடர்ச்சியாக நாம் முன்னெடுப்போம். இது தொடர்பாக பல்கலைக் கழகத்தின் கற்றல் செயற்பாடுகள் ஆரம்பமாகிய பின்னர் அனைத்து மாணவர்களுடனும் கலந்துரையாடி எவ்வாறான போராட்டங்களை முன்னெடுப்பது என்பது தொடர்பாக நாம் தீர்மானிப்போம் என அவர் தெரிவித்தார்(ம-4)

## பட்ஜெட்...

மாதம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறவுள்ளமையால் தேர்தலை இலக்கு வைத்து விலைக்குறைப்பு சலுகைகள் மானியங்களை உள்ளடக்கியதாக இந்த நிதி அறிக்கை இருக்கும் என்று எதிர்வு கூறப்படுகின்றது. (ம-4)

## அவதானமாக இருக்க...

விடுத்துள்ளார்.

தற்போது இடைநிலைப் பருவப் பெயர்ச்சிக் காலநிலை ஆரம்பமாகியுள்ளது. இந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் வளிமண்டலத்தில் ஏற்பட்ட குழப்பம் காரணமாகப் பெருமளவு மழை வீழ்ச்சி கிடைக்கப்பெற்றுள்ளது.

இடைநிலைப் பருவப் பெயர்ச்சிக் காலநிலை காரணமாக எதிர்வரும் நாட்களில் பிற்பகல் 02 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை எதிர்பார்க்கப்படுகின்றது.

இடி, மின்னலுடன் கூடிய மழை வீழ்ச்சி நிலவுகின்ற சந்தர்ப்பங்களில் காற்றின் வேகம் அதிகரித்துக் காணப்படும். எனவே, பொது மக்கள் இடி, மின்னல் தாக்கங்களினால் ஏற்படும் இழப்புக்களைக் குறைப்பதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் கடல் கொந்தளிப்புடன் காணப்படும் என்பதால் கடற்தொழிலாளர்கள் அவதானமாகச் செயற்படுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன், எதிர்வரும் டிசம்பர் மாதம் வரை தற்போதைய இடைநிலைப் பருவப் பெயர்ச்சிக் காலநிலை தொடரும். அதன் பின்னர் வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காலநிலை ஆரம்பமாகும்.

இந்தக் காலப் பகுதியிலும் மழை வீழ்ச்சி கிடைக்கக் கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-4)

## பேருந்தின் மீது...

ஒன்றின் மீது குண்டுத் தாக்குதல் நடத்தி 30 பேரின் உயிரிழப்புக்கு காரணமானார் என்ற குற்றத்துக்கு முன்னாள் போராளிக்கு ஆயுள் தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது.

2007ஆம் ஆண்டு ஏப்ரல் 25ஆம் திகதி இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்த மான பேருந்து ஒன்றின் மீதே இவ்வாறு குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது 30 பேர் உயிரிழந்ததோடு 42 பேர்வரை காயமடைந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கின் விசாரணைகள் நிறைவடைந்த நிலையில் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க தீர்ப்பை நேற்று அறிவித்தார்.

குற்றவாளியாக இனங்காணப்பட்ட அவருக்கு ஆயுள்தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார். (ம-4)

## மைத்திரி - ரணில்...

வராக தமது கதைகளை கூற இணங்கினர். அவர்களின் மார்பு, இடுப்பு, கால்களில் வடுக்கள் காணப்பட்டன. அசோசியேட்ட் பிரஸ், 32 மருத்துவ மற்றும் உளவியல் மதிப்பீடுகளை ஆய்வு செய்ததுடன், 20 பேரை நேர்காணல் செய்தது.

உள்நாட்டுப் போரில் தோல்வியடைந்த தரப்பில் ஒரு போராளிக் குழுவை மீண்டும் உருவாக்க முயற்சிப்பதாக தம்மீது குற்றம் சாட்டப்பட்டதாக அவர்கள் கூறினர்.

8 ஆண்டுகளுக்கு முன் போர் முடிவுக்கு வந்த போதிலும், 2016 தொடக்கத்தில் இருந்து இந்த ஆண்டின் ஜூலை வரை சித்திரவதைகளும் மீறல்களும் இடம்பெற்றுள்ளன. எனினும் அரச அதிகாரிகள் இந்தக் குற்றச்சாட்டுகளை நிராகரித்தனர்.

கடந்த 40 ஆண்டுகளாக உலகில் மோசமான நாடுகளில் சித்திரவதைகளில் இருந்து தப்பி வந்தவர்களை நேர்காணல் செய்த பியர்ஸ் பிகோ என்ற தென்னாபிரிக்க மனித உரிமைகள் விசாரணையாளர், தாம் இதற்கு முன்னர் கேள்விப்பட்டிராத மிருகத்தனமான சித்திரவதைகள் இடம்பெற்றிருப்பதாக கூறுகிறார்.

இலங்கை அதிகாரிகளின் பாலியல் மீறல்கள் நிலைத்திருப்பது மிகவும் அதிர்ச்சியாகவும், இதற்கு முன்னர் பார்த்திராததாகவும் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பெரும்பாலான ஆண்கள் கண்கள் கட்டப்பட்ட நிலையில், தடுப்பு முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டதாக கூறினர். தம்மை சிறைபிடித்தவர்கள் பெரும்பாலானோர் குற்றப்புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று அடையாளப்படுத்தியதாக அவர்கள் தெரிவித்தனர்.

சிலர், தம்மைக் கைது செய்து விசாரித்தவர்கள் படையினரும் என்று, அவர்கள் அணிந்திருந்த சீருடைகள் மற்றும் முத்திரைப் பட்டிகளின் அடிப்படையில் கூறுகின்றனர். ஒருவர், உடைகளுடன் இராணுவ சீருடைகளும் தொங்கியதாகவும், பலர் இராணுவ சப்பாத்துகளை அணிந்திருந்தனர் என்றும் கூறியுள்ளார்.

எனினும், கடந்தவாரம் கொழும்பில் செவ்வி ஒன்றை அளித்த இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஸ் சேனநாயக்க, சித்திரவதைக் குற்றச்சாட்டுகளை நிராகரித்தார்.

இராணுவம் தொடர்புபடவில்லை. இந்த விடயத்தைப் பொறுத்தவரையில், பொலிஸாரும் தொடர்புபடவில்லை என்று என்னால உறுதியாக கூற முடியும். இப்போது அதனைச் செய்வதற்கு எமக்கு எந்தக் காரணமும் இல்லை என்றும் அவர் கூறினார்.

பொலிஸ் திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சர் சாகல, சித்திரவதைகளை கடந்த மாதம் ஒப்புக்கொண்டார். எனினும் அதனை அவர் பின்பற்றவில்லை.

இலங்கையில் பரந்தளவிலான சித்திரவதைகள் இன்னமும் அதன் பாதுகாப்புப் படைகளால் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுவதாக கூறப்படும் குற்றச்சாட்டுகள் மறுக்கப்பட்டாலும், 26 ஆண்டுகால உள்நாட்டு போரில், வெளிவந்த போர்க்குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதில் இலங்கை தோல்வியடைந்துள்ளது.

சித்திரவதை செய்யப்பட்ட 52 ஆண்கள் பற்றிய அசோசியேட்டட் பிரசின் கணக்கு குறித்து ஐ.நா மனித உரிமை ஆணையாளர் செயிட் ராட் அல் ஹூசேன், கரிசனை கொண்டுள்ளார்.

ஐ.நா விசாரணையை முன்னெடுக்கும் வரை இதனை உறுதிப்படுத்த முடியவில்லை என்றாலும், தெளிவான இந்த அறிக்கைகள் கொடூரமானவையாக இருப்பதுடன், 2016-2017 காலப்பகுதியில் இவை நடந்திருந்தால் எமது பக்கம் மிகவும் நெருக்கமாக ஆய்வு செய்யப்பட வேண்டியதாகவும் இருக்கிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

தமது அடையாளங்களை வெளிப்படுத்தாமல் பாதுகாப்பதாக உறுதியளிக்கப்பட்ட பின்னர் தான் இவர்கள் தமது கதைகளை கூற இணங்கினர். தாயகத்தில் உள்ள தமது உறவினர்கள் பழிவாங்கப்படலாம் என்று அவர்கள் அஞ்சுகின்றனர் என்று அசோசியேட்டட் பிரஸ் கூறுகின்றது. (ம-4)

## இராமநாதபுரத்தில்...

மகேஷ் வெலிகன்னவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கி வரும் போதைப்பொருள் மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் படைப் பிரிவுப் பொலிஸார் தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவுக்குட்பட்ட இராமநாதபுரம் கிராமத்தில் உள்ள வீடு ஒன்றின் சுவாமிபட அறையினுள் வைத்து சட்ட விரோதமான முறையில் கசிப்புக் காய்ச்சிக் கொண்டிருந்த 40 வயதுடைய குடும்பப் பெண் ஒருவரை 20 லீற்றர் கசிப்புடன் கைது செய்துள்ளதாக கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று புதன்கிழமை பிற்பகல 3.45 மணியளவில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் விசேட உத்தரவுக்கு அமைய தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் விசேட ஊர்சுற்றுக்காவல் கடமையில் ஈடுபட்டிருந்த கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான போதைப் பொருள் தடுப்பு மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் பொலிஸ் அணியினர் இராமநாதபுரம் கிராமத்தில் உள்ள வீடு ஒன்றில் சட்ட விரோதமான முறையில் கசிப்பு வடிக்கப்படுவதாக கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு சென்று சோதனையிட்ட போது, சுவாமிப்பட அறையினுள் மிக நுட்பமான முறையில் சுடுதண்ணீர் சூடாக்கும் கீற்றர்கள் 03யை ஒன்றிணைந்து கசிப்புக் காய்ச்சிக் கொண்டிருந்த குடும்பப் பெண்ணை காய்ச்சப்பட்ட 20 லீற்றர் கசிப்புடனும், கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்களுடன் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களையும் கைதான சந்தேக நபரையும் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைகளுக்காகவும் அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்குமாக ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-15)

## பெற்றோல் பிரச்சி...

ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரவை துணைப்பேச்சாளர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்பட்டுள்ள எரிபொருள் கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. இன்றையதினம் கொழும்பு பிரதேசத்திற்கான பெற்றோல் விநியோகம் இடம்பெறவுள்ளதுடன் ஏனைய பிரதேசங்களுக்கான பெற்றோல் நெருக்கடியும் தீர்ந்துவிடும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-4)


### சிறுநீரகம் தேவை

34 வயதுடைய ஆண் ஒருவருக்கு O+ / O- இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை. தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 0764838467 (1261)

### வீட்டு வேலைக்கு ஆள்தேவை

சாவகச்சேரியில் உள்ள வீட்டில் வயது முதிர்ந்த அம்மா ஒருவரை பராமரிப்பதற்கு பெண் வேலையாள் ஒருவரை எதிர்பார்க்கின்றோம்.

தொடர்பு: 0771789683

### வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

அமெரிக்க லொத்தர் விசா (Green Card) முடிவடைய இன்னும் சில நாட்களே உள்ளன. உடனடியாக எம்மிடம் பதிவுகளை மேற்கொண்டு இவ் வாய்ப்பினை பெற்றிடுங்கள்

அண்ணா பொதிகள் சேவை

976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம் (C-288)


021 221 5656 070 330 5500

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்

யாழ்ப்பாணம் | வேலணை | ஊர்காவத்துறை | சாவகச்சேரி | மீசாலை | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா

### விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- கார்கோ சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு துக்கப்பரிசு மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு (C-221)



UK-550/=Kg

மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்


DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS- 0768226240

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை


### அமெரிக்க லொத்தர் விசா

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்



18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.

இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு



இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறலாம்

இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

இன்னும் ஒரு நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன.

0768226243

பெரும்பாலும் அடுத்த வருடம் இந்த இலவச வீசா வாய்ப்புக்கள் இருக்காது. ஆகவே இப்போதே முந்துங்கள்.

அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

கொட்டும் மழையிலும் குழந்தைகளுடனான சிரமத்தினையும் பாராது நானும் எனது மனைவியும் V2 TRAVELS இல் அமெரிக்கா லொத்தர் விசாவிற்கு பதிவு செய்தோம். கைமேல் பலனாக இன்று குடும்பத்துடன் அமெரிக்காவில் இருக்கிறோம். திறமையாக பதிவுசெய்த V2 TRAVELS க்கு நன்றிகள்.

2016 ல் எமக்கூடாக 51 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்

குடும்பத்தினருக்கு இரண்டு விசா சந்தர்ப்பங்கள்



வே.கமலேந்திரன் -குடும்பம்

அமெரிக்கா விசா வெற்றியாளர்

இறுதி சந்தர்ப்பம் உடனே விரையுங்கள்

V2 TRAVELS

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | சாவகச்சேரி | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
|---|---|---|---|---|---|
| #49A, சப்பல் லேன் | A9 வீதி, பழைய ஆஸ்பத்திரிக்கு அருகே | 10, பேருந்து நிலையம் | மூடக்காட்டு சந்தி | 324, யாழ் பிரதான வீதி | யாழ் வீதி, வல்வெட்டி |
| 0768226241 | 0768226240 | 0768226242 | 0776699892 | 0768226230 | 0776697960 |

### மணிவிழா வாழ்த்து

திருமதி குககுமாரி விஜயரகுநாதன்

(M.Ed, M.Phil)

(அதிபர் -யா/ நல்லூர் தெற்கு ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயம்)




கல்விப் பணிக்கு தன்னலமற்ற சேவையாற்றி இன்று அகவை அறுபதை நிறைவு செய்து ஓய்வுபெறும் யா/ நல்லூர் தெற்கு ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் திருமதி குககுமாரி விஜயரகுநாதன் அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(வி-337)

- அதிபர் சங்கம், நல்லூர் கோட்டம்


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.11.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.